






ஸ்ரீ:



# चित्रसार:

[ஸ்ரீ கவிதார்க்கிகஸிம்ஹ,
ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர, வேதாந்தாசார்ய, வேங்கடநாதார்யரின்
ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்துக்குச் சுருக்கு]

நெல்வாய் நைத்ருவ மாடபூஷி ஸௌம்யநாராயணாசார்யர்

2009



## அட்டைப்பட விளக்கம்

நல்லறிவின் மூலமான வேதத்தின் பொருளைச் சுருக்கிச் சொல்வது 'உபநிஷத்துக்கள்'; இவற்றின் உட்கருத்தைக் மையமாகக்கொண்டவை, 'மூன்று மந்த்ரங்கள்'. **மூலமந்த்ரம், சரம ச்லோகம், த்வயம்** என்ற இம்முப்பெரும் மந்திரங்களே "ரஹஸ்யத்ரயங்கள்" என வழங்கப்படுகின்றன. இவற்றின் ஸாரத்தை – உட்கருத்தை – "ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார" க்ரந்தத்தின் மூலமாகக் கூறுவதே, ஸ்வாமி தேசிகனின் உத்தேசயம்.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தை சித்திரமாக சித்தரிக்க முனைந்த இந்நூலான "சித்ரஸார" ஆசிரியரால், அட்டைப்படத்தில் "மந்த்ரங்களை விளக்கும் முன், मन्त्र प्रतिपाद्य देवता- मन्त्रप्रदातावான ஆசார்யர்- मन्त्रं ஆகிய மூன்றையும் அநுஸந்திக்க வேணும்" என்கிற க்ரமத்தைக் குறிப்பதாக மூன்று தனி வட்டங்களால், மூன்றும் நமஸ்காரம் செய்யப்படுகின்றன.

மேலும், வேதம்-உபநிஷத்-மந்த்ரம்-அவற்றின் ஸாரம் என்ற இந்நான்கும் 'வட்டத்துக்குள் வட்ட/உருவமாக' குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள், எட்டெழுத்துகொண்டதான மூலமந்த்ரம், **'எண் கோணத்தாலும்'** ; கண்ணனின் கட்டளையான சரமச்லோகம், **'உபதேச-முத்திரையாலும்'** ; அநுஷ்டான க்ரமத்தைச் சொல்லும் 6 பதங்களைக்கொண்ட த்வயம், **'அறுகோணத்தாலும்'** உருவகப்படுத்தப் பட்டிருக்கின்றன. அதோடு, உபாயபரமான த்வயத்தின் பூர்வ கண்டம் **உள் வட்டமாக**வும், முடிவில்லா புருஷார்த்தத்தை விளக்கும் உத்தர கண்டம் எல்லையில்லா **வெளி வட்டமாக**வும் குறிக்கப்பட்டுள்ளது.

இன்னும், ஸ்வரூபத்தை விளக்கும் மூலமந்த்ரமும், உபாயத்தை விதிக்கும் சரம ச்லோகமும், முடிந்தவைகளாகையால், **முழு** வட்டங்களாலும்; '*போக்*யமான' த்வயம், உபாயத்தை அநுஷ்டிக்கும் போதும் / தொடர்ந்து எப்போதும் அநுஸந்திக்கப்படுவதாய் (द्वयं अर्थानुसन्धानेन सह सदैवं वक्ता . . ) இருப்பதால், 'முடிவு பெறாத வட்டமாயும்' சித்தரிக்கப்பட்டுள்ளன.

க்ரந்தத்தின் தனியன் ஒன்றில் 'त्रिस्रोतसं अकल्मषाम्' (முப்பெருக்குடைய – ஸ்வர்கம், பூமி, பாதாளம் என மூன்று விதமாகப் பெருகும் - புனித கங்கை) என மூன்று மந்த்ரங்களையும் மூன்று தாரையாக உவமைப்படுத்தியிருப்பது, அட்டைப்படத்தில் தனி வட்டத்தோடு சேர்க்கும் **மூன்று கோடுகளால்** குறிக்கப்பட்டுள்ளது.

श्री:

श्रीमते रामानुजाय नम:

श्रीमते निगमान्त महादेशिकाय नम:

## விண்ணப்பம்

**ஆ**சார்ய ஸார்வபௌமரான ஸ்வாமி தேசிகன் ஸர்வோபஜீவ்யமாக ஸாதித்த க்ரந்தங்களில் தலை சிறந்தது "ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்" ஆகும் என்பது ஸாத்விகர்களின் ஒருமித்த கருத்து. தெளியாத மறைநிலங்கள் தெளிவதற்கு, ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகள் எவ்வாறு உபகாரகமாக அமைந்தனவோ, அவ்வண்ணமே ஸ்ரீபாஷ்யாதி விஷயங்களில் விசேஷ நிலங்கள் தெளிவதற்கு, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் பரிசயம் அவர்ஜநீயம் என ஆன்றோர் சொல்லக் கேட்டோம்.

**ஸ்**வாமி தேசிகனை எம்பெருமானுக்கும், அவரிடத்தில்நின்றும் உண்டான 'ரஹஸ்யத்ரய ஸாரம்' என்ற மூன்று (தத்வம்-ஹிதம்-புருஷார்த்தம் *அல்லது* அஷ்டாக்ஷரம்-த்வயம்-சரம *ச்*லோகம் என்ற) தாரைகளைக்கொண்ட ஸ்ரீஸூக்தியை, முப்பெருக்குடைய (ஸ்வர்கம்-பூமி-பாதாளம் என ஓடும்) புனித கங்கைக்கு உவமைப்படுத்தியும்; "ரஹஸ்யத்ரயஸாரமாம் ப்ரஹ்மத்தை அறிந்தோம் என்பவர் அறிவிலிகள்; அறியோம் என்பவரே அறிந்தவர்" என்றும் க்ரந்தத்தின் தனியன்களில் பூர்வர்கள் அநுபவிக்கின்றனர். ஆக, இக் க்ரந்தத்தின் விஷயங்களை விவரித்தும் மாளாது; சுருக்கிச் சொல்லினும் சுவை குன்றாது. अणोरणीयान् महतोमहीयान् எனஆரணம் அருளியது இக்க்ரந்தத்தையும் கருத்தில் வைத்தோ!

**ஸ்**வாமியின் *சைலியோ*, மூலக்ரந்தத்தில் தத்துவங்களை (concepts) 'ப்ரமாண-த்ருஷ்டாந்த-உதாஹரண-ஆக்ஷேப-ஸமாதானங்களுடன் ஸாதித்திருப்பதே'. நாமோ, ப்ரமாணாதிகளில் புத்தியைச் செலுத்தி 'ப்ரமேய ஸித்தியை' இழக்கும் இளநெஞ்சராயும்; மிகச்சுருக்கமாகத் தத்துவங்களைமட்டும் அறிய ஆசைகொண்ட, 'உரித்த வாழைப்பழம் நாடுபவராயும்' இருக்கிறோம். இத்தினவைத் தணிக்க, ஆசார்ய க்ருபையை அவலம்பித்து எடுத்த ப்ரயத்நமே இந்த **சித்ர ஸாரம்**. இதில், மூலக்ரந்தத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் தெளிவித்த **தத்துவங்கள் மட்டும்**, வரைபடங்கள்-அட்டவணை போன்றவை மூலம் சுருக்கமாக சித்தரிக்கப்பட்டுள்ளன.

**ஆ**துனிக ஆஸ்திகர்களுக்கு, இது ஒரு ஆரம்பமாக அமையாதோ என்று நப்பாசை; அதே ஸமயத்தில், கற்றோர்கள் இதை கச்சிதமான கையேடாகக் கருதுவரேல், ஸ்வாமி தேசிகனுக்கு (இப்பதிப்பின் கயைசியில் ஓதப்பட்ட ஸ்ரீ திருக்குடந்தை தேசிகன் அருளிச்செய்த) ஸ்ரீ வேதாந்த தேசிக திவ்ய ஸஹஸ்ர நாமாவளியால் புஷ்பாஞ்ஜலி செய்து, க்ருதார்த்தனாகும் . . . .

श्रीमतां श्री रङ्गरामानुज महादेशिकानां अङ्घ्रिराजीव रज:कणமும்,

गोष्ठीपुरं श्री रामानुजार्य महादेशिक-दिव्य-कटाक्ष-लब्धवाனுமான,

ஸௌம்யநாராயண தாஸ:




ஸ்ரீமந் நாராயணன்

# ஸ்ரீஸார ஸந்மார்க்க ஸோபாநம்

(ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார ஆத்யந்த ச்லோகங்களின் பகுதிகளால் கட்டப்பட்டது)



## ஸ்ரீஸார ஸந்மார்க்க ஸோபாநம்

(ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார ஆத்யந்த ச்லோகங்களின் தமிழ் கருத்தால் கட்டப்பட்டது)



SrI:

# FOREWORD

by

'srI nrusimha seva rasikan'

**Oppiliappan Koil SrI VaradAchAri SaThakopan**

(Editor-in-Chief of SrIHayagrIvan eBooks)

---

It is adiyEn's privelege and pleasure to announce the release of the ebook Chitra Saaram in our Sri Hayagrivan series by Nelvai Madabhushi SowmyanarayanAcchAr Swamy of Mumbay.

Swamy is a C.A by profession and is a former General Manger of United India Insurance Co Ltd. He has also held position as a CEO in another corporation.

Nelvay Swamy is the thiruvadi of the revered KozhiyAlam Swamy. He is also the nephew of the legendary GhOshtipuram Swamy and the son in law of Sri Oppili Swamy of DevanAr ViLAgam, the PoorvAsrama brother of the 43rd Pattam Srimath Azhagiya Singar, Sri VaNN SaThakOpa Sri VeerarAghava Yatheendhra MahA Desikan, adiyEn's SamASrayaNa AchAryan.

Sri Nelvai Swamy is a Scholar's scholar. His is a Postgraduate Text book on Srimad Rahasya Traya Saaram and it is an exceptional/extraordinary monograph that can only be created by an Executive, who has heard and made many presentations with his audience in mind. His deep Knowledge about the Saaram of Swamy Desikan's magnificent SrI Sookti via sampradhAyic KaalakshEpam route from SadAcharyaas, His remarkable analytical power to summarize crisply difficult doctrines, His skills to conceptualize the inter-relationships between the abstract doctrines in a flow chart route, His presentation skills using graphic format as the powerful teaching tool have resulted in the creation of a scholarly book by this brilliant and gifted Teacher. He has also provided KaalakshEpam for fifty VidhyArthis over two years on Srimad Rahasya Traya Saaram and has honed/perfected his instructional skills to meet the needs of the students at all levels of Sri BhAshyakArar's Parama Vaidheeka sampradhAyam.

It has been a delight to read this book with a sense of awe for its organizational brilliance which permeates the whole monograph. Certain amount of background knowledge on Rahasyatrayams would be essential to benefit from this book but Swamy has helped a great deal by creating special flow of thought thru tutorials using the power of rich and imaginative graphics. What is amazing about this book is that it has attempted and succeeded in transforming abstruse/abstract doctrines into easily assimilable modules of knowledge through innovative ways of using the power of graphics. As they say, a

picture is worth a thousand words. What is unique here is that his field of coverage is the sacred words of the great AchAryan, Swamy Desikan.

When I reflect on the adept and facile way Nelvay Swamy has handled the presentation graphics as a powerful instructional tool, I am reminded of one of the rapidly growing fields of Computer Science (viz)., Scientific Visualization. In this new field, powerful engines permit the dynamic visualization of the execution of huge software for complex application programs in main-frames. It is accepted that programming is an art and not (yet) a Science. As a result of this, various application programs developed by different programmers to solve the same problem run at different speeds. If one could only visually follow the path of the processing of the assigned task, one can flag the nodes where the program stutters and based on the knowledge gained, the programmer can make "a by pass" or develop a different route for speedier execution of an application program. What Nelvai Swamy has accomplished is a kind of successful adaptation of the power of visualization techniques to a hitherto unattempted area (Viz) study of Vedantam.

It is a pleasure to go through the 32 adhikArams of Srimad Rahasya Traya Saaram with the anjanam of graphics to navigate the ocean of Bhagavad Raamanuja darsanam.The coverage of some of the adhikArams are short and the others are longer. Let me share with you a small subset of impressions from the readings of Chitra Saaram.

- The symbolism captured in the cover of this monograph using open and closed circles, hexagon, squares and octagon to capture the essence of the three rahasyams is a rare intellectual treat.

- The inter-threading of the green padhams to form complete sentences in the ViNNappam section reminds me of the Paasurappadi RaamAyaNam. This is a masterly touch to bring out the Saara sangathy.

- Translation of the Sanskrit titles for different adhikArams into Tamil shows the author's mastery in handling Tamil language (e.g: Artha Panchakam's translation into "adippadayil alarntha aRivu").

- **Saara Nishkarsha adhikAram:** Swamy Desikan has been saluted as "Saaranishkarsha KuSalar". He has instructed us that the Saastrams are like a vast ocean and we should take out of it what is the most quintessential (Saaratamam) and discard the others (asAram, alpa sAram, Saaram. adhika sAram). Srimath RahasyatrayasAram has many vachanams and mantrams about saara vishayams like upAyam and upEyam and yet our AchAryAs have accepted only the three rahsyams as the sAratamam. Sri Nelvay Swamy has distilled here the essence of the Saara Nishkarsha adhikAram in an unparalleled graphical manner to capture the essence of Swamy Desikan's upadEsams on the Saaratamam. Incredible effort has gone into the visualization of the essence of the Saastrams. Swamy Desikan was very concerned about us understanding what is Saaratamam and took a lot of effort to comment on it in His VirOdha ParihAram. Sri Nelvay Swamy has captured graphically these upadEsams in a crisp manner.

- **PradhAna PratitantrAdhikAram:** Swamy Desikan has been revered as "PradhAna pratitantra Vith". This doctrine is unique to Srimath BhAshyakAra SiddhAntam, where PradhAna Paritantra siddhAnta doctrines such as SareerAthma bhAva sambhandham are covered. The three rahsyams help us understand the Phalans of comprehending Sareera-Aatma, Sesha-Seshi sambhandhams.These doctrines are fundamental and unique to our darsnam and are not easily understood unless a SadAchAryan's anugraham befalls on us. The depth of Nelvay Swamy's understanding of these doctrines permits him to visualize these relationships and capture them in a brilliantly intutive manner.

- **Tattva Traya ChintanAdhikAram:** ChEtanam, achEtanam and Iswaran are the Tattva Trayam. A clear understanding of these Tattvams is essential for us to be saved from the vipareetams like SareerAtma bramam, svatantrAtma bramam and NireeSvara vaata ruchi. Concerned about the need for comprehending these tattvams in general and those of the nitya dhravyam of Prakruti in particular, NelvAy Swami has designed another outstanding graphic illustration about the inter-relationship between the 24 achEtana tattvams. Concepts about quintiplication (pancheekaraNam) are developed graphically for us to gain a clear understanding of these tattvams.

- Outstanding use of graphics to summarize the content of AparAdha parihArAdhikaram is an example of similar success with other "tough" adhikArams.

- The summary on Bhagavaan's AakArams, the status of Kruta Krutyan before and after Prapatti, the condensation of ArthAnusASana BhAgam with the use of Swamy Desikan's Kaarikai are other stellar examples of Nelvay's mastery of the subject matter.

In a monograph consisting of just 72 pages, Nelvay Swamy has brought to us the esssence of Srimad Rahasya Traya Saram with multiple chitrams.

It is a delight to read this important addition to commentary on Swamy Desikan's magnum opus and benefit from the thoughtfulness with which it has been prepared.

dAsan,

Oppiliappan Koil VaradAchAri SaThakOpan — 5th April 2009
SrImath Azhagiya Singar Thiruvadi — (Panguni - Ekadasi)

श्री:


| | सारसरणि: | ஸாரத்தின் பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|---|
| | श्री गुरुपरम्परासार: | “நன்றும் தீதும் நமக்கு உரைப்பாரை” நாடிப்பெறுதல் | 1 |
| | **अर्थानुशासन भाग:** | | |
| 1. | उपोद्घाताधिकार: | க்ரந்தத்தின் தலைவாசல் திறப்பு | 6 |
| 2. | सारनिष्कर्षाधिकार: | “எட்டிரண்டெண்ணிய சதிர்க்கும் தனிநிலை” | 7 |
| 3. | प्रधानप्रतितन्त्राधिकार: | “துழாய்முடியான் உடம்பாய் நாம் அடியோம்” என்ற முக்கிய அடிப்படைக் கொள்கை | 8 |
| 4. | अर्थपञ्चकाधिकार: | அடிப்படையில் அலர்ந்த ஐந்தறிவு | 10 |
| 5. | तत्वत्रयचिन्तनाधिकार: | “அரு / உருவானவை” பற்றிய ஆய்வு | 12 |
| 6. | परदेवतापारमार्थ्याधिकार: | “திருமாதுடன் நின்ற புராணன்” | 16 |
| 7. | मुमुक्षुत्वाधिकार: | “வீடினை வேண்டும் பெரும்பயன்” | 17 |
| 8. | अधिकारिविभागाधिकार: | “நீண்டும் குறுகியும் நிற்கும்” நிலைகளை ஏற்பவர் | 19 |
| 9. | उपायविभागाधिकार: | “பழமறையின் பரம நெறி” | 20 |
| 10. | प्रपत्तियोग्याधिकार: | “அனன்னியராய் வந்து அடையும் வகை” | 22 |
| 11. | परिकरविभागाधिकार: | “துணையாம் பரனை வரிக்கும் வகை” | 23 |
| 12. | साङ्गप्रपदनाधिकार: | “அறமே பரமென்று அடைக்கலம் வைத்தமை” | 25 |
| 13. | कृतकृत्याधिकार: | “வேள்வியனைத்தும் முடித்தமை” | 26 |
| 14. | स्वनिष्ठाभिज्ञानाधिकार: | “மூன்றில் நிலையுடைமை” | 25 |
| 15. | उत्तरकृत्याधिकार: | “கடன்கள் கழற்றிய” அடிமை | 27 |
| 16. | पुरुषार्थकाष्ठाधिकार: | “நல்லடியார்க்கு ஆதரம் மிக்க அடிமை” | 28 |
| 17. | शास्त्रीयनियमनाधिकार: | “மேதினியில் இருப்பது விதியினாலே” | 30 |
| 18. | अपराधपरिहाराधिकार: | “மாளாத வினை அனைத்தும் மாளும் வகை” | 32 |
| 19. | स्थानविशेषाधिकार: | “வானாடுகந்தவர் வையத்திருப்பிடம் நன்நிலம்” | 34 |
| 20. | निर्याणाधिकार: | “உடலச்சிறை வெட்டிவிட்டு வழிப்படுத்தும் வகை” | 35 |
| 21. | गतिचिन्तनाधिकार: | “வானேறும் வழி கண்டோம்” | 37 |
| 22. | परिपूर्णब्रह्मानुभवाधिकार: | “அந்தமிலாப்பேரின்பம் அருந்துதல்” / “குருக்கள் குரைகழற்கீழ் மகிழ்ந்தெழும் போகத்து மன்னுதல்” | 38 |
| | **स्थिरीकरण भाग:** | | |
| 23. | सिद्धोपायशोधनाधिकार: | “திருநாரணனே மன்னிய வன்சரண்” | 40 |
| 24. | साध्योपायशोधनाधिकार: | “வரிக்கின்றனன் குறியொன்றால்” | 44 |
| 25. | प्रभावव्यवस्थाधिकार: | அடியார் ஆதரத்தில் “ஆரண நீதிநெறி குலையாமை” | 48 |
| 26. | प्रभावरक्षाधिकार: | “தண்மை கிடக்க தரம்” உள்ளமை | 49 |

| सारसरणि: | | ஸாரத்தின் பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|---|
| पदवाक्ययोजना भाग: | | | |
| 27. | मूलमन्त्राधिकार: | "நன்மனு ஓதினம்" | 50 |
| 28. | द्वयाधिकार: | "திருமால் பாதமிரண்டும் சரணெனப்பற்றி, அடிமை" கொள்ளுதல் | 55 |
| 29. | चरमश्लोकाधिकार: | "மன்னருள் வாசகத்தால் மருளற்றமை" | 57 |
| संप्रदायप्रक्रिया भाग: | | | |
| 30. | आचार्यकृत्याधिकार: | "அருளுற்ற சிந்தையினால் அழியா விளக்கேற்றினர்" | 62 |
| 31. | शिष्यकृत्याधिकार: | "இருளனைத்தும் மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு" | 63 |
| 32. | निगमनाधिकार: | "நிலைகள் தானுளனாய் உகக்கும் தரம்" | 64 |

| | |
|---|---|
| ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயத்ரயஸார விஷய கர்ப்பமான தேசிக நாமாவளி | 65 |




श्री:

**இந்நூலின் அதிகாரங்களாம் முப்பத்து மூன்றும் ஒரே விஷயத்தைச் சொல்லும் தொடர்க்கோவையே என்று காட்டும் सारसङ्गति:**

( கீழ்க்கண்ட வாக்யங்களின் **பச்சைப் பதங்களை** மட்டும் சேர்த்துப் படித்தால், இக்க்ரந்தத்தின் கோர்வையான பொருள் கிடைப்பது, ரஸிக்கத்தகுந்தது )

**& & & & &**

यच्छ्रेयस्स्यान्निश्चितं ब्रूहि तन्मे शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम् என அர்ஜுநன் வேண்டிய கணக்கிலே, பயனை விழைவோர் ஆசார்யரை அணுகவேண்டியதன் அவச்யத்தை விளக்குவது **श्री गुरुपरम्परासार:**

1.அவர் கடாக்ஷத்தால் "மூன்றினுள்ளம் நாளும் உகக்கப்பெறுவதே" இக்கரந்த்த்தின் பயன் என விளக்குகிறது - - - - **उपोद्घाताधिकार:**

2.ஆசார்யரிடம் கற்கும் கல்விகள் பலவாயினும், "எட்டிரண்டெண்ணுவதே சதிர்க்கும் தனிநிலை" என்கிறது - - - - **सारनिष्कर्षाधिकार:**

3.இம்மூன்றில் முக்கியமாம் மூலமந்த்ரம், 'முதல்வனுக்கு இவ்வுலகு உடல்' -எனத்தெளிவிக்கும் என்கிறது - - - - - **प्रधानप्रतितन्त्राधिकार:**

4.இம்முக்கியத்தைச் சார்ந்ததான ஐந்தறிவு புகட்டி நிற்கிறது - **अर्थपञ्चकाधिकार:**

5.இவ்வைந்தில் 'உடம்பில் கொடு மோஹம் கெட' உதவும் முத்தத்துவத்தை விளக்கி நிற்கிறது - - - - - **तत्वत्रयचिन्तनाधिकार:**

6.இத்தத்துவம் மூன்றில் 'திருமாதுடன்நின்ற புராணனே' புகல்/ பயன் என்கிறது **परदेवतापारमार्थ्याधिकार:**

7.இவ்வளவான அறிவால், 'எனக்குரியன், எனது பரம், என்பேறென்னாது' அஞ்சிறைக்கு அஞ்சி 'பெரும் பயன் வீடினை வேண்டுபவர்' முமுக்ஷு என விளக்கமளிக்கிறது - **मुमुक्षुत्वाधिकार:**

8.இவ்விதம் 'வீடு' வேண்டும் தகுதியுடையோர், **செய்யும்** பக்தி அல்லது ப்ரபத்திதான் இருவகையாய் நின்றபோதிலும், அவர்கள் உடலை விட்டபின் பெறும்பேறு ஒரே வகைதான் என விவரிக்கிறது - - - - - **अधिकारिविभागाधिकार:**

9.இவ்வதிகாரிகள் அநுஷ்டிக்கவேண்டிய மோக்ஷோபாயங்கள், பக்தி/ப்ரபத்தியாய் இருவகை என விளக்கும் - - - - - **उपायविभागाधिकार:**

10.இவ்விரு உபாயங்களுக்குள், ப்ரபத்தி செய்யத் தகுதியை 15 வகையாய் எடுத்து, இத்தகுதியொழிய 'ஜாதி / ஆச்ரமம்' போன்ற வேறு தகுதியேதும் வேண்டாது, அனைத்துலகும் வந்தடைய உரியது என தேர்ந்தளிக்கிறது - - - - **प्रपत्तियोग्याधिकार:**

11.செய்ய விழையும் ப்ரபத்தியின் அங்கங்களை விளக்கி நிற்கிறது - **परिकरविभागाधिकार:**

12.இப்ப்ரபத்திக்கு அங்கி, பரம் அறுத்து 'பரமனுக்கு மிக்க அடிமை' என்ற நினைப்பே என்கிறது - - - - **साङ्गप्रपदनाधिकार:**

13.இப்படி ப்ரபத்தி செய்வதற்கு முன் 'சோகமுற்றவனாய்', செய்தபின் 'சோகமற்றவனாய்' – வேள்வி அனைத்தும் முடித்து நிற்கும் நிலையை அறிவிக்கிறது - - कृतकृत्याधिकार:

14.இந்நிலையில் நிஷ்டையுடன் இருப்பதை அறியும்படியையும், அப்படிப்பட்டவர்கள் 'மேதினி மேவிய விண்ணவர்' எனவும் விவரிக்கிறது - - - स्वनिष्ठाभिज्ञानाधिकार:

15.மேதினியில் இருக்குமளவும், பகவத்-ஆஜ்ஞா-அனுஜ்ஞா கைங்கர்யங்களை சங்கிலி துவக்குபோல் உகந்து செய்துவரவேண்டும் என்கிறது - - उत्तरकृत्याधिकार:

16.இக்கைங்கர்யங்களை பாகவதர்கள் **வரையில்** செய்ய ப்ராப்தம் என்கிறது पुरुषार्थकाष्ठाधिकार:

17.இப்படி, பகவத்-பாகவத கைங்கர்யங்களை *சாஸ்த்ரப்படியே* செய்துவரச் சொல்கிறது

- - - - - शास्त्रीयनियमनाधिकार:

18.இவ்வாறு எஞ்சிய காலத்தைக் கழிக்கும் ப்ரபந்நனுக்கு, ப்ராரப்த-கர்மவி*சேஷ*த்தினால் அறியாமலோ/ ஆபத்தில் அறிந்தோ செய்யும் பாபங்கள் ஒட்டாது; அநாபத்தில் அறிந்து செய்பவை, ப்ராய*ச்*சித்தம் செய்வதாலோ/ சிறு-தண்டனை அனுபவித்தோ கழியும் என்பதைக் கூறுகிறது अपराधपरिहाराधिकार:

19.இப்படி எஞ்சிய காலத்தைக் கழிக்க, வர்ண-தர்மங்கள் நிலைத்திருப்பதாய் / பாகவதர்கள் வஸிப்ப தாய் உள்ள இடமே ஏற்றது என்கிறது - - स्थानविशेषाधिकार:

20.இப்படி வர்த்திக்கும் ப்ரபந்நனுக்கு, *சரீ*ரம்விழக் குறித்த ஸமயம் வந்தவாறே, எம்பெருமான் தன்னைப் பற்றிய கடைசி நினைவை உண்டாக்கி, ஜீவனை ஸ்தூலசரீரத்தைவிட்டு ப்ரஹ்மநாடி வழியாக அர்ச்சி ராதி மார்க்கத்தில் புறப்படச் செய்கிறான் என்கிறது - - निर्याणाधिकार:

21.இப்படிப் புறப்பட்ட ஜீவனை, எம்பெருமான் போகங்கள் பல அனுபவிக்கச்செய்து, விரஜா நதியைக் கடத்துவித்து, அப்ராக்ருதமான ராஜோபசாரங்களைப் பண்ணுவித்து, அழகோலத்திலே நித்ய-முக்தர்க ளோடு புரையப் பரிமாறும்படி செய்விக்கிறான் என்கிறது - गतिविशेषाधिकार:

22. இவ்விதம் இந்த ஜீவன், தேசவி*சே*ஷத்தை அடைந்து எல்ல தேச-கால-நிலைகளிலும் எம்பெருமா னுக்கு கைங்கர்யம் செய்துகொண்டு, முழுமையான பேரின்பத்தை, மாறுதலின்றி அநுபவித்துக் கொண்டே இருப்பான் என்கிறது - - - परिपूर्णब्रह्मानुभवाधिकार:

23.**மேலே** இதுவரை விவரித்த விஷயங்களில் – குறிப்பாக ஸித்தோபாயமான எம்பெருமான் ஸ்வாதந்த்ர்யம்/ கருணை/ சேஷித்வம்/ லக்ஷ்மீ ஸஹிதத்வம் ஆகிய குணங்கள் பற்றிய கலக்கங்களுக்கு ஸமாதாநம் சொல்லி - அறிந்த ஜ்ஞானத்தையும் ஸ்திரப்படுத்துகிறது - सिद्धोपायशोधनाधिकार:

24.பக்தி-ப்ரபத்தியாகிற ஸாத்யோபாயங்களைப்பற்றிய அதிகாரம்/ ஸ்வரூபம்/ பரிகரங்கள் பற்றிய கலக்கங்களைப் போக்கி, அறிந்த ஜ்ஞானத்தை**யும்** ஸ்திரப்படுத்துகிறது - साध्योपायशोधनाधिकार:

25. साध्योपायங்களின் **प्रभावத்தை வரையறுத்து**க் கூறுகிறது - प्रभावव्यवस्थाधिकार:

26. साध्योपायங்களின் प्रभावத்தை रक्षिக்கிறது - - प्रभावरक्षाधिकार:

27. அடுத்து अष्टाक्षरத்தின் पद-वाक्य योजனைகளை விவரிக்கிறது - मूलमन्त्राधिकार:

28. द्वयத்தின் पद-वाक्य योजனைகளை விவரிக்கிறது - - द्वयाधिकार:

29. चरमश्लोकத்தின் पद-वाक्य योजனைகளை விவரிக்கிறது - - चरमश्लोकाधिकार:

30. கடைசியாக आचार्यர்களின் செயல்பாட்டைச் சொல்கிறது - आचार्यकृत्याधिकार:

31. சிஷ்யர்களின் கடமையைக் குறிப்பிட்ட சொல்கிறது - - शिष्यकृत्याधिकार:

32. ग्रन्थத்தை फलश्रुतिயுடன் தலைக்கட்டுகிறது - - निगमनाधिकार:

( இதுவரை குறிப்பிட்ட **பச்சைப் பதங்கள்** மட்டும் எடுத்தால் இவ்வாறு வாக்யங்களாக அமைவதைக் காணலாம் :

⇔ **ஆ**சார்யரை அணுக, அவர் கடாக்ஷத்தால் கற்கும் மூலமந்த்ரம், ஐந்தறிவு புகட்டி, இவ்வைந்தில் முத்தத்துவத்தை விளக்கி, இத்தத்துவம் மூன்றில், புராணனே புகல்/ பயன் என்கிறது.

⇔ வீடினை வேண்டுபவர் **செய்யும்** பக்தி அல்லது ப்ரபத்திதான், மோக்ஷோபாயங்கள். ப்ரபத்தி செய்ய அனைத்துலகும் உரியது என அங்கங்களை விளக்கி, பரமனுக்கு அடிமை என்ற நினைப்பே அங்கி என்கிறது.

⇔ இப்படி வேள்விமுடித்து நிஷ்டையுடன், மேதினியில் இருக்குமளவும் கைங்கர்யங்களை பாகவதர்கள்**வரையில்,** *சாஸ்த்ரப்படியே* செய்து காலத்தைக்கழிக்கும் ப்ரபந்நனுக்கு பாபங்கள் கழியும்.

⇔ காலத்தைக் கழிக்க, பாகவதர்கள் வஸிப்பதாய் உள்ள இடமே ஏற்றது.

⇔ *சரீ*ரம்விழ, எம்பெருமான் ஜீவனை அர்ச்சிராதி மார்க்கத்தில் புறப்படச் செய்கிறான்.

⇔ புறப்பட்ட ஜீவனை விரஜா நதியைக் கடத்துவித்து, அழகோலத்திலே நித்ய-முக்தர்களோடு புரையப் பரிமாறும்படி செய்விக்கிறான்.

⇔ ஜீவன், தேசவிசேஷத்தை அடைந்து எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்துகொண்டு, முழுமையான பேரின்பத்தை அநுபவித்துக் கொண்டே இருப்பான்.

⇔ **மேலே,** ஸித்தோபாயமான எம்பெருமான் பற்றிய அறிந்த ஜ்ஞானத்தையும், ஸாத்யோ - பாயங்களைப்பற்றிய அறிந்த ஜ்ஞானத்தை**யும்** ஸ்திரப்படுத்துகிறது.

⇔ साध्योपाय प्रभावத்தை வரையறுத்து / रक्षिக்கிறது.

⇔ அடுத்து अष्टाक्षर- द्वय- चरमश्लोकத்தின் पद-वाक्य योजனைகளை விவரிக்கிறது.

⇔ **கடைசியாக आचार्य / சிஷ்யர்களின் கடமையைக் குறிப்பிட்டு, ग्रन्थத்தை फलश्रुतिயுடன் தலைக்கட்டுகிறது.**

## ग्रन्थத்தில் கையாண்ட சில पदங்களின் लक्षणம்

प्रधानप्रतितन्त्राधिकार:

द्रव्यं - என்பது, चेतनं/ अचेतनं/ ईश्वरன் என்ற பிரிவையுடைய அந்த வஸ்துவே.

अद्रव्यं – என்பது, द्रव्यத்தின் (குணம் போன்ற) தன்மை/ பண்புகள்.

सत्ता – स्वरूपம் என்றும் சொல்லப்படுவது; வஸ்துவின் प्रथम क्षण संबन्धத்தைச் சொல்வது.

स्थिति: - வஸ்துவின் उत्तरोत्तर क्षण संबन्धத்தைச் சொல்வது.

प्रवृत्ति: - द्रव्यத்தின் செயல்.

धर्मं – द्रव्यத்தின் அடையாளம் / லக்ஷணம்.

धर्मि – धर्मத்தை உடைய द्रव्यं

स्वरूपनिरूपक धर्मं – எந்த धर्मं அறியப்படாவிட்டால், धर्मिस्वरूपமே அறியமுடியாதோ, அது.

निरूपित स्वरूप विशेषणं – எந்த धर्मं, धर्मिस्वरूपத்தை, மற்றவைகளைவிட வேறாகத் தெரிவிக்கிறதோ

आत्मा – ஒருद्रव्यத்துக்கு எக்காலத்திலும்/ எந்த நிலையிலும் धारकனாய் नियन्ताவாய் शेषिயாயிருக்கை.

शरीरं – ஒரு சேனநனுக்கு, எக்காலத்திலும்/ எந்த நிலையிலும் आधेयமாய் विधेयமாய் शेषமாய் இருக்கை.

तत्वत्रयचिन्तनाधिकार:

अचेतनत्वं – ज्ञानத்துக்கு आश्रयமாய், பிறர்க்கே தோன்றுவதாய் இருப்பது.

चेतनत्वं – ज्ञानத்தை உடையதாயிருக்கை.

ज्ञानत्वं – தன்னுடையவோ/ வேறொன்றினுடையவோ இருக்கையை அறியச் செய்கை.

जडत्वं – स्वयंप्रकाशं அற்றிருக்கை

स्वयंप्रकाशत्वं – தான் தெரியும்படி, வேறொரு ज्ञानத்தின் உதவியின்றியும், ப்ரகாசிப்பது.

प्रत्यक्त्वं – தனக்கு, தான் தன் गुणादिகளோடு தோற்றுகை.

विषयित्वं – தன்னை ஒழிந்ததொன்றைக் காட்டுதல்.

आत्मवर्ग लक्षणं - चेतनत्वமும் प्रत्यक्त्वமும்

ईश्वर लक्षणं - विभुत्वेसति/ स्वामित्वेसति चेतनत्वादिகள்

जीव लक्षणं – अणुत्वेसति/ शेषत्वेसति चेतनत्वादिகள்

अचेतन लक्षणं – ज्ञानाश्रयமன்றிக்கே (மற்றவர்க்கே தோன்றக்கடவனவாக) இருக்கை.

प्रपत्तियोग्याधिकार:

अधिकार: - फलத்திலும் उपायத்திலும் இழிபவனுக்கு फलத்தில் अर्थित्वமும் उपायத்தில் सामर्थ्यமும்

फलं – अधिकारமுடையவனுக்கு प्रयोजनமாய் அடையப்படுவதாக இருப்பது.

अर्थित्वं – அடையவேண்டுமென்ற ஆசை.

उपायं – फलத்தை அடைய செய்யவேண்டியதாக विधिக்கப்பட்டது.

सामर्थ्यं – शास्त्रத்தை அறிகை/ அறிந்தபடி अनुष्ठिக்க வல்லனாகை/ शास्त्रानुमत जाति-गुणादिகள் உடைமை

आकिञ्चन्यं – வேறொரு உபாயத்தை (उपासनத்தை) செய்வதில் सामर्थ्यமில்லாமை.

अनन्यगतित्वं – (மோக்ஷத்தைத் தவிர்த்து) வேறு **பலனை** நாடாமை/ தான் விரும்பும் பலனையடைய வேறு **தெய்வத்தை** நாடாமை.

श्री:

श्रीमद् रहस्यत्रयसार:

<u>தனியன்கள்</u>

श्रीमान् वेङ्कटनाथार्य: कवितार्किक केसरी । वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

रामानुजदयापात्रं ज्ञानवैराग्य भूषणम् । श्रीमद् वेङ्कटनाथार्यं वन्दे वेदान्त देशिकम् ॥

*சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்*
*பாரொன்றச் சொன்ன பழமொழியுள் – ஓரொன்று*
*தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு*
*வானேறப் போமளவும் வாழ்வு*

विगाहे निगमान्तार्य विष्णुपाद समुद्भवाम् । रहस्यत्रयसाराख्यां त्रिस्रोतसं अकल्मषाम् ॥

अविज्ञातं विजानतां विज्ञातं अविजानताम् । रहस्यत्रयसाराख्यं परं ब्रह्मास्तु मे हृदि ॥

श्री:

नमो रामानुजार्याय सौम्यमूर्ति सुसूनवे ।
विचित्र **चित्रसारोऽयं** यस्यानुग्रह वारिजा ॥

அவதாரிகை

वेदे सञ्जात खेदे मुनिजनवचने प्राप्त नित्यावमाने, सङ्कीर्णे सर्ववर्णे सतितदनुगुणे निष्प्रमाणे पुराणे ।

मायावादे समोदे कलिकलुषवशात् शून्यवादे विवादे, धर्मत्राणाय योऽभूत् सजयतु भगवान्विष्णु घण्टावतार:॥

आचार्य सर्वभौमனான स्वामि देशिकன் காலத்தில், कलिயின் प्रभावத்தினால் वेदं மிகவும் दु:खம் அடைந்திருந்தது. ऋषिகளின் वचनங்கள் மதிக்கப்படவில்லை. वर्णங்கள் சுருக்கமடைந்திருந்தன. पुराणங்கள் प्रमाणங்களாக ஒப்புக்கொள்ளப்படவில்லை. मायावादம், शून्यवादம் இவைகள் தலை தூக்கியிருந்தன. இந்த நிலையில் श्रिय:पतिயான எம்பெருமான் धर्मத்தைக் காப்பாற்றவும், நிலை நாட்டவும் கருதி, தானே தூப்புல் வள்ளலாய் அவதரித்து, श्रीमद् रहस्यत्रयसारமென்னும் இந்த महाप्रबन्धத்தை அருளிச்செய்தான்.

**महाप्रबन्धத்தின் अवतारம் :**

ஸ்ரீ எம்பெருமானார் காலம் வரையில் रहस्यार्थங்கள் कालक्षेप रूपமாகத்தான் उपदेशिக்கப்பட்டு வந்தன. பின்னர், மற்ற மதத்தினரும், श्रीरामानुज सम्प्रदायத்தைச் சேர்ந்த ஒருசில பிரிவினரும், எம்பெருமானார் திருவுள்ளத்துக்கு ஒவ்வாததாகவும் – विरुद्धமாகவும் व्याख्यानங்களை ग्रन्थமாகச் செய்த படியால், அவற்றை செப்பனிட/கண்டிக்கவேண்டி स्वामि देशिकன், இந்த ग्रन्थத்தை அருளினார். இது, எல்லோரும் அனுபவிக்கும்படியான எளிய மணிப்ரவாள நடையில் अष्टाक्षर-द्वय-चरमश्लोकமென்னும் மூன்று மந்த்ரங்களின் ஸாரத்தை விவரிப்பதாக அமைந்துள்ளது.

**ग्रन्थத்தின் ஏற்றம் :**

वेदान्त सारतमங்களான रहस्यங்களின் अर्थம் விவரிக்கப்படுவதாலும், स्मृति-इतिहास-पुराणादिகள் प्रमाणங்களாக उदाहரிக்கப்படுவதாலும், இந்த ग्रन्थத்துக்கு वेदம் போன்ற எல்லா शास्त्रங்களோடு சேர்த்தி யுண்டு. மேலும். अङ्गங்களோடுகூடிய भक्ति योगத்தை प्रधानமாகச் சொல்கிற सूत्र भाष्यங்களைக் காட்டிலும், எளிதான प्रपत्तियின் स्वरूपादिகளைச் சொல்லுவதால், இந்த ग्रन्थம் எல்லோராலும் கைக் கொள்ளத்தக்கது. இத்தோடு, ஒவ்வொரு श्रीवैष्णवனும் अवश्यं कालक्षेपம் பண்ணவேண்டிய ग्रन्थ चतुष्टयத்தில் मुख्यமானதுமாகும்.

**व्याख्यानங்கள் :**

प्राचीनமான ஐந்து व्याख्यानங்கள் இதற்கு உண்டு. பிறகு, ஸ்ரீமத் கரூர் ஸ்வாமி, ஸ்ரீமத் சேட்லூர் ஸ்வாமி, ஸ்ரீமத் இஞ்சிமேட்டு அழகியசிங்கர், ஸ்ரீமத் உத்தமூர் ஸ்வாமி முதலானோர் व्याख्यानமும் இன்னும், எளிய தமிழில் ஸ்ரீமத் வில்லிவலம் அழகியசிங்கர், ஸ்ரீமத் நவநீதம் ஸ்ரீராம தேசிகாசார்யர் போன்ற ஆசார்யர்கள் அருளிய விவரணங்களும் உண்டு.

**ग्रन्थத்தின் அமைப்பு :**

இதன் 32 अधिकारங்கள் அடங்கிய 4 भागங்களும் அவைகளின் பொருளடக்கமும் :

| भागம் | अधिकारங்கள் | பொருளடக்கம் |
|---|---|---|
| अर्थानुशासनम् | 22 | तत्व-हित-पुरुषार्थ / चित्-अचित्-ईश्वर विवरणम् |
| स्थिरीकरणम् | 4 | முன்னதின் शङ्कैகளுக்கு परिहारமும், விவரத்தை நிலைநாட்டலும் |
| पदवाक्ययोजना | 3 | மூன்று ரஹஸ்யங்களின் விளக்கம் |
| सम्प्रदाय प्रक्रिया | 3 | आचार्य-शिष्यனின் கடமைகளும் ग्रन्थத்தைத் தலைக்கட்டலும் |

மேலும், ஒவ்வொரு अधिकारமும் – முதலில் श्लोकरूपமாக கீழே சொன்ன विषयம், மேலே சொல்லப்போகும் विषयம், பிறகு அந்தந்த अधिकारத்தின் विषयம், அதற்கு प्रमाणங்களாக स्मृति-इतिहास-संस्कृत दिव्यसूक्तिகள், ஆழ்வாராதிகளின் அருளிச்செயல்கள், சுருக்கமாக ஒரு தமிழ்ப்பாட்டு, கடைசியில் சுருக்கமாக ஒரு श्लोकம் என்கிற – क्रमத்திலேயே அமைந்துள்ளது.



ஸ்ரீமத் பரகால மட ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவர் மற்றும் டோலை கிருஷ்ணன்

*श्री गुरुपरम्परासार:*

## "நன்றும் தீதும் நமக்கு உரைப்பாரை" நாடிப்பெறுதல்

ஶ்ரீ:

गुरुभ्य: तद्गुरुभ्यश्च नमो वाकमधीमहे । वृणीमहे च तत्राद्यौ दम्पती जगतां पती ॥

*நன்றும்/ தீதும் உரைப்பார் யார் ?* எம்பெருமானும்/ அவன்தன் அவதாரமேயான, நம் ஸம்ப்ரதாய ஆசார்யர்களும்.

*ஏன் நாடவேண்டும் ?* ஏனெனில், ஆசார்யன் உபதேசித்த வித்யைதான், நிலைக்கும்.

*நாடிப்பெற, ப்ரமாணம் என்ன?*

1. விதியுள்ளது; ஆக **நித்ய**மாகிறது
2. ப்ராயச்சித்தமாகிறது; ஆக **நைமித்திக**மாகிறது
3. ஜ்ஞான ஸாதனமாகிறது; ஆக **காம்ய**மாகிறது

*எவர்க்குத் தேவை?* பாபியான க்ஷத்ரபந்துவாகிலும் / புண்ணியனான புண்டரீகனே ஆகிலும்;

*எதற்குத் தேவை?* மோக்ஷோபாயமறிய; செய்து எல்லையில்லா ப்ரஹ்மானந்தம் அநுபவிக்க;

*பெற்று, இனிச் செய்வது*

1. ஆசார்யர்களைப் போற்றுவது
2. அவர் உபதேசித்த மந்த்ரங்களை மறைத்துக் காப்பது.

*எம்பெருமான் பரமாசார்யனாவது எப்படி ?*

-ஹம்ஸ/ மத்ஸ்ய/ ஹயக்ரீவ/ நாராயண/ கீதாசார்யனாக அவதரித்து

-வ்யாஸாதிகள், ஆழ்வார்களை அநுப்ரவேசித்து

-ஸநகாதி(ஜீவர்)களை நியமித்து

-ஸநக, ஆழ்வாராதிகளுக்கு அருளால் உபதேசித்து

வேதாந்த ஸம்ப்ரதாயம் தொடர்ந்து வரும்படிக்கு எம்பெருமான் செய்யும் உபகாரங்கள் :-

1. தானே ப்ரஹ்மாவுக்கு வேதங்களை உபதேசித்தல்
2. ப்ரஹ்மாவிடமிருந்து மதுகைடபர்களால் அபஹரிக்கப்பட்ட வேதங்களை மீட்டல்
3. ப்ரஹ்மா மூலம் ஶாஸ்த்ர ப்ரவசனம் செய்வித்தல்
4. ஸநத்குமாரர்களுக்கு ஜ்ஞானம் கொடுத்து, அவர்கள் மூலம் ஶாஸ்த்ர ப்ரவசனம் செய்வித்தல்
5. நாரதர்-பராஶர்-ஶுகர்-ஶௌநகர் மூலம் ஶாஸ்த்ர ப்ரவசனம் தொடரச்செய்தல்
6. வ்யாஸரை அநுப்ரவேசித்து, ப்ரஹ்ம ஸூத்ரம்/ மஹாபாரதம் அருளச்செய்வித்தல்
7. தானே ஹம்ஸ, மத்ஸ்ய, ஹயக்ரீவ, நாராயண, கீதாசார்யனாக அவதரித்து உபதேசித்தல்
8. அறிவில் சிறந்த பீஷ்மர் முதலோரையிட்டு ஶாஸ்த்ரங்களை மூதலிப்பித்தல்
9. தானே அருளிய ஶ்ரீ பாஞ்சராத்ரத்தை, ஸங்கர்ஷணனாக த்வாபரத்தில் வெளியிடுதல்
10. பராங்குஶ-பரகாலாதி அபிநவ தஶாவதாரம் செய்து தமிழ்மறை அருளச்செய்வித்தல்
11. பாஷண்டிகளிடமிருந்து ஸம்ப்ரதாயத்தைக் காக்க அவ்வப்போது ஆசார்யர்களாக அவதரித்துக்கொண்டேயிருத்தல் . . . .

## நம் வேதாந்த ஸம்ப்ரதாய குருபரம்பரை

எம்பெருமான்

பெரிய பிராட்டி

ஸேனை முதலியார்

நம்மாழ்வார் (மதுரகவிகள் முதலாக உண்டான ஸம்ப்ரதாய பரம்பரையாலும்; திருவாய்மொழி முகத்தாலும்; யோக தசையிலே ஸாக்ஷாத்க்ருதராயும்)

| [ ஆசார்யர்கள் | அவரை ஆச்ரயித்தவர்கள் | ஆசார்யர் அருளிய க்ரந்தங்கள்] |
|---|---|---|
| **ஸ்ரீமந்நாதமுனிகள்** | உய்யக்கொண்டார் முதல் எண்மர் | 1.ந்யாய தத்வம் 2.யோக ரஹஸ்யம் |
| உய்யக்கொண்டார் | மணக்கால் நம்பி முதலான ஐவர் | |
| மணக்கால் நம்பி | ஆளவந்தார் முதலான ஐவர் | |
| ஆளவந்தார் | பெரியநம்பி முதலான பதினைவர் | 1.ஆகம ப்ராமாண்யம் 2.புருஷ நிர்ணயம் 3.ஆத்ம ஸித்தி 4.ஈச்வர சித்தி 5.ஸம்வித் ஸித்தி 6.கீதார்த்த ஸங்க்ரஹம் 7.ஸ்தோத்ரம் 8.சதுச்ச்லோகீ |
| பெரியநம்பி | எம்பெருமானார் முதலான அறுவர் | |
| எம்பெருமானார் | ஆச்ரயித்த முதலிகள் அநேகம் | 1.ஸ்ரீ பாஷ்யம் 2.வேதாந்த தீபம் 3.வேதாந்த ஸாரம் 4.வேதார்த்த ஸங்க்ரஹம் 5.கீதா பாஷ்யம் 6.சரணாகதி கத்யம் 7.ஸ்ரீரங்க கத்யம் 8.வைகுண்ட கத்யம் 9.நித்யம் |

திருமடைப்பள்ளி ஆச்சான்

கிடாம்பி ராமானுஜப்பிள்ளான்

கிடாம்பி ரங்கராஜாசார்யர்

அப்புள்ளார்

ஸ்வாமி தேசிகன்

[அருளிய க்ரந்தங்கள் 117 ]

## விசேஷ விஷயங்கள்

1.குருபக்தி உடையவர்க்கே ஞானம் உண்டாகும். ஆசார்யன் எல்லோர்க்கும் ஒன்றுபோல் உபதேசிக்கும் போதிலும் *சி*ஷ்யர்களுக்குள் ஞானத்தில் தாரதம்யம் இருப்பதற்கு, குருபக்தியில் ஏற்றத்தாழ்வே காரணம்.

2. வருவது விசாரியாதே *சி*ஷ்யனுக்கு உபதேசித்தால், ஆசார்யனின் நிஷ்டை குலையும்.

3.குரு என்றால் பரம குருக்களையும்/ ஸாமான்யமான குருக்களையும் குறிக்கும்

4.மந்த்ரம் என்றால் மந்த்ரார்த்தங்களான ரஹஸ்யங்களையும் குறிக்கும்.

5.மந்த்ர/ மந்த்ரார்த்தங்களை, உபதேசிக்கும்போதும்/ உபதேசம் பெறும்போதும், எம்பெருமான் தொடங்கி தம் ஆசார்யர்வரை "இறங்கு முகமாகவும்"; மந்த்ரார்த்தங்களை விமர்சிக்கும்போது, ஆசார்யர் தொடங்கி எம்பெருமான் வரையில் "ஏறுமுகமாகவும்", குரு பரம்பரா-பஜனம் செய்வது வழக்கம்.



ஆசார்ய தேவோ பவ

**(இடமிருந்து வலமாக:** ப்ரக்ருதம் ஸ்ரீமத் பரவாக்கோட்டை ஆண்டவன் ஸ்வாமி (ஸ்ரீ பௌண்டரீகபுரம் ஆண்டவன் ஆச்ரமம்), ப்ரக்ருதம் ஸ்ரீமத் ஸ்ரீரங்கப்ரிய மஹாதேசிகன் ஸ்வாமி (ஸ்ரீ அஷ்டாங்க விக்யான மந்திரம்), ப்ரக்ருதம் ஸ்ரீமத் அபிநவ ரங்கநாத ப்ரஹ்மதந்த்ர ஸ்வாமி (ஸ்ரீ பரகால மடம்), ப்ரக்ருதம் ஸ்ரீமதழகிய சிங்கர் ஸ்வாமி (ஸ்ரீமதஹோபில மடம்))



ஆசார்ய தேவோ பவ

ப்ரக்ருதம் ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் ஸ்வாமி

(ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம், ஸ்ரீரங்கம்)




ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்

திருவஹீந்திரபுரம்

# 1. उपोद्घाताधिकार:

## *க்ரந்தத்தின் தலைவாசல் திறப்பு*

**आभगवत्त: प्रथितां अनघां आचार्य सन्ततिं वन्दे । मनसि मम यत्प्रसादात् वसति रहस्यत्रयस्य सारोऽयम् ॥**

*__நாம்__ ஏன் ரஹஸ்யத்ரயத்தை அப்யஸிக்க வேண்டும் ?*

-"*நாம்*" எனக்குறிக்கப்படும் ஜீவாத்மா, *சரீ*ரத்தைவிட வேறுபட்டவன்; பரமாத்மாவுக்கு, கௌஸ்துப ரத்நம்போல் மிகவும் இனியவன்/ குமாரன் / *சி*ஷ்யன் / ப்ரேஷ்யன் / *சே*ஷபூதன் / தாஸபூதன்;

-ஸ்வரூபத்தால், எம்பெருமானுக்கும்-பிராட்டிக்கும் எல்லா இடங்களிலும்/ காலங்களிலும்/ நிலைகளுக்கு ஏற்றவாறும் கைங்கர்யங்களை, நித்யஸூரிகள்போல் தானும்செய்ய இட்டுப்பிறந்துவைத்தவன்; ஆனால் ஸ்திதியில், அநாதி மாயையாலே ப்ரக்ருதி ஸம்பந்தத்தை அடைந்து, இப்போது தத்வ-ஹித விஷயங்களில் அறிவு இழந்த நிலையில் நிற்கிறான்.

*நாம் __ஏன்__ ரஹஸ்யத்ரயத்தை அப்யஸிக்க வேண்டும் ?*

இப்போது அறிவிழந்து நிற்பதை உணர்ந்து, அந்நிலை மாறி ஸ்வரூபஞானம் பெற;

*நாம் ஏன் __ரஹஸ்யத்ரயத்தை__ அப்யஸிக்க வேண்டும் ?*

இந்த ரஹஸ்யங்களில், எம்பெருமானைப்பற்றியும்/ நம்மைப்பற்றியும்/ எம்பெருமானுக்கும்-நமக்கும் உள்ள உறவைப்பற்றியும் அவச்யம் அறிந்துகொள்ளவேண்டிய :

1.எம்பெருமான்-அவனைச் சேர்ந்தவைகள், இவற்றின் தன்மை/ நிலைமை / உறவு;

2. ஸுக-துக்க அனுபவம் /மோக்ஷானுபவம்;

3. மோக்ஷாநுபவம் பெற வழிகளும் / அவற்றின் முறைகளும்;

4. மோக்ஷாநுபவத்தைப் பெறவிடாமல் தடுக்கும் விரோதிகள்;

ஆகிய **அர்த்த பஞ்சகங்க**ளும் சொல்லப்படுவதால்.

*நாம் ஏன் ரஹஸ்யத்ரயத்தை __அப்யஸிக்க__ வேண்டும் ?*

-அப்யஸிப்பது என்பது, ஸத்ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்தங்களை ஆசார்யன் மூலம் உபதே*சி*க்கப் பெறுகை; இப்படிப் பெற்ற வித்யைதான் பயனுள்ளதாக ஆகும்.

-ஆசார்யர்கள்தான், (கன்றுக்குப்பாலூட்டும் பசுபோல்) நமக்கு மிகுதி-குறைவற / தெரியாமை-ஐயம்-திரிபு இன்றி. அப்யாஸம் செய்விப்பார்கள்.

**விசேஷ விஷயங்கள் :**

1.ஆசார்ய-அனுக்ரஹத்தினால்தான், நம் மனதில் 'ரஹஸ்யத்ரயத்தின் ஸாரம்' நன்கு நிலைத்து நிற்கும்;

2.இப்படி ஆசார்யனைப் பெறுவதற்குக் காரணம் : எம்பெருமானின் நல்லெண்ணம் → தற்செயலாக நேரும்புண்ணியம் → எம்பெருமானின் கடாக்ஷம் → எம்பெருமானிடம் த்வேஷம் இல்லாமை → அவனைப் பற்றிய விஷயங்களையே விரும்புவது → நல்லோருடன் நெருங்கிப் பழகுதல் ஆகியவையாம்.

यदृच्छासुकृतமானது– अज्ञातं, यादृच्छिकं, आनुषङ्गिकं, प्रासङ्गिकं, सामान्य बुद्धिमूलं என ஐவகையாகும்.


3.ஆசார்யர்கள், ஸ்ரீமந்நாராயணனுடன் நமக்கு உண்டான குடல் துவக்கைத் தெளிவித்து, அவனை அடையும் உபாயங்களிலே நம்மை மூட்டுகிறார்.

2. सारनिष्कर्षाधिकार:

"பலகற்ற மெய்யடியார்"

ஒன்றை அறிவதற்கு ஸாதனமான மூன்றில், முதல் இரண்டான ப்ரத்யக்ஷ-அநுமானங்களால், நாம் பெறவிரும்பும் பரமபதம் / அதை அடையும் வழிகள், இவைகளை அறியமுடியாது. ஆதலால், 'ஒருவ ராலும் செய்யப்படாதது' எனும் பெருமையுடைய, சப்தமான **வேத-*சாஸ்த்ர*மே** இவற்றை அறிவதற்கு உறுதுணை. ஆனால் வேதமோ, கரை காணமுடியாக் கடல் ; நாமோ, அளவுபட்ட சக்தி/ஆயுளை உடையவர்; மற்றும், அறிவதற்கு இடையூறுகளோ ஏராளம்; ஆக, இந்நிலையில், வேதத்தில் அறிய வேண்டுவனவற்றில், **மிகவும் ஸாரதம**மானவற்றை நாடிப்பெறுவதே, **முமுக்ஷு**வான நமக்கேற்ற செயலாகும்.


*சாஸ்த்ரத்தில் ஸாரதமத்தை வடிகட்டும் வகை*



## 3.प्रधानप्रतितन्त्राधिकार:

## ஸ்ரீ பாஷ்யகார வைதிக ஸம்ப்ரதாயத்தின் முக்கிய அடிப்படைக் கொள்கைகள்

(லக்ஷணங்களுக்கு viii பக்கம் பார்க்க)



## விசேஷ விஷயங்கள்

1.எம்பெருமானின் **இச்சை**, வஸ்துக்களை அவருடைய **ஸ்வரூபத்தை** ஆச்ரயித்தே இருக்கச் செய்கிறது.

2. பகவானின் ஆதாரத்வ/ சேஷித்வ/ நியந்த்ருத்வத்தால், சேதநனுக்கு **'அவனைப்பிரியாத தன்மை/ புருஷார்த்தத்தில் ஆசை/ உபாய-விசேஷ அறிவு'** இவை முறையே *ப*லிக்கின்றன.

3. சேதநாசேதநங்கள் இரண்டிற்கும் பொதுவானது - எம்பெருமானின் **நிருபாதிக-*சேஷி***த்வமும், அவனுக்கு **நிருபாதிக-*சேஷ***மாயிருப்பது என்பதும். அவற்றுள் சேதநர் விஷயத்திலோ, புருஷார்த்தம் தருவதால் பகவான் **ஸ்வாமி**யாகிறார்; கைங்கர்யரூப புருஷார்த்தம் பெறுவதால், சேதநன் **தாஸ**னாகிறான்.

4. இயற்கையாகவே - தன்னைக் காத்துக்கொள்ள தகுதியும்/ சக்தியும் இல்லாதவர்கள் சேதநர்; எம்பெருமானோ சேதநனைக் காப்பதற்கு, கடமையும் / சக்தியும் படைத்தவன்; அப்படிக் காக்கும்போது கர்மவச்யரை 'ஒரு **உபாயத்திலே மூட்டியே ரக்ஷிப்பது**' என்பது, எம்பெருமானது தீர்ந்த ஸங்கல்பம்.

5.सिद्धोपायமான பகவானை வசீகரிக்க விதிப்பது **चरमश्लोकं**. साध्योपायமான प्रपत्यनुष्ठानத்தை விளக்குவது **द्वयं**. अनुष्ठानத்தின்போது अनुसन्धिக்கவேண்டிய பெரிய अर्थங்களை சுருங்கத் தெரிவிப்பது **திருமந்த்ரம்.**

6. திருமந்த்ரம் (=ப்ரணவம்+நம:+நாராயண+ஆய) நினைவில் நிற்க, அப்புள்ளார் அருளிச்செய்த விரகு :

i) ப்ரணவம் [ அ+ஆய+உ+ம = **ஓம்**
**அ = எம்பெருமான்**
அ+**ஆய** = எம்பெருமானுக்கு
அ+ஆய+**உ** = எம்பெருமானுக்**கே**
அ+ஆய+உ+**ம** = எம்பெருமானுக்கே **ஜீவன் (*சேஷன்*)]**

= i) "***அர்ஜுனரதம்***" காண்க ("அர்ஜுனரத"த்தில் முன்னால் எம்பெருமான்; பின்னால் ஜீவனான அர்ஜுனன் அமர்ந்திருப்பதுபோல், ப்ரணவத்தில் முன்னால் 'அ'காரம்; பின்னால் 'ம'காரம் )

[அன்றியும், "உ" = பிராட்டி என்றால் :
**அ+ஆய+உ+ம** = எம்பெருமானுக்கும் + **பிராட்டிக்குமே ஜீவன் (*சேஷன்*)]**

= "***ஸீதா/ லக்ஷ்மணனுடன் ஸ்ரீராமன் காட்டில் ஸஞ்சரித்தது***" காண்க. (முன்னால் ஸ்ரீராமன்; அடுத்து ஸீதா; பிறகு ஜீவனான லக்ஷ்மணன்)

ii) நம: = எனக்கு ஸ்வாதந்த்ர்யம் **இல்லை**; சேஷித்வமும் இல்லை.

= "***பரத-சத்ருக்னனின் அடிமைப்பணி***" காண்க பரதன் ஸ்ரீராமபாதுகைக்குக் கைங்கர்யம் செய்தமை; தொண்டன் பரதனுக்கே, சத்ருக்னன் தொண்டு செய்தமை)

iii) நாராயண = **ஆதாரத்வம்/ வ்யாபகத்வம்** கொண்ட எம்பெருமான்

i) "***தன்னுடைச்சோதிக்கு ஸ்ரீராமனைத் தொடர்ந்த சராசரங்கள்***" காண்க. (ஆதாரமான எம்பெருமான் இல்லையேல், ஆதேயமான சராசரங்கள் நிலைக்கமாட்டாமை; [நான் உன்னையன்றியிலேன்])

ii) "***சராசரங்களை தன்னுடைச்சோதிக்கு உடன் அழைத்துச் சென்ற ஸ்ரீராமன்***" காண்க (எங்கும் பரக்கும் எம்பெருமான், வ்யாபகத்வம் வீணாகாமல் இருக்க, சராசரங்களை இட்டுச்சென்றார்; [நீ என்னையன்றி இலை – மழிசைப்பிரான் ])

iv) ஆய = கைங்கர்ய-ரூபமான **புருஷார்த்தம்**

"***சேஷியுகந்த கைங்கர்யம் செய்த இளைய/ திருவடிநிலை ஆழ்வார்***" காண்க (சொன்னவண்ணம் கானகத்திற்கு **தொடர்ந்த** லக்ஷ்மணன் 'ப்ரவ்ருத்தி'யாகவும்; சொன்னவண்ணம் நாடு **திரும்பிய** மரவடிகள் 'நிவ்ருத்தி'யாகவும் கைங்கர்யம் செய்தமை)

# *4. अर्थपञ्चकाधिकार:*
## *அடிப்படையில் அலர்ந்த ஐந்தறிவு*




எம்பெருமானுக்கும் ⟺ சேதநாசேதநங்களுக்கும் இடையுள்ள

**ஆத்மா** ⟺ ***சரீரம்*** என்ற ஒழிக்கவொழியா உறவு

| அர்த்த பஞ்சகம் | ஸ்வரூபம் / குணம் | மந்த்ரங்களில் பொதிந்து கிடக்கும் இடங்கள் |
|---|---|---|
| அடையப்படும் **ப்ரஹ்மம்** | -பெரியபிராட்டியோடு ஸதா கூடியிருத்தல்<br>-ஸத்ய-ஜ்ஞான-அனந்த-ஆனந்த-அமலமயம்<br>-கெட்ட குணங்கள் இல்லாமலிருத்தல்<br>-விபுவாக இருத்தல்<br>-प्राप्य / प्रापक उपयुक्त குணங்கள் கொண்டமை<br>-திவ்ய மங்கள உருவமுடைமை<br>-போக-லீலா விபூதிகளை உடைமை<br>-லீலையாக உலகை நடத்துதல் | -*ப்ரணவம்/ நாராயண* பதம்; (अष्टाक्षर:)<br>-*ஸ்ரீமந்நாராயண* பதங்கள்; (द्वयं)<br>-*மாம்/ அஹம்* பதங்கள் (चरमश्लोक:) |
| அடையும் **ஜீவன்** | -அணு-ஜ்ஞான-ஆனந்த-அமலமயம் ஆதல்<br>-பெருமானுக்கே அடிமையாகவே இருத்தல்<br>-பெருமானால் தூண்டப்பட்டே இயங்குதல் | -प्रणव/ नमस्ஸுக்களில் *மகாரம் / நார* பதங்கள்; } (अष्टाक्षर:, द्वयं)<br>-*ப்ரபத்யே/ வ்ரஜ/ த்வா/ மா சுச:* பதம்; |
| அடைவதற்கு **உபாயம்** | -ஸ்வரூப-ரூபாதிகளுடன் கூடிய பகவானை ப்ரீதியோடு இடைவிடாது த்யாநித்தல்<br>-அங்கங்களோடு கூடியதாக, தன்னையும் / தன்னைக்காக்கும் பொறுப்பையும் / பலனையும் பகவானிடம் ஸமர்ப்பித்தல் | -*நம: / அயன* பதங்கள்; (अष्टाक्षर:)<br>-*த்வயத்தின் முற்பகுதி;*<br>-*சரம ச்லோகத்தின் முற்பாதி* |
| அடைவதால் **பலன்** | -பெருமானின் ப்ரீதிக்காகவே, அவனுக்கே எல்லையில்லா அடிமைப்பணி செய்து கிடத்தல் | -4-*ம்வேற்றுமைஉருபுகள்,*(अष्टाक्षर-द्वयं)<br>-த்வயத்தில் *நம:* பதம்;<br>-*ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ் – யாமி* எனும் வாக்யம் (चरमश्लोक:) |


| அர்த்த பஞ்சகம் | ஸ்வரூபம் / குணம் | மந்த்ரங்களில் பொதிந்து கிடக்கும் இடங்கள் |
|---|---|---|
| அடைய விடாமல் **தடைசெய்யும் விரோதிகளும்**<br><br>**+**<br><br>**அவற்றின் செயல்களும்**<br><br>*[32 அடி அகலமுள்ள ஸம்ஸாரமாம் கிணற்றை தாண்டுவார் முன்னடியில் விழுந்ததோடு முப்பதாம் / * முப்பத்து ஓராம் அடியிலே விழுந்ததோடு ஒத்ததான* (ஸம்ஸாரத்தைக் கடக்க மாட்டாத) *செயல்]* | -அவித்யா-கர்ம-வாஸனா-ருசி-ப்ரக்ருதி ஸம்-பந்தம் காரணமாக, நாம் "பெருமானின் கட்டளையை மீறியதால்" பிறந்த அவனின் **நிக்ரஹ ஸங்கல்பம்.** [இதற்குக் காரணமான दुष्कर्मங்களோ/ मोक्षहेतुवान सुकृतங்களோ **'ஆர் பக்கலிலே கிடக்குமென்று தெரியாது'.**]<br><br>இது பத்தனுக்கு :<br>- **அறிவின் குறையை** உண்டாக்கும்; **ப்ரக்ருதி-யுடன் ஸம்பந்தத்தை** ஏற்படுத்தும்;<br>- புலன்களோடு சேரவிட்டு பரதந்த்ரனாக்கும்;<br>- *சாஸ்த்ரத்தில்* அடங்கா, **'திரிபவை'**யாக்கும்;<br>-மனிதரை, **பாஹ்ய-குத்ருஷ்டிகளால் கலக்கும்;**<br>-அல்லது, அறிவின்மை / மாறான அறிவு இவற்றால் **உலகியல்பில் ஈடுபடுத்தும்;**<br>-இட்டதை செய்யாமல், கூடாதன செய்து, **பெருமான் கட்டளையை மீறச்**செய்யும்;<br>-இதனால் **கர்ப்ப-ஜன்ம-மூப்பு-மரண-நரகம் ஆகிய சக்ரத்தில் உழற்றும்;**<br>-அற்ப பலனுக்காக *'கட்டுண்டவர்'* காலில் விழப்பண்ணும்;<br>-அவர் அளிக்கும் **சிறுபயனில் மயக்குவிக்கும்;**<br>-தாழ்ந்த தேவதைகள் / அசேதந உபாஸனம் போன்றவையில் மூட்டி அற்ப பயன் மூலம் **யோகத்தைக் கலைக்கும்;**<br>**-ஆத்ம உபாஸகரை, அதிலேயே நிறுத்தும்;**<br>-ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக்கொண்ட தன் ஆத்மா/ தன் ஆத்மாவை சரீரமாகக்கொண்ட ப்ரஹ்மம் என உபாஸிப்பவரை **ஆத்மானு-பவத்திலோ/ அஷ்டைச்வர்ய போகத்திலோ/ வஸு-பதம் முதலியவற்றிலோ/ தேஹ-இந்த்ரியங்களிலோ கால் தாழப்பண்ணும்** | -மந்த்ரங்களில், विधिक्किற अर्थங்களுடைய, **பிரித்து அறிவிக்கும் திறனிலும்** [ சேதநனின் வைலக்ஷண்ய மான अनन्य शेषत्वத்தை, दादर्थ्यத்தால் அறிவிக்கும் प्रणव लुप्त चतुर्थी / ज्ञानत्वादिகளை मन – ज्ञाने என்பதால் அறிவிக்கும் मकारம் / निर्विकारत्वத்தை रीङ् –क्षये என்பதால் அறிவிக்கும் नर शब्दं ஆகியவற்றின் व्यवच्छेद-शक्ति ]<br><br>-மகாரங்களில், அதன் 6-ம் வேற்றுமையான மம என்பதிலும்;<br>-**ஸர்வ பாப** பதத்திலும் (चरमश्लोकः) |

<u>**விசேஷ விஷயங்கள்**</u>

-மந்த்ரத்ரயத்தால் நாம் அறிவது : உயர்ந்தவனான ***எம்பெருமானுக்கு*** ஏற்றவனான ***நான்***, உரிமையாகக் கிடைக்கக்கூடிய பகவத்கைங்கர்யத்தை, ***அஹங்காரம்*** முதலியவைகளால் இழந்து நிற்கும் நிலையில். இனிச்செய்யவேண்டியது, *சேஷிகளான* தம்பதிகளிடம் ***சரணாகதியே.***

(அர்த்த பஞ்சகத்திலுள்ள "எம்பெருமான் – நான் – அஹங்காரம்" என்ற மூன்றே, **தத்வ-த்ரய**மாகும்)

-'இப்படி நிற்கும் "பகவானின் நிக்ரஹ"மாகிற விரோதியை நீக்கும் பரிஹாரம், **तस्य च वशीकरणं तच्छरणागतिरेव** (எம்பெருமானை அடையவழி, அவனை சரண் புகுவதே)' – என்கிறார் ஸ்ரீபாஷ்யகாரர்.




*-பகவானுக்கு, மற்ற தத்வங்களெல்லாம் எவ்வித அஸ்த்ர/ பூஷணங்கள் என்பது, குறிக்கப்பட்டிருக்கிறது

-ப்ரக்ருதி தத்வங்களுக்கு முன் குறித்த எண்கள் 'கவர்கம்' முதலான 25 எண்களைச் சொல்கின்றன.

**மூன்று தத்வங்களின் பிரிவுகளும், ஸ்வரூப-ஸ்திதி-ப்ரவ்ருத்தி பேதங்களும் :**

| தத்வம் | ஸ்வரூபம் | ஸ்திதி | ப்ரவ்ருத்தி |
|---|---|---|---|
| **ஜீவன்** | -அணு-ஜ்ஞான-ஆனந்த-அமலமயம்<br>-பெருமானுக்கேஅடிமையாதல்<br>-சேதந த்ரவ்யம்<br>-தன்னையறிதல் (ப்ரத்யக்த்வம்)<br>-நித்யத்வம் | அப்படியே நீடித்தல் | -பெருமானால் தூண்டப் பட்டே இயங்குவது<br>-அதன் பலனை அனுபவி த்தல் |
| -பத்தன் | -அவித்யா-கர்ம-வாஸனா-ருசி-ப்ரக்ருதி ஸம்பந்தம்உடைமை | -கர்மத்துக்கேற்ப ஈச்வரன் கொடுத்த சரீரத்தை தன் ஸ்வரூப/ தர்மபூதஜ்ஞானத் தால் தரித்தல்;<br>-மோக்ஷப்ராப்திவரையில் உலகில் உழல்வது | -புண்ய/ பாப/ வீண் செயல் செய்தல் |
| -முக்தன் | -ஈச்வர-நிக்ரஹத்தால் வந்த ஸம்ஸாரபந்தம், பக்தி/ப்ரபத்தியால்நீங்கி,ஸ்வரூபமடைதல் | -உண்டான நிஜஸ்வரூப த்துக்கு முடிவில்லாமை | -முழு ப்ரஹ்மாநுபவம்;<br>-விளையும் பகவத் கைங் கர்யம் |
| -நித்யன் | -ஒருபோதும் ஸம்ஸாரபந்தம் இன்றி நிஜஸ்வரூபத்தோடு ஸதாஈச்வரனுக்கு சேஷனாதல் | -எப்போதும் ஈச்வரனை அநுபவித்தல் | -வரையறுக்கப்பட்ட ப்ரவாஹ-நித்யமான பகவத்கைங்கர்யம் |
| தர்மபூத ஜ்ஞானம் | -பொருளைக்காட்டும்போது தான்சார்ந்திருக்கும் ஆத்மாவு க்கு, தானே தோன்றுதல்;<br>-மற்ற வஸ்துக்களைக் காட்டும் திறன்உடைமை (விஷயித்வம்);<br>-அசேதந த்ரவ்யம்;<br>-பிறர்க்கேதோன்றும்/ பிறர்க்காக இருக்கும் வஸ்து; | -ஈச்வர/நித்யருக்கு நித்ய விபுவாயிருப்பது;<br>-முக்தனுக்கு, முக்தியடை ந்தவுடன் விரிந்து பிறகு விபுவாகவே நீடித்தல்;<br>-பத்தனுக்கு, வினைக்கு ஏற்ப விரிந்து/ சுருங்கி யிருத்தல் | -பொருளைக் காட்டல்;<br>-ப்ரயத்ந நிலையடைந்து உடல்/ புலனை ஏவுதல்;<br>-பொருளை அநுகூல/ ப்ர திகூலமாக காட்டி, பத்த னை அநுபவிப்பித்தல்<br>-பத்தனுக்கு விரிந்து / சுருங்கியிருத்தல் |
| மூலப்ரக்ருதி | -அசேதந த்ரவ்யம்;<br>-பிறர்க்கே தோன்றும்/ பிறர்க் காகவே இருக்கும் வஸ்து;<br>-ஜடமாகயிருப்பது;<br>-ஸத்வ-தஜஸ்-தமஸ்ஸின் இரு ப்பிடம்; -அழிவற்றது | -நித்ய விபூதி தவிர மற்ற இடங்களில் எல்லை யற்று நிற்றல்;<br>-ப்ரக்ருதி முதலான 24 தத்வங்களாதல் ; | -ஸதா மாறுபடுதல்;<br>-பத்தரின் இன்ப/ துன்ப ங்களுக்கும், ஈச்வரனின் லீலா-ரஸத்துக்கும் காரணமாதல்; |
| காலம் | -அசேதந த்ரவ்யம்<br>-ஜடம்<br>-ஆதி/ அந்தம் அற்றது<br>-விபு | -நித்யமாக இருப்பது | - லீலாவிபூதியில் 'கலா' போன்ற பிரிவால் ச்ரு-ஷ்டி ஸ்திதி-ஸம்ஹார ஸாதநமாதல்;நித்யவிபூ தியில் மாறுதலுக்கு கார-ணம் **ஆகாது** இருத்தல் |

| தத்வம் | ஸ்வரூபம் | ஸ்திதி | ப்ரவ்ருத்தி |
|---|---|---|---|
| சுத்த ஸத்வம் | -அசேதந த்ரவ்யம்<br>-ஸ்வயம் ப்ரகாசமானது<br>-ரஜஸ்-தமஸ் கலவாத ஸத்வ குணத்துக்கே இருப்பிடம்<br>-அழிவற்றது | - நித்ய விபூதியில் மட்டும் இருத்தல்; எல்லையற்று இருத்தல்;<br>-பரமபதத்தில் விமானாதிகளும், ஈச்வர/ நித்ய/முக்தர் திருமேனியுமாதல்;<br>-நித்யமாயிருத்தல் | - ஈச்வர/ நித்ய/முக்தர்கள் இச்சையால் மாறுதலடைந்து ஈச்வரனுக்கு போக்ய ஸாதநமாய்; நித்ய/ முக்தருக்கு கைங்கர்ய ஸாதநமாய் இருத்தல் |
| ஈச்வரன் | -ஸத்ய/ஞான/ அனந்த/ஆனந்த /அமல/லக்ஷ்மீபதியாயிருத்தல்<br>-சுத்தஸத்வ திவ்யமங்கள விக்-ரஹமாயிருத்தல்;<br>-எக்கால/ நிலையிலும் பிராட்டியைப் பிரியாதிருத்தல்;<br>-ஜ்ஞாநாதி பரத்வ/ ஸௌசீல்யாதி ஸௌலப்ய குணங்களோடு இருப்பது;<br>-விபுவான சேதநனாயும்/ ஸ்வதந்த்ரனாகவும்/இயல்பாகவே ஸர்வ-*சேஷி*யுமாயிருத்தல் | -பர/வ்யூஹ/விபவ/அர்ச்சா / ஹார்த்த ரூபங்களை உடைமை | -உலகைப் படைத்தல் / காத்தல்/ அழித்தல்;<br>-சேதநர்க்கு மோக்ஷம் தருதல் |

## விசேஷ விஷயங்கள்

1.கர்மபலனை அநுபவிக்க ஒருவஸ்துவுக்கு, 'ஸ்வரூப/ ஸஹகாரி யோக்யதை' என **இரண்டும்** இருக்கவேணும். இந்த யோக்யதை, *பத்த*னைத்தவிர மற்றவர்க்கில்லை என்பதை இவ்வாறு அறியலாம் :

| யோக்யதை / தத்வம் | பரதந்த்ரனான **ஸ்வரூபத்** தகுதி | தவறு செய்யக் காரணமுடைமை (**ஸஹகாரி**) |
|---|---|---|
| ஈச்வரன் | சேதநனானாலும்,**பரதந்த்ர*னில்லை*,** ஸ்வதந்த்ரன் | தனக்கு மிக்கார் இல்லாமையால், அவரின் 'ஆணை மீறுதல்' இல்லை; அதனால் அபராதத்துக்கு வாய்ப்பு ***இல்லை*** |
| அசேதநம் | பரதந்த்ரமானாலும் சேதந***மில்லை*,** | தனக்கு மிக்கார் உள்ளபோதிலும், அறிவில்லாமையால், அபராதத்துக்கு வாய்ப்பு ***இல்லை*** |
| நித்யர் | பரதந்த்ர-சேதநனாகையால் ஸ்வரூப யோக்யதை **உண்டு** | மிக்காரான ஈச்வரன் உண்டு; ஆனால், அவனுக்குப் பிடிக்காததை செய்வது ***இல்லை*** |
| முக்தர் | பரதந்த்ர-சேதநனாகையால் ஸ்வரூப யோக்யதை **உண்டு** | *பத்த தசை*யில் யோக்யனானாலும் *முக்ததசை*யில், விபரீத அநுஷ்டானம் ***இல்லை*** |
| *பத்தன்* | பரதந்த்ர-சேதநனாகையால் ஸ்வரூப யோக்யதை **உண்டு** | *பத்த தசை*யில் விபரீத அநுஷ்டான வாய்ப்பு **உண்டு** |

2.வஸ்துக்களின் ஸ்வரூப-ஸ்திதி-ப்ரவ்ருத்திகள், **எம்பெருமானுக்கு வசப்**பட்டவை. அவை ஸ்வபாவத்தால் 'அநுகூலமாகவே' இருக்கும். ஆனால், கர்மங்களுக்கு ஈடாகப் பலன்கொடுக்கும் பகவானின் ஸங்கல்பத்தால், பத்தனுக்கு (अहङ्कार/ ममकारத்தால் தனக்கென்றுகொண்டால்) **அல்ப அநுகூலமாயோ / ப்ரதி கூலமாயோ/ உதாஸீநமாயோ** இருக்கும்; स्वामि शेषமென்று கொண்டால் அநுகூலம்.

பத்தனுக்கு स्वात्मस्वरूपம் எப்போதும் அநுகூலமாகத்தோன்றுவது, ईश्वरेच्छैயினாலே. இதனால், स्वात्मस्वरूपத்தோடே ஸம்பந்தப்பட்ட हेयமான शरीरத்தையும் एकत्वभ्रमத்தினாலும் कर्मवश्यत्वத்தாலும் अनुकूलமாக भ्रमिக்கிறான், ज्ञानहीनன்.

3.ஜீவன், ஈச்வரனுக்கு ***சேஷன்*** என்பதை, 'அ'காரத்தின்மேல் அழிந்துகிடக்கும் "நான்காம் வேற்றுமை உருபினாலும்; **பகவானுக்கே *சேஷன்*** என்பதை 'உ'காரத்தாலும், அறியலாம். பகவானுக்கு என்று சொன்னதில், பாகவதர்களும் அடக்கம்.

4.ஈச்வர கைங்கர்யம், நித்யருக்கு வரையறுக்கப்பட்டவை; முக்தருக்கு அவ்வப்போது பகவான் ஆஜ்ஞாபிப்பவை. இருந்தபோதிலும், இருவருக்குள் **கைங்கர்ய-*பல*னில் வாசியில்லை.**

5.ஜ்ஞானம், '***தர்மி/ தர்ம***'மென இருவகைப்படும். இரண்டிற்கும் ஸாமாந்ய லக்ஷணம், ज्ञानत्वமும் स्वयंप्रकाशत्वமும்; धर्मिயான आत्म स्वरूपத்துக்கு **प्रत्यक्त्वं** (தன் प्रकाशத்துக்குத் **தானே** फलिயாய் இருக்கை) விசேஷம்; धर्मभूत ज्ञानத்துக்கு **विषयित्वं** (தன் प्रकाशத்துக்குத் **தன் धर्मिயே** फलिயாய் இருக்கை) ஏற்றம்.

धर्मभूत ज्ञानं, द्रव्यமாக இருந்தபோதிலும், வேறொரு द्रव्यத்துக்கு गुणமாகவும் இருக்கும்; இது, ஒளியானது தான் ஒரு द्रव्यமாகவும், அதே ஸமயத்தில் दीपं முதலியவற்றிற்கு गुणமாகவும், இருப்பதைப் போன்றதாகும். ஆக, अद्रव्यங்கள்தான் विशेषणங்களாக இருக்க முடியும் என்பதில்லை; द्रव्यங்களும் विशेषणங்கள் ஆகலாம். இதுபோல, चेतनाचेतन द्रव्यங்கள், ईश्वरனுக்கு विशेषणங்களாக அமைகின்றன.

6.*शुद्धसत्वं, स्वयंप्रकाशமானால் धर्मिज्ञानத்தைப்போன்று चेतनवर्गத்தில் சேருமோ* என்றால், 'இல்லை'; எப்படி धर्मभूतज्ञानं, ज्ञातृत्वं இல்லாத காரணத்தால் अचेतनமாக சொல்லப்படுகிறதோ, அதே போல ज्ञातृत्वं இல்லாததால் शुद्धसत्वமும் अचेतनமாக கருதப்படுகிறது.

7.மற்ற தத்வங்களெல்லாம் ईश्वरனுக்கு, "மணிவரம்" முதலான अस्त्र-**भूषण**ங்களாய் நிற்கும் நிலையை, இவ்வதிகாரத்தின் ஆரம்பத்தில் குறிக்கப்பட்ட வரைபடத்தில் காணலாம்.

8.'பர'னான பகவானுக்கு, 'வ்யூஹ-விபவ-அர்ச்சா-ஹார்த்த'மென மற்ற அவதார ரூபங்கள் உண்டு. இந்த அவதாரங்களெல்லாம் :

-சித்/ அசித்தைவிட **விலக்ஷண**மானவை (*ஸத்யமானவை*); -ஜ்ஞானத்தில் **சுருக்கமில்லா**தவை;

**-ஸுத்த-ஸத்வமய**மானவை; -ஈச்வர இச்சையையே **காரண**மாகக் கொண்டவை;

-தர்மத்தைக் காக்கவேண்டிய **காலத்தை** எதிர்பார்த்து நிற்பவை;

-ஸாதுக்களைக் காப்பதையே **ப்ரயோஜன**மாக உடையவை;

இந்த **அவதார ரஹஸ்ய**த்தை அர்த்தத்தோடு அநுஸந்திப்பவர், இந்த ஜன்மத்தின் முடிவிலேயே (***தன் தகுதிக்கேற்ற உபாயத்தின் நிறைவாலே***) முக்தராவார்.

**ஆக தத்துவங்களைப்பற்றி இந்த அளவு ஸாராம்சத்தை, 'கடுகக்கேட்டு, விரிவான *சாஸ்த்ர* அப்யாஸத்தை விட்டுவிட்டு, மோக்ஷத்துக்கான உபாயத்தில் நாம் கடுக மூளவேண்டும்.'**

# 6.परदेवतापारमार्थ्याधिकार:

## "திருமாதுடன் நின்ற புராணன்"

மோக்ஷமளிக்க, பரதத்வமான **ப்ரஹ்ம**த்தினால்தான் இயலும். ஆகையால், மோக்ஷத்தில் ஆசையுள்ள நமக்காக, அந்த ப்ரஹ்மம் '**இன்ன தேவதா விசேஷம்**' என்பது இங்கு ஆராயப்படுகிறது.

நிராகரித்தல் முறையில் (व्यावृत्ति) 'மற்றவர்/ மற்றவை தேவதை இல்லை' என நிரூபித்தல் :

| மற்றவர் கொள்கை | நிராகரித்ததற்குக் காரணம் |
|---|---|
| *1.எல்லா வஸ்துக்களுமே, ப்ரஹ்ம த்ரவ்யம்தான்* (பாஸ்கர-யாதவ மதங்கள்) | சேதந அசேதநங்கள்/அவைகளின் பிரிவுகள், இவைகளுக்குள் ஒன்றுக்கொன்று உள்ள வாசி, ப்ரமாணங்களால் ஸித்தம். |
| *2.எல்லா தேவதைகளுமே ப்ரஹ்மம்* *(ஔபாதிக-பேத வாதம்)* | ஜீவ-ஈச்வரனுக்குள் இயற்கையாய் அமைந்த வாசியும்; ஜீவர்களான தேவதைகளுக்குள் ஸுக-துக்கங்கள் வெவ்வேறாக ப்ரமாண ஸித்தமுமாகையால்; |
| *3.முக்கியமாம் மூவரும்* (ப்ரஹ்மா-விஷ்ணு -ருத்ரன்)*ஸமம்*<br>*4.அம்மூவரும் ஒரே தத்வம்*<br>*5.மூவரைக்காட்டில் மேலான ஒருவன் தான் ப்ரஹ்மம்*<br>*6.மூவரில் ப்ரஹ்மாவோ/ ருத்ரனோ தான் ப்ரஹ்மம்* | -ப்ரஹ்மா/ *சிவன்* முதலானோர் 'கார்யங்கள்'; மேலும் கர்மத்தால் கட்டுண்டவர்; மற்ற தேவதைகள் :-<br>• நாராயணனின் மாயைக்கு உட்பட்டவர்கள்<br>• அறிவின் ஏற்றச்சுருக்கம் உடையவர்கள்<br>• நாராயணனுக்கு ஏவல்/ தேவை செய்பவர்கள்<br>• '*சு*பாச்ரயத்வம்' (ஸம்ஸாரம் நீங்க ஆச்ரயிக்கப்படும் தன்மை) இல்லாதவர்கள்<br>• நாராயணனை அண்டினவர்கள்<br>• நாராயணனின் உடைமை/ *ச*ரீரம்/ *சே*ஷம்<br>• 'நாராயணனே பரன்' என்று ஒப்புக்கொண்டவர்கள் |

**ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம்** என நேர் (अनुवर्तमान) வழியில் நிரூபித்தல்

1.நாராயணனே ஆதியாய், ஸர்வ ஜகத்துக்கும் காரணன் என்று பல ப்ரமாணங்கள் நிரூபிக்கின்றன.

2.அவன் 'ஒத்தாரும்-மிக்காரும்' இல்லாத நித்யன்.

3.அவனே வேதங்களின் ஸாரத்தை உள்ளடக்கிய ப்ரணவத்தால் குறிக்கப்படுபவன்.

4.'பிராட்டியை உடைமையால் அவனே தேவன்', என வேதங்களால் ஓதப்படுபவன்; ஆக இந்த திவ்ய-மிதுநமே (இரட்டையரே) ப்ராப்யரும்/ *ச*ரண்யரும் ஆவர். ( விவரங்களுக்கு चतुश्लोकी व्याख्यानम् பார்க்க)

| நாராயணன் Vs | மற்ற தேவதைகள் |
|---|---|
| 1.பிறக்கும்போது மதுஸூதன-கடாக்ஷம் பெற்றவர் மோக்ஷத்தை விரும்புவர் | பிறக்கும்போது ப்ரஹ்மாவோ/ *சிவ*னோ பார்த்தால் ரஜோ/ தமோ குணமடைவர் |
| 2.முமுக்ஷுவுக்கு மதுஸூதநனே உபாயம் | மற்ற தேவதைகளுக்கும் மாதவனே உபாஸ்யன் |
| 3.*ச*ரணமடைந்தோரை ஒருபோதும் கைவிடான் | நாராயணனால் தண்டிக்கப்படுபவரைக் காக்க ஒரு தேவரும் *ச*க்தரல்லர் |
| 4.ஆச்ரிதற்கு, மோக்ஷமும் / (கேட்காமலேயே) மற்ற பலன்களும் கொடுப்பான் | அளிக்கும் பலன்கள் அல்பங்களாயும்/ விஷம் கலந்த தேன்போலுமிருக்கும் (அதுவும் பகவததீனம்) |

இவ்வர்த்தங்கள் மந்த்ரங்களில் பொதிந்த இடங்கள் } 'அ'காரம்/ நாராயண பதங்கள்/ 'மாம்-அஹம்' *ச*ப்தங்கள்

## *7.मुमुक्षुत्वाधिकार:*

## *"வீடினை வேண்டும் பெரும்பயன்"*

**அ**றியவேண்டியதில் இரண்டாவதான, "உபாய"த்தைப் (ஹிதம்) பற்றி மேல் 6 அதிகாரங்களால் விளக்குமுன், கீழ் 6 அதிகாரங்களால் உபதேசித்த 'தத்வ' விஷயங்களை இங்கு சுருக்கிச் சொல்வதன் மூலம் **'மோக்ஷம் பெறத்தகுதியுடைமை'** வளரும் 7 படிகளை இப்படி அடுக்குகிறார் :

i.தனக்கும்-ஈச்வரனுக்கும் இடையேயுள்ள 'சரீரம்-ஆத்மா'என்ற **உறவை அறிதல்** (प्रधानप्रतितन्त्राधिकार:)

ii.தேஹ-இந்த்ரியங்களைவிட மாறுபட்ட ஆத்ம-**வைலக்ஷண்யத்தை அறிதல்** (उपोद्घाताधिकार:)

iii.தன் கர்மாவுக்கு தகுந்தபடி - வேறு சரீரத்தை அடைவது/ பரலோகம் செல்வது இவற்றை அறிந்து - நரகம் அடை தல்/ மறுபடிப் பிறத்தல் இவைகளுக்குக் காரணமான **செயல்களில் முயலாதிருத்தல்**

iv.தான் பகவானுக்கு ஆதேய-விதேய-*சேஷனாயிருப்பது* (प्रधानप्रतितन्त्राधिकार:); அணுவாய் அல்ப சக்தனாய்/ கர்ம பலமான துக்காதிகளை அநுபவிப்பவனாய் நிற்பது (तत्वत्रयचिन्तनाधिकार:); மேலும் மற்ற தேவதைகளின் 'மோக்ஷமளிக்கும் திறன் இல்லாமை' (परदेवतापारमार्थ्याधिकार:); இவ்வளவால், தன்னைவிட உயர்ந்தவனான ஈச்வரனுக்கு கைங்கர்யம் செய்யும் தன் **தகுதி,** இவற்றை**யறிதல்**

v.இப்படிப்பட்ட தன் நிலையை, **திருமந்த்ரத்தில்** அநுஸந்தித்து, **அஹங்கர-மமகாரங்களை** பின் வருமாறு **ஒழித்து**, தீர்ந்த **அறிவு பெறுகை** (अर्थपञ्चकाधिकार:) :-

| அஹங்கார-மமகாரங்கள் | அவை நீங்கும் வழியும் / திருமந்த்ரத்தின் பகுதியும் |
|---|---|
| 1.*சரீரத்தையே ஆத்மாவாக எண்ணுதல்* ***அஹங்காரம்;*** *சரீரத்தோடு தொடர்புள்ள மனைவி/ மக்கள்/ வீடு போன்றவற்றை தனதாக எண்ணுதல்* ***மமகாரம்*** | ப்ரணவத்தின் 'ம', ஜீவனைக் குறிக்கும். 'மன ஜ்ஞானே/ அவ போதனே', 'மஸ பரிமாணே' என தாதுவின் 3 பொருளால், ஜீவன் **ज्ञानस्वरूपன்/** பொருளை **அறிபவன்/ அணுவானவன்** ஆக, **சரீரத்தைவிட வேறானவன்,** எனத் தெளிந்து, நீங்கும். |
| 2.*'நான் எனக்கே உரியவன்' என்ற எண் ணம்* ***அஹங்காரம்;*** *என்னுடைய குணம் போன்றவை எனக்கே உரியன என எண் ணுவது* ***மமகாரம்*** | ப்ரணவ 'அ'காரத்தின்மேல் மறைந்து கிடக்கும் நான்காம் வேற்றுமைஉருபு (तादर्थ्य), 'அ' என்னும் பகவா**னுக்கு,** நானும் என்னைச்சேர்ந்தவைகளும் **சேஷம்** என்பதால், 'அஹ'ங்கார/ 'மம'காரங்கள் நீங்கும். |
| 3.*பகவானுக்கன்றி வேறொருவர்க்கு நான் சேஷன் என்ற எண்ணம்* ***அஹங்கா ரம்;*** *பகவானைத்தவிர வேறொருவர் என க்கு சேஷி என எண்ணுவது* ***மமகாரம்*** | ப்ரணவத்தின் 'உ'வுக்கு 'அவனுக்கே' என்று (अवधारण) பொருள்; இதனால், பகவா**னுக்கே** நான் **சேஷன்,** எனக்கு பகவா**னே சேஷி,** எனத்தெளிந்து, 'அஹ'ங்கார/ 'மம' காரங்கள் நீங்கும். |
| 4.*என்னைக் காப்பதில், எதையும் எதிர்பா ராது, நானே ஸ்வதந்த்ரன் (निरुपाधिकशेषी) என்பது* ***அஹங்காரம்;*** *காப்பதில் எனக்கு ஸ்வாதந்த்ர்யம் உண்டு என்பது* ***மமகாரம்*** | 'ந, ம:'வின் நிஷேதத்தில்(விலக்குவதில்) என்னைக் காப்பதில் **ந மம ஸ்வாதந்த்ர்யம்'** என்று அநுஸந்திப்பதால், 'அஹ'ங் கார/ 'மம'காரங்கள் நீங்கும். |
| 5.*மோக்ஷகைங்கர்யங்களை நானே ஸ்வ தந்த்ரமாகச்செய்து, பலனையும் நானே அநுபவிப்பேன் என்பது* ***அஹங்காரம்;*** *அவைகளை நானே செய்வேன்/ பலனும் எனக்காக என்பது* ***மமகாரம்*** | 'நாராயணாய' என்பதுடன் 'ந, ம:' வைச் சேர்த்து அநுபவித் தால், மோக்ஷகைங்கர்யங்களும் **பகவானாலேயே** செய்விக் கப்படுகின்றன; அதுவும், **அவன் ப்ரீதிக்காகவே** செய்யப்படு கின்றன எனத்தெளிவதால், 'அஹ'ங்கார/ 'மம'காரங்கள் நீங்கும். |

vi.(ஸ்வர்க்கம் உள்ளிட்ட) ’அசித்’ அநுபவத்தின் (दु:खमूलत्वं, दु:खमिश्रत्वं, दु:खोदर्कत्वं, अल्पत्वं, अस्थिरत्वं, विपरीत अभिमान मूलत्वं ஆகிய) தோஷம் தெரிந்து விட்டாலும்; **ஆத்மாநுபவமும்,** (स्वाभाविक आनन्द विरुद्धமாகி) பகவதநுபவத்தின் வைலக்ஷண்யத்தை ஒப்பிட்டால், **“தாழ்ந்ததே”** எனத் தெளிவது (सारनिष्कर्षाधिकार:)

vii.இவ்வளவால், ப்ரவ்ருத்தி (மற்ற பலனை வேண்டிச்செய்யும்) தர்மங்களினின்று நிவ்ருத்தராய், நிவ்ருத்தி (மோக்ஷம் வேண்டிச் செய்யும்) தர்மமான **உபாயாநுஷ்டானத்**தில் கடுக மூள முனைபவனே “**முமுக்ஷு**”

* * *



'நின்னையேதான் வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்'
(குலசேகர ஆழ்வார் - திருக்கச்சி)

## *8.अधिकारिविभागाधिकार:*

## *“நீண்டும் குறுகியும் நிற்கும் நிலைகளை ஏற்பவர்”*

**உபாயத்தில் தகுதியுடையோர்**

(ஸத்வாரக) ப்ரபத்தி நிஷ்டன்

(பரபத்தியை அங்கமாகவைத்து பக்தியோகம் செய்பவன்)

அல்லது

**உபாயரூபமாக பக்தி** செய்பவன்

(மதுவித்யை முதலா 31 வித்யா ரூபம்)

(அத்வாரக) ப்ரபத்தி நிஷ்டன்

(நேரிடையாக ப்ரபத்தி செய்பவன்)

அல்லது

**பலரூபமாக பக்தி** (அதுவே ப்ரயோஜனமாக) செய்பவன்

*வகைகள்*

உக்தி நிஷ்டை

ஆசார்ய நிஷ்டை

*செயல் முறை*

உக்தி நிஷ்டை: *பகவானைத்தவிர வேறு கதியில்லாத வனாய்*, ஆசார்யன் சொல்லும் ப்ரபத்தி வாக்யங்களைச் சொல்லித் தம்மைக் காக்கும் பொருப்பை பகவானிடம் ஸமர்ப்பித்தல்

ஆசார்ய நிஷ்டை: *யாசித்தால் காப்பாறுவான் என நம்பி* - தனக்காகவும்/ தன்னைச் சார்ந்தவர்க்காகவும் ஆசார்யன் அநுஷ்டிக்கும் ஸமர்ப்பணத்தில், அடங்குதல்

*ப்ரபத்தியின் ஏற்றம்*

-வர்ண-ஆச்ரமாதி நியமம் பாராமல் எவரும் அநுஷ்டிக்கக் கூடியது;
-எல்லாப் பாபங்களையும் போக்க வல்லது;
-வேண்டும் பயனைக்கொடுக்க வல்லது ;
-அநுஷ்டிக்க எளியது; ஒரே முறை செய்யவேண்டியது;
-எந்தத் தடைக்கும் உட்படாதது; விரைவில் பலன் தரக்கூடியது;
-’ப்ரஹ்மாஸ்த்ரம்போல’ வேறு உபாயத்தை ஸஹிக்காதது.

*அடையும் பலன்*

-ப்ராக்ருத-சரீரம் இருக்கும்வரை அர்ச்சாவதார கைங்கர்ய அநுபவம்
- ப்ராக்ருத-சரீரம் கழிந்தபின் பரிபூர்ண ப்ரஹ்மாநுபவ கைங்கர்யம்

### விசேஷ விஷயங்கள்

-அத்வாரக/ ஸத்வாரக ப்ரபத்தி நிஷ்டனுக்கல்லது, பகவான் மோக்ஷம் அருளமாட்டான்.

-**அத்வாரக** நிஷ்டனுக்கு, மோக்ஷம் தாமதிக்கும்; ஆனால் யோக-அநுபவம் **அளவற்றது**; **ஸத்வாரக**னுக்கு பலன் சீக்கிரம் கிட்டும்; ஆனால், **ஜீவதசையில்** ஸுகம் **அளவுடையது.**

## *9.उपायविभागाधिकार:*

## *“பழமறையின் பரம நெறி”*

**மோக்ஷம்**பெறக் காரணமாயிருப்பது **உபாய**மாகும்; இவை, “எப்போதும் இருப்பது (सिद्धं) / செய்யப்படவேண்டியிருப்பது (साध्यं)” என இருவகையாம். साध्य-उपायं, **அதிகாரி** பேதத்தால் பக்தி யோகம்/ ப்ரபத்தி எனப்படுமெனக் கீழே ஸாதித்தார். இங்கு அந்த साध्य-उपायங்களை விவரிக்கு முன், “பகவானே (सिद्धமான) நேர் **உபாயம்**” என உபநிஷத்துக்கள் கூறுவதாலும், அந்த பகவானே “**உபேய**முமாவதால்” அதையும் குறிப்பிடுகிறார். அதாவது : 1) **सिद्ध** உபாயம்/ உபேயமான பகவான், அந்த ஜ்ஞானத்துக்கு **விஷய**மாகும் . 2) **साध्य** உபாயம்/உபேயம் இரண்டுமே (*சில **வித்யாஸங்கள்** இருப்பினும்*) **ஜ்ஞான-விகாஸ-விசேஷ**ங்கள் (*தனித்தன்மைகொண்ட-அறிவின் மலர்ச்சி*); இவைகளின் விளக்கமாவது :-

| பகவான் सिद्ध உபாய / உபேயமாக ஆவது | |
|---|---|
| **ப்ரபன்ன**னுக்கு ஜ்ஞானத்துக்கு விஷயமாய், பக்தியோக ஸ்தாநத்தில் நின்று பலனளிப்பதால், **உபாயம்** ;<br>**பக்த**னுக்கு, கர்மயோக ஆரம்பம் முதல் உபாயபூர்த்திவரை செய்ய இயலாத கர்மங்களின் ஸ்தாநத்தில் நின்று, உபாயத்தைத் தலைக்கட்டுவதால்,**உபாயம்**; | ஜ்ஞானத்துக்கு விஷயமாய்க் கொண்டு, குண-விபூதிகளோடு பரிபூர்ணமாய் அநுபவிக்கப் படுவதால், **உபேயம்**. |

| | கர்த்தவ்யமான/ **ஸாத்ய** **உபாய** ஜ்ஞானம் (காரணம்) ⟷ ***வித்யாஸம்*** | **ஸாத்ய**/ப்ராப்தி ரூபமான **உபேய** ஜ்ஞானம் (கார்யம்) |
|---|---|---|
| 1 | **सङ्कुचित** ज्ञानமாகையால் இந்த்ரியங்களை **எதிர்பார்ப்பது** | **विकसित** ज्ञानமாகையால் இந்த்ரியங்களை **எதிர்பாராதது** |
| 2 | சாஸ்த்ரங்களில் **விதிக்கப்பட்டது** | விதியின்றி, **இயற்கை**யாயுள்ளது |
| 3 | வித்யைகளில் **குறித்த** குணங்களைக்கொண்ட (व्यवस्थित) ப்ரஹ்மத்தைப் பற்றியது | குண-விபூதிகள் எல்லாத்தாலும் **பரிபூர்ண**-ப்ரஹ்ம-விஷயம்; அவ்வநுபவ-பரீவாஹ-**கைங்கர்யம்** |

***எதைவிட** வித்யாஸப்பட்டது*

| | ஸாத்ய **உபாயம்** | ஸாத்ய **உபேயம்** |
|---|---|---|
| **ஜ்ஞானம்** என்றதால் | க்ரியையைவிட வேறான/ ப்ரதானமான தன்மையால் வேறுபட்டது. | ’ஐக்யமாக’ ப்ரமிக்கும், சேர்தல்/ ஒன்றாவது என்பதை விட வேறுபட்டது. |
| **விகாஸம்** என்றதால் | ஸித்தோபாயமான பகவத் ஸ்வரூபத்தை விட வேறுபட்டது. | ஸித்தோபாயமான பகவத் ஸ்வரூபத்தை விட வேறுபட்டது. |
| **வி*சேஷ*ம்** என்றதால் | உபேய பகவதநுபவ ஞானத்தை விட வேறுபட்டது. | ஸாத்யோபாய ரூப ஞானவிகாஸத்தை விட வேறுபட்டது. |

*ஸந்மார்க்கங்களும் (பக்தியோகம்) அவைகளின் ஸ்வரூப-**பேத**-கார்யங்களும்*

| ஸந்மார்க்கம் | ஸ்வரூபம் | பேதம் | கார்யங்கள் | ஸாதந ஆகாரம் |
|---|---|---|---|---|
| கர்மயோகம் | பலன்/தொடர்பு இவையொழிந்த நித்ய/ நைமித்திக/ காம்யங்களில் முடிந்ததை நியமத்துடன்செய்யும் கர்ம விசேஷம் | தேவார்ச்சன தபஸ்-தீர்த்த -தான-யக்ஞம் முதலியன | ஞானயோக மூலமோ/ நேரேயுமோ ஆத்மாவை காட்டும் | सद्वारक मोक्षो-पाय மாக(இடையிட்டு)யிருக்கும் ஒரே நிலை |
| ஞானயோகம் | கர்மயோகத்தால் வசப்படுத்திய மனத்தினனுக்கு, அசித்தைவிட விலக்ஷணனாய்/ஈச்வர-சரீரமான தன் ஆத்மஸ்வரூப த்யாநம் | – | ஆத்மாவை நேரில் காட்டும் | |
| பக்தியோகம் (பரபக்தி) | ரூப/ குணங்களுடன்கூடிய பகவானைக் குறித்து ப்ரீதியோடு நேரில் காண்பதைப்போல், செய்யும் இடைவிடாத த்யாநம் | 31-வித வித்-யைகள் | அஷ்ட ஸித்திகளும்/ பரஞான-பரம பக்தி நிலையால் மோக்ஷமும் | अद्वारक मोक्षो - पाय மாக(நேராக) யிருக்கும் ஒரே நிலை |

**பக்தியும்/ பக்தி யோகத்தின் பர்வாக்களும்/ அவைகளின் விளைவுகளும்**

| பர்வா | ரூபம் | விளைவுகள் |
|---|---|---|
| **பக்தி** | ஸாத்விகருடன் சேர்க்கை/ புராணம் கேட்டல்/ ஸுக்ருத வி*சேஷ*ம் இவைகளால், பெருமானிடம் உண்டாகும் **ப்ரீதி-வி*சேஷ*ம்** | ஸ்வரூப/ரூப/குண/விபூதிகளோடு, 'பகவானை நன்கு **அறியவேணும்**' எனும் ஆசையை உண்டாக்கும் |
| **பரபக்தி** | பக்தியின் விளைவாக, *சாஸ்*த்ரம் சொன்ன தத்வ ஜ்ஞானம் உண்டாகி, கர்ம/ ஜ்ஞானயோகம் வழியே **பக்தியோகம்** செய்ய முற்படுவது (**இதுதான்** மோக்ஷோபாயமாக விதிக்கப்பட்ட **பக்தியோகம்**) | ஸ்வரூப/ரூப/குண/விபூதிகளோடு பகவானை நேரில் **காணவேணும்** என்ற ஆசையை உண்டாக்கும் |
| **பரஜ்ஞான** | பகவானின் அநுக்ரஹத்தால், **தத்கால**மான பரி-பூர்ணமான ஸாக்ஷாத்காரம் ஏற்படுவது | ஒரு க்ஷணம் கண்ட பகவானிடம் **எல்லையில்லா ப்ரீதி**யை உண்டாக்கும் |
| **பரமபக்தி** | **நிலையாக** பகவானை அநுபவித்தாலன்றி, உயிர் தரிக்க இயலாத நிலை ஏற்படுவது | இனியும் தாமதிக்காமல் **மோக்ஷம் அளிக்க** பகவானைத் தூண்டும் |

பக்தியோகம் செய்வதற்கு **யோக்யதை இல்லாத**வர் யார் ?

1)*சாஸ்*த்ரத்தினால் தடுக்கப்பட்டோரான ஸ்த்ரீகள்/ மூவர்ணத்தில் சேராதவர்; 2)செய்வதற்கு ஞானம் இல்லாதவர்; 3)செய்வதற்கு *ச*க்தி இல்லாதவர்; 4)பலன் கிடைக்க, காலதாமதத்தைப் பொறுக்காதவர்.

**ப்ரபத்தி**யின் பெருமை :

பக்தியோகம் செய்ய 'யோக்யதையில்லா' நம்போல்வர்கள் நேராகவும்/ செய்ய யோக்யதை உடையவர்கள் பக்தியோகம் மூலமாகவும் – இப்படி **இருநிலை**யால் யாவரும் – நற்கதிபெற, உயர்ந்த உபாயமாய் நிற்பது, ப்ரபத்தி என்பது மேலே விளக்கப்படும்.

## வி*சேஷ* விஷயங்கள்

-பெருமானை அடைய அவனே உபாயம்; அவ்வுபாயத்தைச் செய்வதற்கும் அவனே காரணம்.

## *10.प्रपत्तियोग्याधिकार:*

## *“அனன்னியரார் வந்தடையும் வகை” வரிப்போர் யார் ?*

(லக்ஷணங்களுக்கு VIII பக்கம் பார்க்க)

’**ப்**ரபத்தி செய்யத் தகுதியுள்ளவர் யார்?’ என்பதையும்; அவர்களுக்கு இருக்கவேண்டிய இரு தன்மைகளையும் இப்படி விளக்குகிறார்.

1) ஸம்ஸாரத்திலிருந்து விடுபடும் ஆசையுள்ள, ஆனால் பக்தியோகத்தில் தகுதியில்லாதவர் (आकिञ्चन्यं உள்ளவர்); 2) (மோக்ஷத்தைத்தவிர்த்த) **வேறு பலனையும்**; அதற்காக **வேறு தெய்வத்தையும்** நாடாதவர் (अनन्यगतित्वं உள்ளவர்)

இப்படி, ப்ரபத்திக்குத் தகுதியுடையவர்கள், 15 வகையாவர்; அவர்களாவர் - ***பக்தியோகத்தில்*** :

1) (1)சக்தி (2)ஞானம் (3)வர்ணம் இல்லாதவர்; (4)தாமதம் பொறுக்காதவர் (1-2-3-4)

2) (1)சக்தி (2)ஞானம் (3)வர்ணம் இல்லாதவர்; (1-2-3)

3) (1)சக்தி (2)ஞானம் இல்லாதவர்; (1-2)

4) (1)சக்தி இல்லாதவர்; (1)

5) (1)சக்தி (3)வர்ணம் இல்லாதவர்; (4)தாமதம் பொறுக்காதவர் (1-3-4)

6) (1)சக்தி (3)வர்ணம் இல்லாதவர்; (1-3)

7) (1)சக்தி இல்லாதவர்; (4)தாமதம் பொறுக்காதவர் (1-4)

8) (2)ஞானம் (3)வர்ணம் இல்லாதவர்; (4)தாமதம் பொறுக்காதவர் (2-3-4)

9) (2)ஞானம் (3)வர்ணம் இல்லாதவர்; (2-3)

10) (2)ஞானம் இல்லாதவர்; (2)

11) (2)ஞானம் இல்லாதவர்; (4)தாமதம் பொறுக்காதவர் (2-4)

12) (2)ஞானம் இல்லாதவர்; (4)தாமதம் பொறுக்காதவர் (1)சக்தி இல்லாதவர் ; (2-4-1)

13) (3)வர்ணம் இல்லாதவர்; (4)தாமதம் பொறுக்காதவர் (3-4)

14) (3)வர்ணம் இல்லாதவர்; (3)

15) (4)தாமதம் பொறுக்காதவர் (4)

-இப்படிப்பட்ட தகுதியுடையோர் அநுஷ்டிப்பதற்கான ப்ரபத்தியின் அங்க/ அங்கிகளை, மேல் இரண்டு அதிகாரங்களால் விளக்குகிறார்.

## 11.परिकरविभागाधिकार:

## “துணையாம் பரனை வரிக்கும் வகை”

*'**வே**றங்கம் இதனில் வேண்டா'* (ப்ரபத்தி, அங்கம் எதையும் எதிர்பாராதது) எனப் ப்ரமாணங்கள் சொன்னதற்கு, “ப்ரபத்திக்கென்று **விசேஷமாக விதிக்கப்பட்ட ஐந்து அங்கங்களைத்தவிர**, வேறு பொது வான அங்கம் ஏதும் வேண்டாம்” என்றுதான் பொருள்.

| அங்கங்கள் | நிபந்தனம் | பலம் |
|---|---|---|
| ***ஆநுகூல்ய ஸங்கல்பம்* –** இனி பகவானுக்கு அநு கூலனாயிருப்பேன் என உறுதிகொள்ளல் | பகவானுக்கு நாம் சேஷ னாவதால் | 'கட்டளை மீறுத'லிலிருந் **து தப்புவது** |
| ***ப்ராதிகூல்ய வர்ஜநம்* –** ப்ரதிகூலனாயிருப்பதை இனி விடுதல் | பகவானுக்கு நாம் சேஷ னாவதால் | 'கட்டளை மீறுத'லிலிருந் **து தப்புவது** |
| ***மஹாவிச்வாஸம்* –** யாசித்தால் நம்மை பகவான் ரக்ஷிப்பான் என முழுநம்பிக்கை கொள்ளல் | 5- வித சங்கைகளும் தீர்ந்தமையால் (மேலே விளக்கப்பட்டிருக்கிறது) | அநுஷ்டானம்நிலைப்பது /பாரமற்ற நிலைபெறுதல் |
| ***கார்ப்பண்யம்* –** உபாஸநத்தில் திறமின்மை / விளைவான செருக்கழிவு/பகவானின் கருணை வேண்டுதல், ஆகிய ஏழ்மை வெளிப்பாடு | நம் ஏழ்மைத்தனம்/ போக்கற்ற தன்மை/ செருக்கு அழிதலால் | ஈச்வரனின் கருணையை தூண்டிவிடுவது |
| ***கோப்த்ருத்வ வரணம்* –** உபாஸநத்தை எதிர்பா ராமல் 'ரக்ஷிக்கவேணும்' என பகவானை வேண்டுவது | 'புருஷார்த்தமாகவேணு' மென்பதால் | மோக்ஷத்தில் புருஷார்த் தம் கிட்டுவது/ பகவான் புருஷார்த்தம் கொடுப்ப வன் ஆவது |

(ப்ரபத்தி அநுஷ்டானபரமான) **த்வயத்தில் இவ்வங்கங்களை அநுஸந்திக்கும் இடங்கள்**

| மந்த்ர பாகம் | அங்கங்கள் |
|---|---|
| ஸ்ரீமத்/ நாராயண பதங்கள் | இப்பதங்கள், ஈச்வரனின் ஆகார விசேஷங்களாகிற 'புருஷகார-ஸம்பந்த-குண-வ்யாபார-ப்ரயோஜன கர்ப்பமாயிருக்கின்றன. இவ்வாகாரங்கள்தான், நம் ஆநு-கூல்ய <u>வர்ஜன</u>/ ப்ராதிகூல்ய <u>அநுவர்த்தன</u>ங்களால் பகவானுக்கு உண்டான 'நிக்ரஹ ஸங்கல்பத்தை' மாற்ற உதவுகின்றன; ஆக, ***ஆநுகூல்ய ஸங்கல்ப/ ப்ராதி-கூல்ய வர்ஜந***ங்கள் அர்த்தமாகக் கிடைக்கின்றன. |
| ப்ரபத்யே | '*ப்ர* + *பதில்* தாது + *தன்மைக்குறி* = ப்ரபத்யே ஆகிறது. இதில் 'ப்ர' என்பதில் **விச்வாஸ *மஹத்வம்*** சொல்கிறது; '*பதிலு*க்கு', அடைவது (*கதி*) எனப்பொருளாய், அதுவும் அறிவை முன்னிட்ட (बुद्ध्यर्थ:) நம்பிக்கை முன்னிட்ட செயலாகவே ஆவதால், அர்த்தமாக **விச்வாஸ *ஸ்வரூபம்*** கிடைக்கிறது; 'தன்மைக்குறி' கர்த்தாவின் ***கார்ப்பண்ய***த்தைச் சொல்லும். |
| சரணம் ப்ரபத்யே | ப்ரபத்தி விஷயத்தில், '*சரணம்*' என்பதற்கு 'உபாயம்' எனப்பொருள்; ஆக '***உபாயமாக*** (காரணமாக) ***ஆவாய்***' என <u>சப்தமாகவே</u> ***“கோப்த்ருத்வ வரணம்”*** சொல்கிறது. மேலும், ப்ரபத்தி/ பகவான் என இரண்டும் காரணமாயிருந்தும், கார்யமான 'காப்பது' என்பது, சேதநனால்தான் முடியுமாகையால், பகவானிடம் '**காப்பாய்**' என **ப்ரார்த்திப்பதையும்** <u>आर्थமாகக்</u> குறிக்கும். |

-'*மிகப்பெரிய பலமாகிற மோக்ஷத்தை, சிறிய செயலாகிய ப்ரபத்திக்கு பகவான் தருவானா?* என்ற "5-வித ஐயங்கள்", ஈச்வரனின் आकार विशेषங்களை இவ்வாறு அறிந்தால், அகலும் :-

| ஸந்தேஹங்கள் | भगवाனின் आकार विशेषங்கள் | ஐயம் அகலும் காரணம் |
|---|---|---|
| *1.எல்லாம் அறிந்த (सर्वज्ञ:) , எதையும் செய்ய சக்தியுள்ள (सर्व शक्तियुक्त:) ஈச்வரன், அளவில்லா அபராதங்களைச் செய்தவர்கள் அணுகுவதற்கு ஏற்றவனாகை எப்படி?* | **पुरुषकार:** - "மறுக்கவொண்ணாமை". இது வேண்டிய-தைத் தரவல்ல आश्रयणीयனையும் आश्रयிப்பவனை-யும் சேர்த்துவைக்கும் ஒரு சேதநனின் ஆகாரம். | இதனால், अन्त:पुरपरिजनங்களை நடத்துவதுபோல், மோக்ஷ–விரோதிகளான நம் பாபங்கள் ஒன்றையும் பொருட்படுத்தாதவன் (अविज्ञाता)போல் **க்ஷமித்து, அடைக்கலம் தருவதால்.** |
| *2.நம் கர்மங்களுக்கேற்ற பலனை தருபவனான ஈச்வரன், தடையாயுள்ள அளவிலா அபராதங்களை செய்த நமக்கு, மிக பெரிய फलத்தைத் தருவானா ?* | **संबन्धं** : - "ஒழிக்கஒழியாமை". ஈச்வரனுக்கும் நமக்கும் இடையிலுள்ள 'ஆண்டான்-அடிமை' என்ற (स्वामित्व-दासत्व) रूपம். | स्वामिயான பகவான் प्रपत्तिயாலே प्रसन्नனாய், दासனாகிற நமக்கு பிறப்புரிமை போன்றதான, **அளவில்லாத फलத்தைத் தருவதால்.** |
| *3.பெரிய உபகாரத்தில்கூட अपेक्षै இல்லா (अवाप्तसमस्तकामனான) ஈச்வரன், प्रपत्तिயாம் சிறு कार्यத்துக்கு பெரிய फलத்தைத் தருவானா ?* | गुणं :- வேறொன்றையும் எதிர்பாராமை; பகவானின் दया-वात्सल्यादि गुणங்கள். | தன் இயற்கையான கருணையினால், நாம் செய்யும் சிறு கார்யமான प्रपत्तिயையும் பெரிய **உபகாரமாக எண்ணி फलं தருவதால்.** |
| *4.பகவான் क्षुद्रदेवதைகளைப் போல், உடனே फलன் தருபவனல்ல; ஆக, प्रपत्तिக்கு மட்டும் தாமதமின்றி (தாழாதே) फलத்தைத் தருவானா ?* | व्यापारं :-படைத்தல்/காத்தல் போன்ற தன் கார்யங்களுக்குத் தன் सङ्कल्पத்தைத்தவிர வேறு ஒன்றையும் (सहकारिயை) எதிர்பாராமை. | यजन-भजनादि व्यापारங்களுக்குத் தாமதித்து பலன் கொடுப்பனேயாகிலும், வேறு கதியில்லாமல் தம்மிடம் प्रपत्ति செய்தவனுக்கு, தன் उदारगुणத்தினாலும் स्वतन्त्र सङ्कल्पத்தினாலும், வேண்டிய பொழுதிலேயே **விரும்பிய *பலன்* அளிப்பதால்.** இதை विभीषण-काक वृत्तान्तங்களில் காணலாம். |
| *5.ஈச்வரன், ஒத்தாரும்/ மிக்காரும் இல்லாதவன் (समाधिक-दरिद्रன்). ஆதலால், மிகவும் தாழ்ந்த நம்மை தாரதம்யம் இல்லாமல் (தரம் பாராதே) தம்முடன் சேர்த்துக் கொள்வது எப்படி?* | प्रयोजनं :- மிகவும் நீசரான (தண்ணியரான) பிறருடைய பேறே, தன் பேறாகக் கொள்ளுதல். | स्वातन्त्र्य-दया-वात्सल्यादि गुणங்களையுடைய ஈச்வரன், தன்னை அடைந்தவர்க்குத் தன் प्रयोजनமாகவே **வேண்டியதைத் தருவதால்.** இதை कोसल देशத்தவரை ராமன் 'நற்பாலுக்கு உய்த்ததிலும்'; உலகத்தவர் प्रियமான குமாரனோடு समानமாக, கிளிக்கும் स्वयं प्रयोजनமாகவே பாலூட்டுவதிலும் காணலாம் |

## *12.साङ्गप्रपदनाधिकार:*

## *“அறவே பரமென்று அடைக்கலம் வைத்தமை”*

**ப**கவானைச்சேர்ந்த இந்த **ஆத்மா**வையும்/ அதைக்**காக்கும்** பரத்தையும்/ அச்செயலால் உண்டாகும் **பல**னையும், [ குருபரம்பரையை ஸேவித்து, த்வயம் முதலான மந்த்ரங்களைக் கொண்டு, த்யாக புத்தியுடன் * ] ஈச்வரனிடத்தில் ஸமர்ப்பித்தலே ப்ரபத்தியின் **அங்கி**யாகும்.

| *பலார்த்தீ* | | *ஸமர்ப்பணம் செய்யப்படவேண்டியவை* | |
|---|---|---|---|
| மோக்ஷார்த்தீ | -பக்தன்<br>-**ப்ரபந்நன்** | -स्वरूप /फल ஸமர்ப்பணம் | + ரக்ஷாபர ஸமர்ப்பணம் |
| **ப்ரபந்நன்** | -மற்ற பலனுக்காக<br>-மோக்ஷத்துக்காக | - रक्षण भर ஸமர்ப்பணம் | +ஸ்வரூப/ *பல* ஸமர்ப்பணம் |

**பரஸமர்ப்பணத்தை அநுஷ்டிக்கும்போது விட (த்யாகம் செய்ய) வேண்டியவை**

| **த்யாகங்கள்* (ஸம்பந்தத்தை அறுக்கை) | காரணம் |
|---|---|
| ***-கர்த்ருத்வம்*** (எனக்குத் திறனுண்டு என எண்ணுதல்) | பரஸமர்ப்பணம் செய்வதில், நமக்கிருக்கும் திறனையும்/ *ச*க்தியையும் அளித்தவன் எம்பெருமானே (இத் த்யாகத்துக்குப் பொருள் –*செயலை ஸ்வரூபேண* [செய்யாமல்] *விடுதல்* அல்ல; மாறாக, செய்துவிட்டு, “கர்த்ருத்வம் தன்னுடையது அல்ல” என **நினைத்தலே**) என்பதால் |
| ***-மமதா-*** (ஸ்வதந்த்ரமாகச் செய்கிறேனெனஎண்ணம்)<br>***-பலம்-*** (ப்ரஹ்மாநுபவம் எனக்கே என்ற எண்ணம்) | ஆத்மாவும்/ அதைச் சேர்ந்தவைகளும் பகவானுக்கே *சேஷ*மென்பதால், ப்ரபத்தி ரூப உபாயத்தை செய்வித்ததும்/ *பல*னும் பகவானுக்கே, என்பதால் |
| ***-பலோபாயத்வம்-*** (பலன்கொடுப்பது ப்ரபத்தி உபாயமே என்றஎண்ணம்) | *பல*மான பரிபூர்ண ப்ரஹ்மாநுபவ கைங்கர்யத்தை அடைவித்தது பகவானின் ப்ரஸாத ஸங்கல்பமே. (ஆக **பகவான் ப்ரதான *பலி*.** இந்த ஸங்கல்பத்தை உண்டாக்கிய ப்ரபத்தி அநுஷ்டானம், *’இடையிட்ட’* காரணம்தான்.) |

த்வயத்தில் பரஸமர்ப்பணத்தை (அங்கியை) **ஒரே முறை** அநுஸந்திக்கவேண்டிய இடம் — உபாயபரமான பூர்வ கண்டத்தில் (மஹாவிச்வாஸத்தை முன்னிட்ட/ கோப்த்ருத்வ்வரணம் அடங்கிய) ***ச*ரணம் ப்ரபத்யே** என்பதில்.

### விசேஷ விஷயங்கள்

1.ஒரு கார்யத்துக்குக் காரணங்கள்(हेतु) 3 **-அசேதநம்/ சேதநன்/ ஈச்வரன்**

ஒரு கார்யத்துக்கு ப்ரயத்நம் செய்பவர் (कर्ता) 2 **- சேதநன்/ ஈச்வரன்**

ஒரு கார்யத்தைத் தானாகவே செய்பவர் (स्वतन्त्र कर्ता) 1 **- ஈச்வரன்**

2.இங்கிருந்த நாள், அநிஷ்டாசரணமில்லாத கைங்கர்யத்தையும், *ச*ரீரத்தை விட்டபின் மோக்ஷத்தையும் சேர்த்து *பல*மாக ப்ரார்த்தித்து, ப்ரபத்தி செய்து, *ப*ரமில்லாது நிற்பவரே **நிபுணர்.**

# 13.कृतकृत्याधिकार:

## "வேள்வியனைத்தும் முடித்தவர்"

**ப**த்தன் அநுஷ்டித்த பரந்யாஸத்தை பகவான் ஏற்றுக்கொண்டபின், ப்ரபந்நன் இனி : **1) *பரமில்லா* தவனாய்; 2) ஸந்தேஹமற்றவனாய்; 3) பயமில்லாதவனாய்; 4) மகிழ்வுடன்,** பகவத் விஷயத்தில் *சாஸ்த்ர* விதிப்படி ஆஜ்ஞா-அநுஜ்ஞா கைங்கர்யங்களைச் செய்துவரவேண்டும். இந்த நிலை, முக்தனுடைய நிலைக்கு ஸமமானதாக இருக்குமாதலால், இவன் **க்ருதக்ருத்யன்** (செய்ய வேண்டியதைச் செய்து முடித்த வன்)/ **க்ருதார்த்தன்** (பயன் பெற்றவன்) என்று கொண்டாடப்படுவான்.

| **க்ருதக்ருத்யனின் நிலை** | அது கைகூடக் காரணம் |
|---|---|
| 1.பரமில்லாமை | -ப்ரபத்தி செய்தபின், அப்*ப*லத்தைப்பெற செய்யவேண்டியது ஏதுமில்லாமை;<br>-செய்யவேண்டியதை செய்து முடித்தமை;<br>-ஸ்வதந்த்ர/ ஸத்ய ஸங்கல்ப/ பலப்ரதனான பகவான் 'மா *சுச*:' (**இன்னும் செய்யவேண்டியன இருக்குமோ என்ற** கவலைவேண்டாம்) என அருளிச்செய்தது. |
| 2.ஸந்தேஹம்/ பயம் நீங்கியமை | -'என் ஒருவனையே உபாயமாகப் பற்று' என்ற ஈச்வரனின், **'நான் எல்லா பாபங்களினின்றும் உன்னை விடுவிக்கிறேன்'** என்ற ஸங்கல்பம் |
| 3.மன மகிழ்வு பெறுதல் | -மற்ற பயன்களில் நமக்கு வாஸனைகூட இல்லாமல் **கடையற** விட்டது;<br>-மற்ற உபாயங்களில் நமக்கு ஸம்பந்தம் இல்லாமல் **காம்பற** விட்டது;<br>-இதனால் தரித்ரனான நாம், முயற்சியின்றி பெறப்போகும் பகவத்கைங்கர்ய புருஷார்த்தத்தை ஒப்பிட்டுப் பார்த்தது |

**க்ருதக்ருத்யனின் நிலைச்சுருக்கம்**

| ப்ரபத்திக்கு முன் | ப்ரபத்திக்குப் பின் |
|---|---|
| "*ப்ரஸக்த சோகனாய்* (*சோகம்* உடையவனாய்) இருப்பது; இது இல்லாவிடில் உபாயபூர்த்தி உண்டாகாது; | 'காப்பாற்றுகிறேன்' என்ற பகவான் பேச்சில் நம்பிக்கை குறைந்தால், உபாயபூர்த்தியில்லாமையால் மோக்ஷம் விளம்பிக்கும்; ஆக "*வீத சோகனாய்*" (சோகத்தை விட்டு ஒழித்தவனாய்) நிற்கவேணும். |

### விசேஷ விஷயங்கள்

-'செய்த வேள்வியர்', பலன் உடனே கிடைக்காததால், **'தரித்ரர்"** ஆயினும், கைங்கர்யமெனும் **செல்வம்** உடையவராவர்;

-நித்ய-நைமித்திகங்களில், வேதம் விதித்தபடி மற்ற தேவதைகளின் பெயரைச்சொல்வதால், அவருடைய "பாரமைகாந்த்யம்" குறைவுபடாது; காரணம், அக்கர்மங்களால் தேவதைகளுக்கும் அந்தர்யாமியான எம் பெருமான்தான் ப்ரீதியடைகிறான்; 'செய்த வேள்வியரின்' உத்யேச்யமும், எம்பெருமானுக்கு ப்ரீதி செய்வதுதான். மேலும் (ப்ரதாந ப்ரதிதந்த்ராதிகாரத்தில் சொன்னதுபோல்) எல்லாப் பெயர்களும் பகவானை **நேராகவே குறிப்பதால்,** அவர் செய்யும் நித்ய-நைமித்திகங்களும், பகவதாராதநம்தான்.

## *14.स्वनिष्ठाभिज्ञानाधिकार:*
## *"மூன்றில் நிலையுடையார்"*

செய்த வேள்வியர், தங்கள் – **ஸ்வரூபம்/ அநுஷ்டித்த உபாயம்/ பெறப்போகும் புருஷார்த்தம்** ஆகிய – நிலைகளில் தொடர்ந்து தான் உறுதியுடன் நிற்பதை அறிந்துகொள்ள, சில அடையாளங்கள் :

| *நிலை* | *நிலையின் அடையாளங்கள்* | *நிலை ஏற்படக் காரணம்* |
|---|---|---|
| ***ஸ்வரூப நிஷ்டை*** :-<br>'ம' காரத்தின் - ஞானம் என்ற பொருளால், **அசித் வைலக்ஷண்ய**மும், **பகவத்க்ருபை**க்கு மூலமான ஆநுகூல்யமும்;<br>-'அவபோதநம்' என்ற பொருளால்,<br>**ஆகிஞ்சன்யம்/ விகாரமின்மை/ மகிழ்ச்சியுறுதல்,** ஆகியவையும் (முறையே) தோற்றும் | *பிறர் தம்மை அவமதிக்க நேர்ந்தால் :-*<br>-அவர் சொல்லும் குற்றமெல்லாம், உடலைப் பற்றியவை; **ஆத்ம ஸ்வரூப**த்தில் இல்லை, என வருத்தமுறாமல் இருத்தல்; | -அசித்தைவிட வேறான ஆத்ம வைலக்ஷண்யத்தை அறிந்தது; |
| | -தவறு இருப்பினும்/ இல்லாவிடினும்,'அதைச் **சொல்லி**, பாபத்தை வாங்கிக்கொள்கிறார்களே !' என அவர்பால் **க்ருபை**கொள்ளல்; | -எல்லா வஸ்துக்களிடத்திலும் **க்ருபை** வேணுமென்ற ஞானம் பெற்றது; |
| | -நாம் அநுஸந்திப்பதற்காக, **நிர்வேதகாரிகை**யில் பூர்வர்கள் தங்களிடம் தோஷமிருப்பதாக பாசுரமிட்டதை நாம் மறந்தநிலையில் 'பிறர் **நினைவூட்டுகின்றனரே**' என அவர்பால் நன்றியறிதல்; | -அவர் சொல்லும் தோஷங்கள் நம் **ஆகிஞ்சன்ய**த்தை உறுதிப்படுத்துவது; |
| | -நம் தீவினையை ஒட்டி, பிறரைக் கருவியாக்கி, லீலாரஸனான **ஈச்வரன்தான் பரிபவிக்கிறான்** எனத்தெளிந்து, அவர்கள்பால் மன விகாரமின்மை; | -**பகவானின் விருப்பப்படி பரிமாற** நிற்கும் நாம், அவனுக்கே *சேஷனாவது* |
| | -அநுபவித்தே கழிக்கவேண்டிய 'ஒப்புக் கொண்ட பாபத்தின்' ஒரு பகுதி அழிகிறது என **மகிழ்தல்** | -ஈச்வரனின் செயல்யாவும் நம் **ஹிதத்துக்குத்தானே** ! |
| ***உபாய நிஷ்டை*** :-<br>'மாமேகம் சரணம் வ்ரஜ' என்ற விதியும் 'ப்ரபத்யே' என்ற செயலும், 'நம:' என்றதில் குறிப்பும் | -**ஈச்வரனே** ரக்ஷகன் என்றிருத்தல்; | -தானோ/மற்றவரோ **தஞ்சமாகார்** என்றறிவது; |
| | -மரணமானால் மோக்ஷம்வேண்டி ப்ரபத்தி செய்த பிறகு, மரணத்துக்கு **அஞ்சாமை**; | -விரும்பியது கிடைப்பதால் **மகிழ்வது**; |
| | -காக்கும் *ப*ரத்தை பகவானிடம் சேர்த்த **தேற்றத்தோடு** இருத்தல்; | -நிச்சயம் காப்பானென்ற **மஹாவிச்வாஸ**முடைமை; |
| | -*ப*ரந்யாஸத்தை பகவானே செய்விக்கிறான் என்ற புத்தியுடன் **செயலைமட்டும் செய்தல்**; | -கர்த்ருத்வ த்யாகத்தில் தெளிவுடைமை; |
| | -*ப*லமான அநிஷ்ட நிவ்ருத்தியும்/ இஷ்டப்ராப்தியும் **பகவானே** அளிக்கிறான் என்றறிதல் | -*பல* **த்யாகத்தில்** தெளிவு உடைமை |
| ***புருஷார்த்தநிஷ்டை***:-<br>'ஆய/ நம:/அஹம்.. மோக்ஷயிஷ்யாமி' யில் | -தேஹயாத்ரைக்கு **விசாரமற்றி**ருத்தல்; | -ப்ராரப்த கர்மம் அநுபவிக்க **ஒப்புக்கொண்ட**தாலும் கடன் கழிவதாலும்; |
| | -ஸுக/ துக்கம் **கர்மாதீனம்** என்றிருத்தல்;<br>-பகவானையடைவதில் **த்வரையோடி**ருத்தல். | -பெரும் குற்றேவல் கிடைக்கப்போவதால் |

நிஷ்டையால் ப்ரயோஜனம் : -பாகவதாபசாரத்திலும்/ கைங்கர்யம் **ஆகாத** பலனிலும் மனது செல்லாது;
-பாக்ய விசேஷத்தால் பூமியிலேயே நித்யஸூரி (நிலத்தேவர்) ஆவோம்.

# 15. उत्तरकृत्याधिकारः
## "கடன்கள் கழற்றிய" அடிமை

***உத்த்ர க்ருத்யங்களின் ஸ்வரூபம் :***

1.முக்தரின் கைங்கர்ய பரம்பரைபோல் ஸ்வாதுதமமும், ஸ்வயம் ப்ரயோஜனமும் ஆனவை;
2.*சாஸ்த்ரத்தில்* வரையறுக்கப்பட்ட கால வி*சேஷ*ங்களை ஒட்டியவை;
3.அடுத்த ஸேவை செய்யவேண்டி, முன்னதை முடிக்கும்படிக்கு சங்கிலித் துவக்கானவை;
4.*சேஷி*யான ஈச்வரனின் ப்ரீதிக்குக் காரணமும்/ கார்யமுமாய் (புருஷார்த்தமாய்) இருப்பவை;
5.ப்ரபந்நனின் ஸ்வரூபத்துக்குத் தகுந்த 'காலக்கழிவுச் செயல்'களாய் நிற்பவை.

***ப்ரபந்நனின் செயல்கள் :***

"*சரீ*ராதிகளோடு தன் ஸம்பந்தம், பகவத் கைங்கர்யம் செய்யப் பயன்படும் அளவுக்கேயன்றி, ஸ்வாமித்வ உரிமையால் அல்ல" என்ற தன் நிஷ்டைக்குப் பொருத்தமான எண்ணத்துடன் :-

1)ரஹஸ்யார்த்தங்களை, ஈச்வரனின் **அவதாரமேயான ஆசார்யர்**களிடம் **முறைப்படி** கேட்கவேண்டும். இவ்வித நிஷ்டையுடையாரோடு பழகி, அவர்கள் அநுஷ்டாநத்தில் தனக்கு ஏற்றதை ஏற்கவேண்டும். *'க்ருதக்ருத்யராய் பலன் நிச்சயமாகிவிட்டதால், இனி எப்படியும் இருக்கலாம்'* என்ற **அசட்டை** கூடாது.
2)ஒருபோதும் தன் ஆகிஞ்சன்யத்தை மறக்காமல், **கார்ப்பண்யத்**துடன் இருக்கவேண்டும்.
3)கைங்கர்யத்தில் இதுவரை இழந்ததையேநினைத்து மனம்தளர்ந்துவிடாமல், இனி **'ஸாத்விக ஆஹாரம்/ ஸேவை/ *சாஸ்த்ர* பரிசீலனம்**' இவைகளில் மூண்டு, விஷயங்கள்பால் இந்த்ரியங்களுக்குள்ள 'பட்டிபுக்க' **வாஸனைகளை மாற்றுவிக்க** வேண்டும்.
4)ஆஜ்ஞா-அநுஜ்ஞா கைங்கர்யங்களை ***சாஸ்த்ர*முறைப்படி உகந்து/ அர்ச்சாவதாரத்**திடம்/ 'முறையாக ஸம்பாதித்த' த்ரவ்யங்களைக்கொண்டு/ **கடமையாக எண்ணி/ பாகவத கைங்கர்யம்** வரையாகச்செய்ய வேணும்; இதற்கு **ஸதாசார்ய ஸம்பந்தமே** காரணமாவதால், அவர்கள்பால் **நன்றியறி**தல் வேண்டும்;
இவை எல்லாவற்றுக்கும் முக்கிய காரணமான **ஈச்வரனின் ஸஹஜ** காருண்யத்தை நினைத்து, அவனிடம் நன்றியறிதலோடு இருக்கவேண்டும்.

***உத்தரக்ருத்யத்தில் உள்ளம்/உரை/செயலால் கொள்ள-விலக்கத் தக்கவையும், காரணமும்***

| *கரணங்கள்* | | *அதற்குக் காரணம்* |
|---|---|---|
| | கொள்ளத்தக்கவை | |
| மனஸ் | குருவின் முதற்கடாக்ஷம் முதலான உபகாரத்தை நினைப்பது | 'செய்நன்றி கொன்றவன்' ஆகாமைக்காக |
| வாக்கு | த்வயத்தை அநுஸந்திப்பது | உபாய நிஷ்டையை மறவாமைக்காக |
| மனோ/வாக்/காயம் | பகவத் கைங்கர்யத்தின் எல்லை நில-மான **பாகவத கைங்கர்யம்** | புருஷார்த்தம் நசித்தோ/ குறைந்தோ போகாமைக்காக |
| | **விலக்கத்தக்கவை** | |
| மனஸ் | உலக இன்பங்களில் ஆசை | புருஷார்த்த ருசி குறைபடாதிருக்க |
| வாக்கு | தன்னைப்பற்றி உயர்வாகச்சொல்வது | கார்ப்பண்யம் குலையாதிருக்க |
| மனோ/வாக்/காயம் | **ப்ரஹ்மவித்துக்களிடம் அபசாரம்** | பகவான் திருவுள்ளம் புண்படாமலிருக்க |

***உத்தரக்ருத்யத்தை ரஹஸ்யங்களில் அநுபவிக்கும் இடங்கள் :***

-மந்த்ர த்ரயத்தில். *பல*ங்களைக் காட்டும் இடங்களான "நாராயண பதங்களின் மேலுள்ள 'ஆய' உருபு; ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' ஆகியவைகளில் அநுஸந்திக்க ப்ராப்தம்.

## 16. पुरुषार्थकाष्ठाधिकार:
### நல்லடியார்க்கு ஆதரம்மிக்க அடிமை

*ஶேஷம்* = பிறர்க்கு அதிசயத்தை உண்டுபண்ணவேண்டுமென்ற நோக்கோடு கொள்ளப்படும் பொருள்.

:- பிரிவு
- ***அசித்து*** *ஶேஷமாவது*, பகவானுக்கு ***ஶரீரமாயிருந்து*** பெருமை சேர்ப்பதால்;
- **சித்து** *ஶேஷனாவது*, பகவானுக்கு தான் ***ஶரீரமாயிருப்பதை அறிந்து*** அவர்க்குபெருமை சேர்ப்பதால்; ஆகையால், **தாஸனாகி கைங்கர்யம்** செய்வான்.

| பகவத்கைங்கர்யம் | நித்ய/ முக்தர் | பத்தர் | |
|---|---|---|---|
| பண்ணுவது | ஈச்வர எண்ணத்தை நேராகவே அறிந்து | *சாஸ்த்ரத்திற்கு* விரோதமான செயல் | **சாஸ்த்ரத்தையொட்டிச் செய்யும் பாகவத கைங்கர்யம்** |
| செய்யக் காரணம் | பகவான் *ஶேஷி/ சரீரி* யாவதால் | *சாஸிதாவான ஈச்வ* ரன் பலனளிப்பதால் | *ஶேஷியின்* 'இஷ்டப்படி விநியோகிக்கும்' தன்மையால் |
| அதனால் ஜீவனுக்கு ஏற்படுவது | *ஶேஷிகொடுக்க* போக ரஸம்/ விரும்பிய ஆநுஷங்கிக பலன் | நரகம் அடைவது வரையிலான அநர்த்தம் | *ஶேஷியே* 'உதாரர்' எனக்கொண்டாடும் நிலை/ ஆநுஷங்கிகமாகத் தான் விரும்பிய பலன் |
| ஈச்வரனுக்கு | போக ரஸம் | லீலா ரஸம் | *ஶேஷிக்கு* போக ரஸம் |

**பகவத் கைங்கர்யமான புருஷார்த்தம், பாகவத கைங்கர்யம்** வரையில் பெருகுவது எப்படி?

| புருஷ வகை | | ஆவதின் காரணம் | பெறும் பயன் |
|---|---|---|---|
| பகவான் | -साक्षात् *ஶேஷி* | -स्वत: शेषिயாய் இருப்பதால் | -ஸ்வரூபம் பெறுகை |
| | -सद्वारक *ஶேஷி* | -भागवतர்க்கு आत्माவாய் நிற்பதால் | -ஸ்வரூபம் பெறுகை |
| பாகவதர் | -सद्वारक *ஶேஷி* | -भगवान् விரும்பி शेषिயாக்குவதால் | -पुरुषार्थकाष्ठै பெறுகை |
| | -अद्वारक *ஶேஷி* | -அவர் குணங்களே அடிமையாக்குவதால் | -पुरुषार्थकाष्ठै பெறுகை |
| பாகவதர் பெறுகை | -निरुपाधिक *ஶேஷன்* | -स्वाभाविकமாய் मुक्तदशैயிலும் உள்ளதால் | -ஸ்வரூபம் பெறுகை |
| | -औपाधिक *ஶேஷன்* | -भगवच्छेषभूतர் என்ற संबन्धज्ञानத்தோடு மற்ற பாகவதர்க்குப் பெருமை சேர்ப்பதால் | **-கோதற்ற पुरुषार्थकाष्ठै** பெறுகை |

### விஶேஷ விஷயங்கள்

1.குற்றங்களேயில்லாத परमैकान्ति-भागवतரின் உகப்பே स्वयंप्रयोजनமாக எப்போதும் விரும்பவேணும்.

2.தவிர்க்கவேண்டிய குற்றங்கள் :- a) பகவத்-பாகவதாபசாரத்தில் ஈடுபடுதல் (உத்தர க்ருத்யம்); b) மஹாவிச்வாஸ விரோதிகளான ஐவகை ஸந்தேஹம் கொள்கை (பரிகர விபாகம்); c) இதர தேவதைகளின் ஸம்பந்தம் (ப்ரபத்தி யோக்யாதிகாரம்); d) பகவானுக்கு அதீனமான தன் போகத்தில் ஸ்வாதீன-புத்தியுடைமை / ஸ்வார்த்த-புத்தியுடைமை (முமுக்ஷுத்வாதிகாரம்)

## 17. शास्त्रीयनियमनाधिकार:

## *“மேதினியில் இருக்கின்றோம் விதியினாலே”*

***சாஸ்த்ரம் எதற்காக ?***

”மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்’படி எம்பெருமானை வேண்டிய க்ருதக்ருத்யன், அது வரை இருக்க வேண்டியது அஜ்ஞான இருள் மண்டும் இவ்வுலகில்தான். ஆக, எம்பெருமான் திருவுள்ளம் அறிந்து/ நடந்து கோதற்ற புருஷார்த்தகாஷ்டை பெற, *சாஸ்த்ர*மெனும் கைவிளக்கு தேவை.

**ஸ்ரீ பாஷ்யகாரரின் உபதேசமே** நமக்குக் கைவிளக்கு. அது காட்டும் வழி :

1.ஆத்ம யாத்ரை, பகவததீநமாகையால் கரையவேண்டா; கரைந்தால், ’ஆத்மாவைக் காக்கும் பரத்தை பகவானிடம் ஸமர்ப்பித்தது பொய்யாம். தேஹயாத்ரை கர்மாதீநமாகையால் கரையவேண்டா; கரைந் தால், ’தான் (மரணம்வரை கர்மவினையை அநுபவிக்க) ஒப்புக்கொண்டதற்கு’ விருத்தமாகி, நாஸ்திகனாம்.

2.தன் சக்திக்குத் தகுந்தவாறு செய்யவேண்டிய கைங்கர்யங்கள் :

-ஸ்ரீபாஷ்யத்தை ஸதாசார்யரிடம் வாசித்தல்/ ப்ரவர்த்திப்பித்தல் *(அதற்கு சக்தியில்லையேல்)*

-அருளிச்செயல்களை வாசித்தல்/ ப்ரவர்த்திப்பித்தல் *(அதற்கு சக்தியில்லையேல்)*

-திவ்யதேச எம்பெருமானுக்கு நைவேத்யம்/ சந்தன-வஸ்த்ர-ஆபரண-திருவிளக்கு-திருமாலை சாத்துதல் *(அதற்கு சக்தியில்லையேல்)*

-த்வயத்தை அர்த்தத்தோடு அநுஸந்தித்தல் *(அதற்கு சக்தியில்லையேல்)*

-ஒரு வைஷ்ணவன், “நம்மவன்” என்று அபிமாநிக்கும்படி, அவர்க்கு பவ்யனாயிருத்தல்

3.ஸ்ரீவைஷ்ணரைக் கண்டால் – ஆதரித்து, சந்தனம்-பூ-நிலவு-தென்றல் கண்டதுபோல் **மகிழவேண்டும்**;
ஸ்ரீவைஷ்ணரை *அநாதரித்தால்*, எம்பெருமான் திருவுள்ளம் **சீறும்.**

-பகவத்வேஷிகளைக் கண்டால் பாம்பு-தீ போல் **அஞ்சவேண்டும்**;
பகவத்வேஷிகளை ஆதரித்தால், எம்பெருமான் திருவுள்ளம் **வெறுத்திருக்கும்.**

-ஸம்ஸாரிகளை, கல்-கட்டை கண்டதுபோல் **அநாதரித்து** நிற்க வேண்டும்;
ஸம்ஸாரிகளை ஆதரித்தால், ’இவன் ஞானம் பயன்படாமல்போகிறதே’ என **பகவான் அநாதரிப்பான்.**

-நல்வழிக்கு திரும்புவார்களேயானால், பகவத்வேஷிகளுக்கும் / ஸம்ஸாரிகளுக்கும் ஞானத்தை உண்டாக்கவும்; திருந்தாதவர்பால் ’ஐயோ’ என க்ருபை பண்ணவும் ப்ராப்தம்.

| *சாஸ்த்ரத்தை* விட்டு நழுவுவதால் அபாயம் | *சாஸ்த்ரத்தை* ஒட்டி ஒழுகுவதால் பயன் |
|---|---|
| பகவத் அப்ரீதியால் அநிஷ்டங்கள் ஏற்படும்; ஸத்வ ப்ரக்ருதிக்கு இதைவிட மேலான நரக மில்லை; இதைப்போக்க ப்ராயச்சித்த ப்ரபத்தி செய்யவேணும்; தவறினால் லகு-தண்டனை நிச்சயம். | -உபாயம் செய்யாதவரை, செய்யத்தூண்டும்;<br>-மந்த விச்வாஸிக்கு, மஹாவிச்வாஸம் ஊட்டும்;<br>-உபாஸகனுக்கு, விரோதிகளை நீக்கி பகவத் ப்ரீதிக்கு பாத்ரமாக்கும்;<br>-ப்ரபந்நனுக்கு, கட்டளை மீறலால் பகவத் அப்ரீதி வராமல் காத்து, ப்ரீதிக்கு பாத்ரமாக்கும் |

***மந்த்ரங்களில் இவைகளைக் குறித்த இடங்கள் :***

-विरोधि निवृत्तियைக் குறிக்கும் “नम:/ सर्व पापेभ्यो मोक्षयिष्यामि” ஆகிய இடங்கள்.

## விசேஷ விஷயங்கள்

வேதம்/ ஸ்ம்ருதி/ முன்னோர் அநுஷ்டானம்/ தூய மனதில் ஏற்படும் ஸங்கல்பம்/ தர்மத்தை ஒட்டிய குலம்-*சா*கை-தேசம் முதலிய கட்டுப்பாடுகள்/ பெரியோர்களின் நியமனங்கள்/ *ச*குனம்/ ஸ்வப்நம் முதலியவைகளும், எம்பெருமான் திருவுள்ளத்தை நாம் அறியும் ஸாதநங்களாகும்.



'எத்வேத்ர சிகர ஸ்பந்தே விச்வமேதத் வ்யவஸ்திதம்'

(ஸ்ரீ விஷ்வக்ஸேனர்)

# 18. अपराधपरिहाराधिकार:

## "மாளாத வினையனைத்தும் மாளும்" வகை

பாபங்களும்/ அவைகள் ப்ரபந்நனுக்குக் கழியும் வகைகளும்

| பாபங்கள் / கழியும் வகை | पूर्व पापங்கள் (ப்ரபத்திக்கு முன் செய்தது) | उत्तर पापங்கள் (ப்ரபத்திக்குப் பிறகு நேர்வது) |
|---|---|---|
| 1.1 भक्ति/ प्रपत्ति செய்யும் **முதல் க்ஷணத்தில்** | सञ्चितं (பலன் கொடுக்க) தொடங்காதவை; प्रारब्धं தொடங்கியவை | |
| 1.2 प्रपत्ति செய்யும் **முதல் க்ஷணத்தில்** | अनभ्युपगतं (அநுபவிக்க) (ஒப்புக்கொள்ளாதவை); अभ्युपगतं (ஒப்புக்கொண்டவை) விளைவுகள் | |
| 2. அவ்வப்போது செய்யும் उचित प्रायश्चित्तादिகளால் | - तत्व-हित तिरोधानं (தத்வ-உபாய அறிவை மறைத்தல்) -कर्मान्तर अनर्हता आपदनं (வேறு கர்மத்தில் இயலாமை) | |
| 3.मोक्षार्थ प्रपत्तियில் **சேர்த்து** செய்தாலோ / பிறகு **தனியாகச் செய்தாலோ** | | (प्रत्यवाय जनकत्वं ) पापारंभक पापा: (பாபங்களை விளைவிக்கும் பாபம்) (இருப்பினும் தேச-கால வைகுண்யத்தால் விளையலாம்) |
| 4. **अश्लेष**மாக (ஒட்டாமல்) கழியும் | - ஆபத்தில் बुद्धिपूर्वமாக - प्रामादिकமாக அறியாமல் - मूर्च्छा/ स्वप्न/ सुषुप्त्यादिகளில் | |
| 5.**पुन: प्रपदन**த்தால் | | अनापत्தில் बुद्धिपूर्वமாக |
| 6. पुन:प्रपदनं செய்யாதவனுக்கு **लघुदण्डனை அநுபவித்து** | | இச்சரீரம் முடிவதற்குள் கழியும் |

## விசேஷ விஷயங்கள்

-அபராதங்கள் நேர்வதற்குக் காரணம் : அசித்தின் தன்மையான जडत्व विकारादिகளோ/ ईश्वर स्वभावமான स्वातन्त्र्यादिகளோ, தனக்கு இருப்பதாக ஜீவன் भ्रमिக்கும் अविवेकம்; **இதற்குக் காரணம் पापारंभक पापத்தைப் फलனாகக் கொடுக்கும் पूर्वाघम्.** இதை அஞ்சுபவன், இதற்கும் சேர்த்து முதலிலேயோ/ பிறகு தனியாகவோ ப்ராயச்சித்தம் செய்யவேணும்.

-बुद्धिपूर्व उत्तराघத்துக்கு प्रायश्चित्तம் பண்ணாதபோது, தண்டனை உண்டென்றாலும், 'மறு-பிறவி/ நரகமடைதல்' என்பவை நேராது. ஆனாலும் **பாகவதாபசாரம்** நேராமல் விழிப்புடன் வர்த்திக்கவேணும்.

-எல்லா பாபங்களும் - பச்சாதாபம்/ செய்வதை நிறுத்திவிடுவது/ ப்ராயச்சித்தம் செய்ய முற்படுவது/ செய்து முடிப்பது என்ற 4 முறைகளால் – கால்/கால் பங்காக - அழிந்துபோகின்றன.

***சில ஸந்தேஹங்களும், ஸமாதானங்களும் :***

| ***ஸந்தேஹங்கள்*** | ***ஸமாதானங்கள்*** |
|---|---|
| *1.ப்ரபந்நனின் बुद्धिपूर्व उत्तराघத்தையும் பகவான் க்ஷமிக்கிறான் என்று சிலர் சொல்கிறார்களே? அப்படியானால், அதற்கான प्रायश्चित्तமோ/दण्डனையோ ஏது?* | இங்கு க்ஷமிக்கிறான் என்றதற்கு,'க்ஷமைகொள்ளப்பண்ணு-விக்கிறான்(அல்லது) க்ஷமையினால் பெரிய தண்டனையில் - லாமல் செய்கிறான்' என்று பொருள். இப்படிச்செய்வது முன் செய்த प्रपत्तिயினால் वशीकृतனான பகவானின் **क्षमाभेदं** என எண்ணி, அவனிடம் **कृतज्ञतै** வேண்டும் என்பதில் तात्पर्यम्. |
| *2.राक्षसिகளின் बुद्धिपूर्व उत्तराघத்துக்கு फलன் அளிக்காமல், त्रिजटा शरणागति யினாலேயே பிராட்டி மன்னித்தாரே?* | இங்கும், 'திருவடி நலியப்புகுகிறான்' என்ற பயம் உண்டான தால் स्वल्प दण्डனையும், பிராட்டியினாலே நலிவு விலகி क्षमै யும் ஏற்பட்டதே! இது வாளாலே ஓங்கி, விடுமாப்போலாகும். |
| *3.बुद्धिपूर्व उत्तराघं ஒட்டாது; அதற்காக க்ஷமை கொள்ளவேண்டா; கொள்ளா-விடினும், தண்டனை ஏதுமில்லை; இதனால் विळंब अक्षमர்க்கு மோக்ஷம் தாமதிக்காது; प्रारब्ध सुकृतविशेषத்தாலே இங்கு வரும் கைங்கர்யத்துக்கு குறை/ தடை ஏற்படாது.* | *बुद्धिपूर्व उत्तराघं ஒட்டாது* என்பதற்கு विशेष प्रमाणंஏதுமில்லை. இங்கு संदेहப்பட்டதெல்லாம் शरण्य/शरणागतिயினுடைய प्रभाव த்தைச் சொல்லும் अर्थवादமே; இப்படி ஒப்புக்கொள்ளா விட்டால் प्रपन्नரான पूर्वர்களின் अनुष्ठानத்துக்கும், प्रपन्नர்க்கான प्रायश्चित्तம் विधिக்கும் शास्त्रத்துக்கும், विळंब अक्षमர்க்கு विळंबம் சொல்லும் प्रमाणங்களுக்கும் विरोधம் வரும். |
| *4.सर्वपापेभ्यो मोक्षयिष्यामि என்றதால் प्रायश्चित्तமோ दण्डனையோ ஏது?* | இது सामान्य वचनं; प्रायश्चित्तिरियं साऽत्र यत्पुन: शरणं व्रजेत् என்று विशेषिக்கையால் இந்த கேள்வி தள்ளப்படுகிறது |
| *5.पुन: शरणागति என்பதுबुद्धिपूर्व उत्तराघ த்துக்கும் சேர்த்து, அடியிலே प्रपत्ति செய்யாதார்க்குச் சொன்னது !* | *उत्तराघ निवृत्यर्थமாகவும் प्रपत्ति செய்யலாம்* என विधिக்கும் स्पष्ट वचनं ஏதுமில்லை; *ஒருவேளை இருந்தால்*, இந்த செட்டை (सामर्थ्यத்தை) ஒருவரும் விடுவாரில்லையாகையால் पुन: प्रपत्ति विषयं, निर्विषयமாம்; மேலும் 4-ல் சொன்னபடி सामान्य वचनத் தால் विशेष प्रमाणத்தைத் தள்ளமுடியாது |
| *6.विशेष वचनமில்லாவிட்டாலும் स्वेच्छै யினாலேயே बुद्धिपूर्व उत्तराघத்துக்கும் சேர்த்து, அடியிலே प्रपत्ति பண்ணாலோ?* | उपासनத்திலும், अङ्गप्रपत्तिயிலும்கூட அடியிலே बुद्धिपूर्व उत्तराघத்தையும் சேர்ப்பதில்லையே! *ஸரி சேர்க்கலா*மென்றால் भाष्यादिகள்/ उषस्तिप्रभृतिகள் अनुष्ठानத்துக்கு विरोधिக்கும். न्याय शास्त्रப்படி "நிமித்தம் **உதித்தாலல்லது**, நைமித்திகம் வாராது" (பாபம் உதிப்பதற்கு **முன்பே**, அதைப்போக்க ப்ராயச்சித்தம் செய்வது என்பது பொருந்தாது) |

## 19. स्थान विशेषाधिकार:

*“வானாடுகந்தவர்*

*வையத்திருப்பிடம் நன்னிலம்”*

**ஆ**ர்யாவர்த்தமே, (இமய-விந்த்ய மலைகளுக்கு இடையே உள்ள பகுதி) அபராதங்கள் கலவாத, स्वयंप्रयोजनமான भगवत्-भागवत कैङ्कर्यरूप கர்மாக்கள் செய்ய ஏற்ற இடமாக *சாஸ்த்*ரங்கள் சொல்கின்றன. ஆனால், கலியின் ஸ்வபாவத்தால் ம்லேச்சர்களின் வசப்பட்டு அப்பகுதிகளில் வர்ண-தர்மங்கள் கலங்கியிருக்கின்றன; ஆகவே, ப்ரபந்நன் பகவத்-பாகவத கைங்கர்யங்களை ஸரிவர அநுஷ்டிக்க அவைகள் ஏற்றதாக இல்லை.

-ஆகையால், எம்பெருமானின் திருவாராதந-கைங்கர்யத்துக்கு அநுகூலமாயும்/ பாகவதர்களின் திருவுள்ளத்துக்கு உகப்பாயும், வர்ண தர்மங்கள் நிலைபெற்றதாயும், **மிகவும் முக்கியமாக**, வேறு தேவதையினிடமோ/ *பலத்*திலோ நாட்டமில்லாத ப்ரபந்நர்கள் இருப்பதுமான இடங்களே, இந்த க்ருதக்ருத்யனுக்கு தகுந்த வாஸ ஸ்தலங்களாம்.

-அவைகளில், स्वयं व्यक्त/ सैद्ध/ वैष्णव क्षेत्रங்கள் மிகவும் உயர்ந்தவை.

-அவைகளிலும் **ஆழ்வார்-ஆசார்யர்கள் உகந்ததாயும்/ தனக்கு ஸௌகர்யமாயும் இருப்பவையே வஸிப்பதற்கு உசிதம்.** இக்கருத்தைக் கூறும் ஸ்வாமி தேசிகனின் பாசுரம் :

தேனார் கமலத் திருமகள்நாதன் திகழ்ந்து உறையும்
வானாடு உகந்தவர் வையத்திருப்பிடம் வன்தரும
கானார் இமயமும் கங்கையும் காவிரியும் கடலும்
நானாநகரமும் நாகமும் கூடிய நன்னிலமே.

### <u>*விசேஷ விஷயங்கள்*</u>

-இக்காலத்துக்கு, த்ராவிட தேசத்திலுள்ள புண்ய நதிக்கரைகளே வாஸத்திற்கு உகந்தவை.

-இப்படியானபோதிலும், 'ப்ரபந்நனுக்கு எந்த இடத்தில் ப்ராண-வியோகம் ஏற்பட்டாலும், மோக்ஷம் பெறுவதற்குத் தடையில்லை' என்று ப்ரமாணங்கள் சொல்வது, प्रपत्तिயின் फलத்தைச் சொல்ல வந்ததே தவிர. அதை வைத்து, *ப்ரபந்நன் வாஸ ஸ்தாநமாக எதை வேண்டுமானாலும் அமைத்துக் கொள்ளலாம்* என பொருள் கொள்ளக்கூடாது.

## 20. निर्याणाधिकार:

## "உடலச்சிறை வெட்டிவிட்டு வழிப்படுத்தும் வகை"

प्रपन्नன் சரீரத்தைவிடும் நாள்வரை, परमैकान्त्यத்துக்குத் தகுந்த செயல்களைச் செய்துவரும்போது प्रारब्धसुकृतविशेषத்தாலும் प्रपत्तिसङ्कल्पविशेषத்தாலும் பெரும்பாலும் அபராதங்கள் நேராது; இருந்தாலும், प्रारब्धपापविशेषத்தினால், निर्याणं தாமதிக்கலாம். அவ்வித பாபங்களின் விதங்கள், விளைவு, எதுவரை மோக்ஷம் தாமதிக்கும், அவை கழியும்வகைகள் முதலியவை இவ்வாறு :

| பாபம்/ விளைவு | अवधि | விவரணம் |
|---|---|---|
| 1.अहङ्कार-ममकारம்<br>அதனால்<br>अपचारம் | विवेकावधि<br>-क्षामणावधि<br>-शिक्षावधि | -விவேகத்தினால் உண்டாகும் தெளிவால் கழியும்.<br>-மோக்ஷம்பெற **காலம்குறித்த** प्रपन्नனுக்கு, परिहारம் செய்தாலோ அல்லது தண்டனை அநுபவித்தோ கழிந்து, **கோரிய காலத்திலே** மோக்ஷம் கிட்டும்.<br>**காலம் குறிக்காதவனுக்கு**, परिहारம் செய்தாலோ அல்லது தண்டனை அநுபவித்தோ கழிந்து, **விளம்பித்து** மோக்ஷம் கிட்டும். |
| 2.प्रयोजनान्तरம்<br>அதனால்<br>देवतान्तर स्पर्शம் | -वैराग्यावधि<br>-लज्जावधि | **-காலமும் குறித்து-** வேறு பலனையும் வேண்டியவனை பகவான் திருத்தும் வழி : 1) பலன் கொடுக்காமல் உபேக்ஷை செய்வான்; 2) பலனின் अल्पादिகளை உணர்வித்து, நாட்டத்தை நசிப்பான்; 3) सौभरि/ कुचेलादिகளுக்குப்போல், போகங்களைக் கொடுத்து-பச்சாதாபம் பிறப்பித்து, பிறகு விடச்செய்வான்.<br>- **காலம் குறிக்காதவனுக்கு**, भोगம் அநுபவித்தபின் விளம்பித்து வைராக்யம் பிறக்கச் செய்வான்.<br>-परमैकान्तिகளோடு சேர்த்துவைத்து, व्यभिचारத்தைத் தீர்ப்பான்;<br>-பின்னும் **நிலை நின்றால்**, (प्रमाणद्वय विरोधे सति विषय व्यवस्थापनं என்ற अर्थापत्ति பலப்படி) उपायस्पर्शம் இல்லையென்றாவதால் **மோக்ஷம் கிட்டாததோடு** நரகமும் உண்டு; ஆனால் செய்த உபாயத்துக்கு என்றேனும் ஒரு நாள் उपायपूर्ति/ फलன் உண்டு. |
| 3.बुद्धि दौर्बल्यம்<br>அதனால்<br>उपायान्तर प्रत्याशै | -महाविश्वास-<br>अवधि | -பொதுவாகப் பிறவாது; பிறந்தால் विश्वासमान्द्यம்தான் காரணம். இதை பகவான் महाविश्वासமாகத் திருத்தி पूर्णप्रपत्तिनिष्ठராக ஆக்குவான். |
| பாபம் செய்யாதவர்-க்கு | -इच्छावधि | - प्रारब्धसुकृतविशेषத்தாலோ प्रपत्तिसङ्कल्पविशेषத்தாலோ निरपराध कैङ्कर्यம் செய்பவர்க்கு, தாமதம் இல்லை. |

மேலும், ஜீவன் உபாயம்செய்யத் தொடங்கியதுமுதல், ப்ராப்தி-விரோதியான உடலச்சிறையை வெட்டிவிடும் வரை, எம்பெருமான் செய்தருளும் உபகார-பரம்பரை இந்த அதிகாரத்தில் இவ்வாறு அடுக்கப்படுகிறது :

எம்பெருமான் காட்டிய வழியில் வெளியேறிய பிறகு, இந்த ஜீவனுக்கு अज्ञानं நீங்கி,

**பகலான பரமபதம் செல்லும் வழியும் எப்போதும் ஒரே பகலாம்.**

*(இங்கு 8/ 9-ல் சொன்ன வழி, உபாயம் செய்தவனுக்கும்/*
*செய்யாதவனுக்கும் பொதுவான उत्क्रान्तियாகும்)*

11.ஜீவனை अर्चिरादि मार्गத்துக்கு வழியான 101–வது (மேல்) நாடி (ब्रह्म/ सुषुम्ना/ मूर्धन्य नाडि)யில் நுழைத்து, ஸூர்யகிரணங்களைப் பிடிக்கவைத்து வெளியேற்றுகிறான்.

10.स्थूल शरीरத்தைவிட்டு வெளியேற பல நாடிகள் உள்ளன; அவைகளில் स्वर्गादिகளுக்கு மேலேசெல்லும் 100 நாடிகளிலோ/ नरकादिகளுக்கு கீழே செல்லும் பல நாடிகளிலோ இந்த ஜீவன் போகாதபடி வழி விலக்குகிறான்.

9. கடைந்தெடுத்த தருணத்தில் ஜீவனுக்கு உண்டான சோர்வெல்லாம் நீங்கும்படி हार्दனான பகவான் தன் பக்கத்தில் வைத்துக் களைப்பாற்றி, பிறகு வெளியேறச் செய்கிறான்.

8. ஸமயம் வந்தவுடன் ஜீவனின் कर्म-ज्ञानेन्द्रियங்கள் பத்தையும் மனஸ்ஸோடும்; மனஸ்ஸை ப்ராணனோடும்; ப்ராணனோடு சேர்ந்த ஜீவனை स्थूल शरीर முதுகின் நடுவிலுள்ள மூன்று நரம்புகளைக் கடைந்தெடுத்த पाञ्चभौतिक सूक्ष्म शरीरத்தோடு சேர்க்கிறான்.

7. தனியான நியமம் ஏதுமின்றி, சரீரம் விழும் ஸமயத்திலுள்ள ஏதேனும் ஒரு காரணத்தை வ்யாஜமாக்குகிறான்.

6. ஜீவன் சரீரத்தை விடுவதற்கென, சாஸ்த்ரங்கள் பொதுவாகச் சொன்ன தேச-கால நியமங்கள் ப்ரபந்நனுக்கு இல்லாதவாறு, தான் ஸங்கல்பித்த ஸமயத்திலேயே ஜீவனுடைய இச்சையைப் பூர்த்தி செய்கிறான்.

5. ப்ரபந்நனின் இசைவுப்படி இச்சரீர முடிவில் பரமபதம் தரநினைந்து, இவன் இசைந்த प्रारब्ध कर्मத்தைத்தவிர மற்றவையை முன்பே கழித்ததால், மீதத்தை शरीरपात समयத்தில் இவனின் अनुकूल/ प्रतिकूलர்களுக்கு फलமாக பங்கிடுவதுபோல் செய்கிறான்.

4."இனிப்பிறவி வேண்டாம்; இப்போதே அழைத்துக்கொள்" என வேண்டும்படியான விரைவை உண்டாக்குகிறான்.

3. பரமபதம்பெற, ப்ரபந்நன் இசைந்த தாமதத்துக்கு வருந்தி, வேண்டினால் இப்போதே தர ஆவலோடு நிற்கின்றான்.

2. ப்ரபந்நனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் ரக்ஷிப்பதற்காகவும்/ அவர்களின் बुद्धिपूर्व उत्तराघத்தைக் கழிப்பதற்காகவும், தக்க अनुग्रह सङ्कल्पத்தைப் பண்ணுகிறான்.

1.ப்ரபத்தி வாக்ய ஆரம்ப க்ஷணத்திலேயே प्राप्ति-विरोधिயான தன் निग्रह सङ्कल्पத்தை விலக்கிக் கொள்கிறான்.

## *21. गतिचिन्तनाधिकार:*

## *"வானேறும் வழிகண்டோம்"*

ஒரு உபாயத்தைச் செய்வதற்கு **முன்**, அதற்குத் தகுதி ஏற்பட வேண்டுமானால், அதன் பலத்தைப் பெறுவதில் ஆசை இருப்பது மிகவும் அவச்யம். இந்த ஆசைதான் मोक्षफलविषयத்தில், அதன் पर्वाக்களை அநுஸந்திக்கவைக்கிறது. உபாயம் செய்த **பிறகோ**வெனில், அப்பலன் கிடைக்கும்வரையிலும் பலனின் அதிசயத்தை நினைத்துக்கொண்டிருப்பது, அப்फलன்மீது நமக்கு இருக்கும் அன்பை மேலும் வளரச்செய்வதோடு, அதுவே ஒரு स्वयंप्रयोजनமான அநுபவமாக அமைகிறது.

கீழே சொன்னதுபோல், உடலச்சிறையிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜீவனை, ब्रह्मनाडिயில் நுழைத்தது முதல் தன் தாளிணைக்கீழ் கொள்ளும் வரையில், எம்பெருமான் வழி நடத்திச்செல்லும் வகைகள் இந்த அதிகாரத்தில் இவ்வாறு **அநுபவமாக** அநுஸந்திக்கப்படுகின்றன :

6. இப்படி நடத்திச்சென்ற ஜீவனை, முன் இழப்பெல்லாம் தீரும்படி, பகவான் தன்னை முழுவதும் அநுபவிக்க அளித்து, भोगसायुज्यं அநுபவிக்கும் सजातीयரான नित्य-मुक्तர்களோடு வாசியற பரிமாறுகிறான்.

↑ ↑

5. இப்ப்ரபந்நனை பகவான், ஒவ்வொரு नित्यसूरिகளின் திருமாளிகையிலும், अप्राकृतமான राजोपचारங்களை அநுபவிக்கப்பண்ணி, आनन्दमयமான मण्टपरत्नத்தில் नित्य-मुक्तர் गोष्टियிலே சேர்க்கிறான்.

↑

4. 500 दिव्य अप्सरस्ஸுகளால் ब्रह्मालङ्कारं செய்வித்து ब्रह्म गन्ध-रस-तेजस्ஸுக்கள் பெற்ற ஜீவனை, नित्यसूरिகள் வரவேற்று, इन्द्र-प्रजापति(வாயிற்காப்போர்)களிடம் அழைத்துச் செல்லவைக்கிறான்.

↑

3. அங்கு ऐरंमदीयं என்ற सरस्, सोम सवन அரசமரம் இவற்றைக் கண்டு அநுபவிப்பிக்கிறான்.

↑

2. ஜீவன் காணவிரும்பிய श्रीवैकुण्ठத்தில் நுழையும் முன்பு கடக்கவேண்டிய விரஜா நதியின் இக்கரையிலேயே தன் सूक्ष्म शरीरத்தை விடப்பண்ணி தன் ஸங்கல்பத்தால் நதியின் அக்கரை சேர்ப்பித்து अप्राकृतமான शरीरம் பெறுவிக்கிறான்.

↑

1. ब्रह्मनाडि வழியாகச்செல்லும் ஜீவனை अर्चिरादिगतिயின் अभिमान देवதைகளான अर्चिस् முதலானோர் அளிக்கும் भोगங்களை அநுபவிப்பிக்கிறான்.

இந்நிலையில் ஜீவன், सर्व कर्म-वासना-प्रकृति संबन्ध निवृत्तिயும் ज्ञान सङ्कोच/ अविद्या निवृत्तिயும் பெற்று निजस्वरूपம்தெளிந்து, எம்பெருமான் மனோரதத்துக்கு ஒக்க தான் ஆசைப்பட்ட கைங்கர்யங்களை எல்லாம், தன் आत्मा இருக்குமளவும் செய்துகொண்டு உகக்கிறான். இவனுடைய உகப்பாலே பகவானும் निरतिशय आनन्दனாய் இருக்கிறான்.

**ஆக, ஜீவனுடைய शेषवृत्तिயானது सार्थकமாகிறது. शेषिக்கு ஒரு अतिशयத்தைச் செய்பவன்தானே शेषन் !**

## *22. परिपूर्णब्रह्मानुभवाधिकारः*

## *'அந்தமிலாப் பேரின்பம் அருந்துதல்'*

## *"குருக்கள் குரைகழற்கீழ் மகிழ்ந்தெழும் போகத்து மன்னுதல்"*

**அ**டைய வேண்டியவைகள் (परमपदं) மூன்று. ब्रह्मानुभवத்தைப்பொருத்தவரை :

- निरतिशय अनुकूलனாயிருப்பதால், गुणविग्रहविभूत्यादिகளோடு **ईश्वरன்** परमपदமாகிறான்;

- இந்த भगवदनुभवம் அங்கு சென்ற பிறகே உண்டாவதால், **श्रीवैकुण्ठமும் परमपद**மாகிறது ;

–ब्रह्मानुभवத்துக்கு आश्रयமாயும் भगवद्विभूतिயிலே சேர்ந்ததாயும், ज्ञानानन्दमयனாயும் இருப்பதால், **मुक्तात्माவும்** परमपदமாகிறது.

**மோ**க்ஷம் அடைந்த ஜீவனுடைய भोगसायुज्य अनुभवமானது :

1.எல்லா இட-கால-நிலைகளிலும், கணக்கற்ற गुण-विग्रह-विभूति-चेष्टितங்களில் ஒன்றும்விடாத, எம்பெருமானை कैङ्कर्य पर्यन्त परिपूर्णமாக அநுபவிக்கும் நித்யமான निरतिशय भोगமாயிருக்கும்.

2.भगवत्कैङ्कर्यமாக, ஜீவன் लीलाविभूतिயில் வந்தாலும் परिपूर्णत्वத்துக்கு குறைவின்றி இருக்கும்.

3.ईश्वरனுடைய लीलाविभूतिயையும் मुक्तात्माவுக்கு भोग्यமாக ஆக்கும்.

4.भगवाனுக்கும் – मुक्तனான இந்த ஜீவனுக்கும் ஸமமாகவே இருக்கும். இந்த साम्यத்தைவைத்து, ***जीव-ब्रह्म ऐक्यமாக*** எண்ணிவிடக்கூடாது. ஏனெனில் :

-**ईश्वर**னுக்கு जगत्कारणत्व/ मोक्षप्रदत्व/ सर्वाधारत्व/ सर्व नियन्तृत्व/ सर्व शेषित्व/ सर्व शरीरित्व/ सर्वशब्द वाच्यत्व/ सर्ववेद वेद्यत्व/ सर्वलोक शरण्यत्व/ सर्व मुमुक्षु उपास्यत्व/ सर्वफलप्रदत्व/ सर्वव्याप्त ज्ञानानन्द स्वरूपत्व/ लक्ष्मी सहायत्वादिகள் **प्रतिनियत**ங்கள்.

-எதிர்த்தட்டான **मुक्त**னுக்கு आधेयत्व/ विधेयत्व/ शेषत्व/ अणुत्वादिகள் **व्यवस्थित**ங்கள்.

-மேலும், இதைச்சொல்லும் सायुज्यं என்ற சொல்லுக்கு, ऐक्यं பொருளாகாது;

### விசேஷ விஷயங்கள்

1. ஸ்ரீவைகுண்டத்தை அடைந்த பிறகு, முக்தனான ஜீவன் ஸம்ஸாரத்துக்கு ஒருபோதும் திரும்பி வருதல் என்பது கிடையாது; ஏனென்றால் :

-இப்போதுள்ள ज्ञानं, विच्छेद-सङ्कोचங்களில்லாததால், '**அறியாமை**யினால் திரும்புவது' நேராது;

-मुमुक्षुदशैயில், अचित् ***மாத்திர/*** அல்லது चित् ***மாத்திர*** (கைவல்யத்தில்) அநுபவம் மட்டுமே உண்டாவதால், அவைகளில் வைராக்யம் பிறக்கிறது; मुक्तदशैயிலோ, ब्रह्मात्मकமான **எல்லாவாற்றை**யும் அநுபவிக்க முடிகிறது; மேலும், இப்போது வந்திருக்கும் विकसितज्ञानத்தால், வேறு பலன்களில் உள்ள दोषமெல்லாம் நேராகவே தெரிகின்றன. ஆகையால் ***தன்னிச்சை***யாக 'திரும்புவது' (आवृत्ति) என்பது இல்லை;

**-ईश्वर**னுடைய **इच्छै**யினால் आवृत्ति ஏற்படலாம் என்பதும் இல்லை; காரணம் : பகவானின் सङ्कल्पங்களெல்லாம் சாஸ்த்ரங்களின் துணையின்றி प्रत्यक्षமாகவே தெரிவதால், முக்தனுக்கு பகவானிடம் ப்ரீதியாக உருவெடுத்த ज्ञानமானது निरतिशयप्रीतिरूपமாக ஆகிறது; பகவானின் ப்ரீதியும், கட்டுக்கு அடங்காமல் கரைபுரண்டு, முக்தனோடுமட்டுமின்றி அவனுடன் ஸம்பந்தம் உடையவர்களிடமும், ஏறிப்பாயும்படி ஆகிறது. அப்படி நிற்கும் பகவான், முக்தனை ஒருபோதும் திருப்பியனுப்பமாட்டான்.

2. प्रकृतिमण्डलத்தில் भगवाனுடைய पूर्णसंबन्धம் இல்லாமையால் बद्धனுக்கு कर्मानुगुणமாக वस्तुக்கள் प्रतिकूलமாயோ-अल्प अनुकूलமாயோ தோற்றும்போதிலும், नित्यविभूतिயில் சேர்ந்த मुक्तனுக்கு இவையே निरतिशय भोग्यமாகின்றன.

3. எம்பெருமானுக்கும்-முக்தாத்மாவுக்கும் விளையும் மோக்ஷானந்தத்தைக் குறிப்பதாக வேதங்கள் சொல்லும் : **-सायुज्यं** என்றால், அநுபவிக்கப்படும் **பொருளைப்**பொறுத்தவரை வாசியில்லாமை;

**-सार्ष्टि**தை என்றால், இருவரின் **அநுபவ**த்தில் வித்யாஸம் இல்லாமை ஆகும்.

4. *முதலில் முக்தரானவர்க்கு, இப்போது முக்தராவாரைவிட ஆனந்தம் அதிகம் இல்லையா ?* என்றால், பிற்பட்டவர்க்குக் காலத்தினால் உண்டான குறைவேதவிர, आनन्दस्वरूपத்தில் ஏதும் குறைவில்லை; அதாவது, **நாளிழவே போக்கிப் பொருளிழவு இல்லை.**

***மந்த்ரங்களில் இவைகளைக் குறித்த இடங்கள் :***

இப்படிப்பட்ட स्वेच्छासिद्धமான आनुकूल्यத்தை உடைய प्रकारங்களோடுகூடின षीमन्नारायणனே प्राप्यன் என்பதை, अष्टाक्षर-द्वयங்களில் चतुर्थ्यन्त पदங்களில் அநுஸந்திக்க ப்ராப்தம்.

<u>अर्थानुशासन भागத்தின் சுருக்கம்</u>

**"अनादि कालம் ஸம்ஸரித்துப்போந்த क्षेत्रज्ञன் अवसरप्रतीक्षैயான भगवत्कृपैயாலே புரிந்து, समीचीन शास्त्रमुखத்தாலே तत्व-हित-पुरुषार्थ विशेषங்களைத்தெளிந்து, मुमुक्षुவாய், स्वाधिकारानुरूपமாயிருப்பதொரு उपायविशेषத்தை परिग्रहित्तु कृतकृत्यனாய், தன் निष्ठैயைத்தெளிந்து, அதுக்கு अनुरूपமாக இங்கிருந்த நாள் यथाशास्त्रம் निरपराधமாகப்பண்ணும் कैङ्कर्यरूप पुरुषार्थமிருக்கும்படியும், शरीरपातानन्तरं अर्चिरादिगतिயாலே अप्राकृतदेशविशेषத்திலே சென்றால் இவனுக்கு अनवच्छिन्न भगवदनुभव परीवाहமாக வரும் परिपूर्ण कैङ्कर्यरूप परमपुरुषार्थसिद्धि இருக்கும்படியும் சொல்லப்பட்டன."**

இப்படிச் சுருக்கும் ஸ்வாமி தேசிகனுடைய காரிகை மிகவும் ரஸமானது :

1 2 3,4,5,6 7 8

संदृष्टः सारवाग्वित् स्वपरनिशितधीः सङ्गजित् नैकसंस्थः

9 10 11 12 13

स्पष्टोपायः अतिखिन्नः सपरिकर भरन्यास निष्पन्नकृत्यः ।

14 15, 16 17 18 19

स्वावस्थार्हं सपर्याविधिं इह नियतं व्यागसं क्वापि बिभ्रत्

20, 21 22

निर्मुक्त-स्थूल-सूक्ष्मप्रकृतिः अनुभवति अच्युतं नित्यं एकः ॥

[ ச்லோகத்துக்கு மேலே குறியிட்டிருக்கும் எண்கள், க்ரந்த அதிகாரத்தின் எண்களைக் குறிப்பதாகும். அதிகாரத்தின் பொருளைச் சுருக்கிக் காட்டும் பதங்கள், எண்களால் சுட்டிக்காட்டப்பட்டன ]

## *23. सिद्धोपायशोधनाधिकार:*

*"திருநாரணனே மன்னிய வன்சரண்"*

***अ***र्थानुशासन *भाग*த்தில் அறிந்துகொண்டதை மறுபடி அறியவேண்டியதன் அவசியம் என்ன?*

-கலக்கமின்றி, सूक्ष्मतम अर्थங்களை அறிகைக்காக;

-கலங்கியவர்களைத் தெளிவடைவிப்பதற்காக.

**सिद्धोपायமான எம்பெருமான் விஷயமாக உண்டாக்கப்படும் கலக்கங்களும்/ ஸமாதானங்களும்**

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| எம்பெருமானின் स्वातन्त्र्यं மற்றும் सहज कारुण्यத்தைப் பற்றியது | |
| *- **स्वतन्त्र**னான எம்பெருமானால் சிக்ஷையாக அளிக்கப்பட்ட, இக்கலக்கங்கள் தெளிவுறுமா ?* | **தெளிவுறும்** ; அதற்கான காரணங்கள் :-<br>1)பிராட்டி திருவடியில் ஜீவன் செய்த पुरुषकार प्रपत्तिக்கு, அவர் **'अस्तु ते, तयैव सर्वं संपत्स्यते** ' என்றருளும் திருமுகப்பாசுரம்.<br>2) நல்லாசிரியர்களின் अनुग्रहம்.<br>3) உயர்ந்த ஸம்ப்ரதாயத்தைப் பெறுகை. |
| *எம்பெருமான் இந்நாள்வரை நம்மை अनादरित्ததற்கும், இன்று रक्षिப்பதற்கும் அவனுடைய **स्वातन्त्र्यं** தானே காரணம் ?* | **இல்லை**; *स्वातन्त्र्यத்தால் अनादरिப்பதோ/காப்பதோ* செய்தால், 'தவறு செய்தவனாகிலும்/ செய்யாதவனாகிலும்' ஒன்றுபோல் ரக்ஷிப்பதாக ஆகி, 'செய்தவன்'பால் **பக்ஷபாதம் காட்டுபவன்** என்ற தோஷம் வரும்; இருவரையுமே காக்காமல் விட்டால், **தயை இல்லாதவன்** என்ற தோஷம் தட்டும். ஆகையால், கர்மங்களின் அடிப்படையில் பலன் கொடுக்கும் எம்பெருமான், உரிய ஸமயம் வந்தவுடன் बद्धजीवனை ஒரு व्याजத்தை செய்ய வைத்து, அதைக் **காரணமாக** வைத்து ரக்ஷிக்கிறான். |
| *உரிய ஸமயம் வருவதுதான் காரணமென்றால், எம்பெருமான் **स्वातन्त्र्यं** வீண்தானே !* | **இல்லை;** व्याजத்தை முன்னிட்டு, தான் நினைத்த காலத்தில் बद्धजीवனைக் காப்பாற்றும்போது, '**எவராலும் தடுக்கமுடியாமல் போவதற்கு**', இந்த स्वातन्त्र्यंதான் பயன்படுகிறது. |
| *व्याजத்தையிட்டு காக்கிறான் என்றால் **कारुण्यं**வீண்தானே; மேலும், कारुण्यं என்ற परदु:ख दु:खित्वं பகவானுக்கு எப்படி भोग्यமாக ஆகும் ?* | व्याजं இன்றிக் காத்தால், **பக்ஷபாதம் காட்டுபவன்** என்ற தோஷம் வரும்; व्याजं என்றதாலேயே முக்கிய காரணமல்ல என்றாகி, **प्रधान कारणं**, பகவானின் कारुण्यंதான் எனவாகிறது; ஆக कारुण्यं வீணாவதில்லையே !<br>-*परदु:ख दु:खित्वं* என்பது हेयगुणமாதலால், हेयமேயில்லாத பகவானின் कारुण्यத்தை, **परदु:ख निरास चिकीर्षा** என்பதாகவே கொள்ளவேணும். |

<u>सिद्धान्तம்</u> : चेतनனை தன் **लीलैக்கு** உறுப்பாக்குவதற்கு, ईश्वरனின் स्वातन्त्र्य-कारुण्यங்கள்தான் **प्रधानकारणं**; चेतनன் अनादि कालமாக செய்துவரும் 'ஆணை மீறுதல்' என்பது **सहकारि कारणं**.

-चेतनனை தன் **भोगத்துக்கு** உறுப்பாக்குவதற்கு, ईश्वरனின் सहज कारुण्यं தான் **प्रधान / सामान्य कारणं**; 'ஆணை மீறுதலால்' உண்டான ईश्वर निग्रह सङ्कल्पத்தை மாற்றி அவனை वशीकரிக்கும் उपायங்களான भक्ति-प्रपत्तिகள் **सहकारि / विशेष कारणங்கள்**.

-ईश्वरன் रक्षकனாக ஆவதற்கு उपयुक्त गुणங்களான ज्ञान-शक्ति-கருணைகளில் ज्ञान-शक्तिகள், अनुग्रह-निग्रहं இரண்டிற்கும் உறுப்பாம்; कारुण्यமோ, अनुग्रहத்துக்கு மட்டுமே असाधारणं.

## ईश्वर कारुण्य-अनुग्रहத்தால் ஏற்படும் நன்மைப் பட்டியல் :

1. மூவகை சேதநர்கள் स्वरूपம் பெறுதல்; அது நீடித்தல்;

2. சேதநர்கள், எம்பெருமான் உகக்கும் செயல்களைச் செய்தல்;

3. நித்யர்கள், நித்யமாக எம்பெருமானை அநுபவித்தல்;

4. முக்தர்கள், பழையபடி कर्मवश्यतैஅடையாமல் இருத்தல்;

5. लीलाविभूतियில் सृष्टि-रक्षणं இவைகளுக்குக் காரணமாதல்;

6. பகவானின் அவதாரங்களான शुद्धसृष्टिக்குக் காரணமாதல்;

7. शास्त्रங்களை வெளியிடுதல்:

8. அந்த शास्त्रங்கள் மூலம் तत्व-हित-पुरुषार्थ பற்றிய அறிவு பிறப்பித்தல்;

9. परमपुरुषार्थமான मोक्षத்தில் ஜீவனுக்கு ஆர்வம் உண்டாக்குதல்;

10.அந்த ஆர்வம் உண்டாவதற்குக் காரணமான सुकृतविशेषं ஏற்படுத்துதல்;

11.ईश्वरனின் निग्रहம் நீங்குவதற்கு, அவரவர் தகுதிக்கேற்ற उपायங்களைக் காட்டல்;

12. उपायத்தில் புலன்களை ஊக்குவிக்கும் நிலையில் துணை நிற்றல்;

13.उपासनं செய்பவனுக்கு நடுவில் தடை நேர்ந்தால், தகுந்த प्रायश्चित्तத்தை செய்வித்தல்;

14.अकिञ्चनர்க்கு उपायस्थानத்திலே நின்று தடையேதும் நேராவண்ணம் ரக்ஷித்தல்;

15.இந்த उपायங்களால் பகவானை மகிழ்வித்து, அநாதியாக சேதநன் செய்த கணக்கற்ற அபராதங்களை ईश्वरன் புறக்கணிக்கும்படிக்கும் - அளவற்ற இன்பத்திலே இளைப்பாற்றும்படிக்கும் –ஸம்ஸாரத்துக்கு திரும்புதல் இல்லாமல் செய்தலுக்கும் காரணமாதல்;

16.आर्तप्रपन्नனுக்கு, அப்போதே மோக்ஷம் தருவித்தல்;

17.मोक्षार्थप्रपत्ति कालத்திலேயே இங்கு இருந்த நாள் அபராதம் கலவாத कैङ्कर्यத்தையும் அளிக்கவேணு மென்ற फलத்தைக் கேட்க மறந்த दृप्तप्रपन्नனுக்கு, प्रारब्धकर्मத்தாலே நேரிட்ட பாபங்களுக்காக पश्चाताप த்தை உண்டாக்கி, அவன் தகுதிக்கேற்ற प्रायश्चित्तத்தை செய்வித்தல்;

18.இப்படி प्रायश्चित्तம் செய்யாத कठिनप्रकृतिகளுக்கு, யமலோகம் நேராதபடியும், மோக்ஷத்துக்குத் தடை வராதபடியும் செய்து, சிறு தண்டனைகளால் சிக்ஷித்தல்.

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| **எம்பெருமானின் शेषी என்ற गुणविशेषத்தைப் பற்றியது** | |
| *प्रधानप्रतितन्त्राधिकारத்தின் படி **शेषी**யான எம்பெருமான், **परतन्त्र**னான "சேதநனைக் காப்பதற்கு, உரிமையும் / சக்தியும் படைத்தவன்" எனவும், சேதநன் स्वतन्त्रமாக ஒரு செயலும் செய்ய முடியாதவன் எனவும் சொல்லப்பட்டதால், சேதநன் आत्मसमर्पणं செய்வது, அவன் **स्वरूप**த்துக்கு **विरुद्ध**மாகும்.* | **ஆகாது.** அதே அதிகாரத்திலேயே, "கர்மவச்யரை '**உபாயத்திலே மூட்டியே ரக்ஷிப்பது**' என்பது, करुणावान् ஆன எம்பெருமானது தீர்ந்தஸங்கல்பம்" எனவும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியில்லையானால், 'எல்லீரும் வீடு பெறும்' நிலை ஏற்பட்டிருக்கும்; உண்மையில் அப்படியில்லையே !<br><br>-शरणं व्रज என்று விதித்திருப்பதால், *आत्मसमर्पणं, **स्वरूप विरुद्धं** அன்று*.<br><br>- **पूर्वाचार्य**ர்கள் आत्मसमर्पणத்தை தாங்களும் अनुष्ठित्து, शास्त्रங்களை प्रमाणமாகக் காட்டி பிறர்க்கும் उपदेशित्திருக்கின்றனர். |
| *आत्मसमर्पणंதேவையில்லை; भगवानுக்கும்-ஜீவனுக்கும் உள்ள संबन्धज्ञानமும், रक्षिக்கப்படும்போது விலக்காமல் இருத்தலுமே मोक्षसाधनமாம்.* | संबन्धज्ञानமில்லா अचेतन/पशु-पक्षिகளும் காக்கப்படுவதால், இந்த வாதம் युक्तिக்குப் பொருந்தவில்லை; मामेकं शरणं व्रज, आत्मानं मयि निक्षिपेत् போன்ற 'विधि' இருப்பதால், "**रक्षापेक्षैயோடு சேர்ந்த संबन्धज्ञानंவேண்டும்**" எனவும், पूर्वपक्षं शास्त्रத்துக்கும் பொருந்தவில்லை என்றும் தேர்கிறது.<br>-மேலும், *'பகவான் ரக்ஷிக்கும்போது, விலக்காமல் இருத்தலே मोक्षसाधनं'* என்றால், தூங்கும்போது எல்லோர்க்கும் மோக்ஷம் கொடுக்கநேரிடும் !<br>-*அப்படியல்ல; மோக்ஷம் அளிப்பதற்கு, 'தடுக்கும் யோக்யதை இருக்கும்போது' தடுக்காமல் இருந்திருக்கவேண்டும்* என்றால், யோக்யதையே இல்லாத अचित्த்துகளுக்கும் मोक्षமளித்திருப்பதற்கு ஒட்டவில்லை. |
| *-இதுதான் भारतத்தில் 'ये **नाथ वन्तः** . . न आत्मकर्मणि समार-भन्ते" என சொல்லப்பட்டது.*<br><br>*-சோமாசியாண்டானும், रक्षणத்தில் चेतनனுக்கு अन्वयமில்லையெனக் கூறுகிறார்.* | -இந்த भारतश्लोकத்திலும், **नाथवन्तः** என்ற பதத்தின் 'नाथृ=याच्ना' என்ற धातु व्युत्पत्ति / मतुप् இவையினால், "**யாசிப்பவனை உடைய ஈச்வரன்**" எனப்பொருளாவதால், रक्षापेक्षै/ आत्मसमर्पणं செய்தவனை பகவானே காப்பாற்றுகிறான் எனவாகி, आत्मसमर्पणं தேவைதான் எனத் தேர்கிறது.<br>-உதாஹரித்த पूर्वரின் வசநத்தால், 'अनादि कर्मप्रवाह विपाकविशेषத்தாலே ஏற்பட்ட यादृच्छिक सुकृतादिகளை முன்னிட்டு आत्मसमर्पणத்திலே மூட்டுவித்து, அதனால் प्रीतனாய் सर्वकर्ताவான **எம்பெருமான் ரக்ஷிக்கிறான்; ஆக, நாமே செய்கிறோம் என்று எண்ணுவதற்கில்லை**' என்றும்; ஜீவனை கவலை அற்று இருக்கச்செய்வதான 'பகவானின் शेषिயாய் நிற்கும் संबन्ध विशेषं, अभिप्रेतं' என்றும் கொள்ளவேண்டும். |
| **सिद्धान्तं** : शेषिயாய், காக்கும் கடமையுள்ளவனானாலும், वैषम्य दोषं தட்டாமல் இருப்பதற்காக रक्षापेक्षैயோடு சேர்ந்த आत्मसमर्पणं என்னும் व्याजத்தைக்கொண்டே, எம்பெருமான் ரக்ஷிக்கிறான். மேலும், காப்பதற்கு प्रधान कारणं அவனேயாகையால், அவன் शेषिயாய் நிற்பதும் நிலைக்கிறது. | |

## எம்பெருமானின் पत्नी-संबन्धத்தைப் பற்றியது

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| *अकिञ्चनனான जीवன் अनन्यो-पायனாயிருக்கவேண்டுமே ! ஆகையால் पूर्वखण्डப்படி உபாயமாக பற்றப்படும் பகவானை '**ஸ்ரீமந்** நாராயணன்' என்னும்போது, பிராட்டி **அடையாளச் சொல்**லாக மட்டும் இருக்கிறாள்; ஒரு-போதும் அவனைப் பிரியாத विशेषणமாக இருப்பது उत्तर खण्डத்தில்தான்.* | - श्रीमत् என்ற பதம் இருखण्डத்திலும் 'अर्थस्वारस्यத்துக்கு बाधकமில்லாமல்' ஒன்றுபோலவே இருப்பதால், पूर्वத்தில் '*அடையாளச்சொல்*' எனவும் उत्तरத்தில் *'विशेषणं'* எனவும் சொல்லவேண்டியதில்லை.<br>-अनन्यप्रयोजनனாகவுமிருக்கும் जीवனுக்கு, *'उत्तरखण्डத்தில் மட்டும் श्रीमत् என்ற पदं, विशेषणं'* என்பதும் பொருத்தமற்றதே !<br>-இருவிடங்களிலுமே '*அடையாளச்சொல்*' என்றாலோ, இதே காரணத்தால், ईश्वरனின் गुण-विग्रह-व्यापारादिகளும் विशेषणமல்ல என்றாகிவிடும்! அவைகள் उपयोगமாயுள்ளதால் विशेषणமாக எற்கப்படுகிறது என்றால், பிராட்டியும் – <u>उपायदशै</u>யில் ईश्वरனின் उपेक्षैயைப்போக்கி अनुग्रह सङ्कल्पத்தை உண்டுபண்ணுவது, <u>उपेयदशै</u>யில் ஜீவன் செய்யும் कैङ्कर्य फलனுக்கு, ईश्वरனோடு சேர்ந்து शेषिயாயிருப்பது, இவ்விதம் - उपयोगமாயுள்ளதால் विशेषणமாக ஒப்புக்கொள்ளலாமல்லவா. |
| *இரு वस्तुக்களான பகவான் - பிராட்டி, இவர்கள் சேர்த்தியை "ஒன்று" எனசொல்வது, **'உபாயம் ஒன்றே'** எனும் நம் ஸம்ப்ரதாயத்துக்கு विरुद्धं.<br>-மேலும், பிராட்டியின் சேர்க்கையால் பெருமை உண்டாவது, பகவானுக்கு குறையாகும்.<br>-அநேக ப்ரமாணங்கள் **பகவானை மட்டும்தான்** சொல்கின்றன.* | -நாராயணனும், அவன் குணங்களும் தனி வஸ்துக்களாக இருப்பினும், பின்னது அவனுக்கு विशेषणமாக இருப்பதால், இச்சேர்கையை "ஒன்று" என்று நம் ஸம்ப்ரதாயத்தில் ஒப்புக்கொள்வதுபோல், பிராட்டி நாராயணனுக்கு விசேஷணமாகவிருக்கும் நிலையில் "**ஒன்றென்றே**" இசையலாம்.<br>-மேலும், विशेषणத்தின் சேர்த்தியால் विशेष्यத்துக்கு ஏற்றமுண்டானால், அது பின்னதின் गुणத்துக்கோ/ स्वातन्त्र्यத்துக்கோ **குறையாகாது**; மாறாக **அதிசயம்தான்** உண்டாகும். இது பிராட்டியோடு சேர்ந்த பகவான் விஷயத்திலும் பொருந்தும்.<br>-यागங்களில் पत्नीக்கு अन्वयமுள்ளபோதிலும், 'எப்போதும் கணவனுக்குள் அடக்கம்' என்பதால் 'पतिप्रधानமாக'ச் சொல்வதில்லையா! அதுபோல் आत्मयागமான आत्मसमर्पणத்தில் பகவானைமட்டும் சொல்லியிருக்கிறது. |
| *பகவானோடு எப்போதும் சேர்ந்திருப்பவளானால், திருகோயில்களில்'தனிக்கோவில் நாச்சியார்' என **பிரிந்த நிலை** ஏன்? काम्यप्रधानமான இவ-ரை अनन्य प्रयोजकரான परमै-कान्तिகள் ஸேவிக்கலாமா ?* | -श्रीपाञ्चरत्रशास्त्रப்படி, अर्चारूपिயான भगवाனைவிட்டு தனிக் கோவில் நாச்சியாராக நின்றாலும், பிராட்டி "भगवाனோடு இல்லையென்பது இல்லை". இந்த **अविनाभावம்** "भास्कर-प्रभा (ஒளி, சூர்யனைவிட்டு வெளியே பரவினாலும், சூர்யனோடு இல்லை என்பது இல்லை எனும்) न्याय सिद्धं.<br>-काम्यप्रधानமானாலும் भगवद्रूपமான मदनगोपालादिகளை परमैकान्तिகள் ஸேவிப்பதுபோல், தனிக்கோவில் நாச்சியாரை ஸேவிப்பதும் பொருத்தமே. |

<u>सिद्धान्तம்</u> : எம்பெருமானும் பிராட்டியும் ஒரே शेषित्वமுடையவர்கள்; ஒரே सङ्कल्पத்தை உடையவர்கள்; ஒருவர் மற்றவர்க்குப் பெருமை சேர்ப்பவர்கள்; स्वरूपம்/ रूपं ஆகியவற்றில் பிரிவில்லாதபடி சேர்ந்திருப்பவர்கள். இந்நிலை குலையாதபடி सिद्धोपायத்தை, श्रीमत् என்ற विशेषणத்தோடுகூடிய नारायण शब्दத்தில் அநுஸந்திக்கவேண்டும்.

## 24. साध्योपायशोधनाधिकार:

*"வரிக்கின்றனன் குறியொன்றால்"*

**साध्योपायமான भक्ति / प्रपत्ति விஷயமாக உண்டாக்கப்படும் கலக்கங்களும்/ ஸமாதானங்களும்**

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| **भक्ति / प्रपत्तिகளுக்கு अधिकारமுடைமையைப் பற்றியது** | |
| *सामान्यधर्मமான 'பகவானைப் பற்றுவதை'யுடைய **उपासनं, सर्वाधिकार**மில்லையே ?* | उपासन आरंभத்தில்தான் त्रैवर्णिकராக இருக்கவேணுமென்ற நியமமே தவிர, தொடரும் பிறவிகளில் அந்தக் கட்டாயமில்லையே. ஆக, भक्त्यादि आश्रयणं என்பது सामान्य धर्मமாவதும் பொருத்தமே. |
| *प्रपत्ति என்பது यागविशेषமாக न्यासविद्यैயில் விதிக்கப்பட்ட ஒரு वैदिक धर्मமாகையால், அதை அநுஷ்டிக்க எல்லோர்க்கும் **अधिकारம்** கிடையாதே.* | - வேத/ ப்ரமாணங்கள் எல்லோர்க்கும் **अधिकारம்** உண்டென்கின்றன.<br>-மேலும், उपासनத்திற்போல अधिकारத்தை அளவுபடுத்துவதான विशेष वचनं ஏதும் प्रपत्ति विषयத்தில் இல்லை.<br>-'உண்மை பேசு' என்பது वैदिक वचनமானாலும், सामान्यधर्मமாகி எல்லோர்க்கும் **अधिकारம்** உள்ளதுபோல், प्रपत्तिயும் सामान्यधर्मமே.<br>-काकादिகளும் शरणமடைந்ததாக ப்ரமாணங்கள் உள்ளன. |

<u>सिद्धान्तம்</u> : त्रैवर्णिकராக இருந்தாலும் இல்லாவிட்டாலும், शरण्य-शरणागति ज्ञानமும் आकिञ्चन्यादिகளும் இருப்பது மட்டுமே प्रपत्तिக்கு **अधिकारம்** ஆகும்.

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| **भक्ति / प्रपत्तिகளின் स्वरूप / कार्यங்களைப் பற்றியது** | |
| *-आत्मस्वरूपத்திலொட்டாததும் अन्य देवतासंबन्धமுடையதும் ஆன **वर्णाश्रमादि**களை அநு-ஸரித்துச் செய்யப்படும் **उपासनं**, आत्मवैलक्षण्यं அறிந்தவனுக்கு **अनुष्ठेयं அல்ல**.*<br>*-शास्त्रं विधित्त उपायங்களில் **स्वरूपविरुद्धं** என்பதால் उपासनத்தை விடவேண்டும் என்று आप्त वाक्यं (श्रीवचन भूषणத்தில்) உள்ளதே ?*<br>*-தன்னைக் காத்துக்கொள்ள கடமையும் சக்தியுமில்லாத चेतनன் **उपासनं** செய்வது **स्वरूपविरुद्धं**தானே ?.* | -शरीर-संबन्धமடியாகவரும் பசி-தாகம் இவற்றுக்கு परिहारம் செய்வதைப் போல், वर्णादि विशिष्ट शरीरத்தோடு சேர்ந்திருப்பதனால், அவைகளுக்கு உட்பட்ட शास्त्रविहित धर्मங்களை செய்யத்தான் வேணும்; மேலும், कर्माக்களால், देवता-अन्तर्यामिயான भगवान्தானேஆராதிக்கப்படுகிறான்.<br>-*आत्म स्वरूपத்துக்கு विरुद्ध*மென்றால் எப்படி?: 1.आत्माவை அழித்து விடுமா; 2. परतन्त्रனான आत्माவுக்கு असंभावितமான 'செயலாற்றும் தன்மையை' (कर्तृत्वத்தை) சொல்கிறதா; 3.आत्माவுக்குத் தீங்குவிளைவிக்கும் என்பதா? இம் மூன்றுமே இங்கு **பொருந்தாது**; ஏனெனில் : 1.आत्मस्वरूपं नित्यமானது; 2.आत्माவுக்கு स्वतन्त्रकर्तृत्वं இல்லாதபோதும், तुच्छत्वं வாராமைக்காக भगवदधीन कर्तृत्वத்தை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்; 3. काम्यकर्माக்கள்போல் संसारத்தை தருவதல்ல, उपासनं- ஆக தீங்கில்லை.<br>---आप्तवाक्यं, प्रपत्तिயை स्तोत्रं செய்வதற்காகச் சொன்ன **अतिवाद**மே !<br>-वैषम्य-नैर्घृण्यंதவிர்க்கவும், <u>शास्त्र-विधिबलத்தாலும்</u>, व्याजமாக उपासनத்தை பகவான் எதிர்பார்க்கிறான். இப்படி ஒப்பாவிட்டால், भगवत्प्रीतिக்காகச் செய்யப்படும் கைங்கர்யமும், प्रपत्तिயும்கூட स्वरूपविरुद्धமாகிவிடும் ! |

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| *भक्तियोगத்தின் பலனைப்பார்த்து, प्रपत्तिயும் பலிக்குமென நம்பி அதை செய்யத் தூண்டவே भक्तियोगத்தை, शास्त्रं विधित्तது. ஆனால், व्यभिचारं विधिக்கப்பட்டாலும் (नरकादि फलனைத் தருவதால்) தவிர்க்க வேண்டியதுபோல், **भक्तियोगं, स्वरूपविरुद्धं**. மேலும் **शिष्टाचारं** கிடையாது.* | -**கஷ்டமான** उपासन-उदाहरणத்தைக்காட்டி, **लघु**வான प्रपत्तिயில் ஈடுபடுத்த முயல்வது என்பது பொருந்தாது; மேலும் परिहसनीयं.<br>-व्यभिचारादि उदाहरणं பொருந்தாது; ஏனெனில், இவற்றின் फलன் अनर्थ हेतुக்களாகும். ஆனால், भक्तियोगத்தின் फलனோ मोक्षமானபடியால், शास्त्र विधिப்படி நடப்பது பொருத்தமே.<br>-पराशरादिகளும் उपासनத்தை अनुष्ठित्तிருக்கிறார்கள்.<br>-उपासनाधिकारिகள் அரிதாயிருப்பதைக்கொண்டு தள்ளவேண்டும் என்றால், அதே दोषம் प्रपत्तिக்கும் சொல்லலாம்.<br>-ஆக, **अकिञ्चन**னுக்கு उपासनं, **स्वाधिकारविरुद्धं** எனப் பொருளாகிறது. |
| *उपासनं, साधनं என்று நாம் ஒப்புக் கொள்ளவில்லை.* | सर्वधर्मान् परित्यज्य என்பதற்கு व्याख्यानத்தில் ஸ்ரீபிள்ளைலோகாசார்யர் *'उपासनமாகிற धर्मத்தையும் விட'*ச் சொல்லியிருப்பதால், **स्ववचन विरोधं.** |
| *அவரும் उपासनத்தைधर्मं என **ஒப்பவில்லை;** மாறாக 'धर्मं எனக்கொண்ட अज्ञानத்தை' நீக்கவேண்டி, அதை **अनुवदित्तு**, பிறகு விடு என்றார்.* | இப்படி, **शास्त्रं विधित्त** उपासनத்தை धर्मமில்லையென்றால், कैमुतिक न्यायத்தாலே, प्रपत्तिயையும் மற்ற प्रवृत्ति-निवृत्ति धर्मங்களையும் விட நேர்ந்து, शास्त्र-प्रामाण्यத்தை ஒப்புக்கொள்ளாத बाह्य-कुदृष्टि पक्षத்தைச் சேர்ந்தவராகி விடுவோம் ! |
| *शास्त्रத்தால் तत्वज्ञानं பிறந்த – வன், தானாகவே शेषत्वानु-सन्धानं பண்ணுவானே; ஆக आत्मनिक्षेप-विधि எதற்கு?<br>-**सिद्ध**மாக இருப்பதை विधिக்க வேண்டாமே;* | இது, *वाक्य-जन्य ज्ञानமே मोक्षसाधनं* எனச் சொல்வதுபோன்று, கண்டிக்கப்படவேண்டிய ஒன்று. மேலும் भक्ति-प्रपत्ति இரண்டுக்கும் தேவையான अधिकारம், तत्वज्ञानं; प्रपत्तिக்கு, விசேஷமாக न्यासம் விதிக்கப்பட்டுள்ளது.<br>-तत्वज्ञानं இல்லாதவனுக்கும், प्रपत्ति அதையும் அளித்து मोक्षहेतुவாகும்.<br>-शरणं व्रज என विधि இருப்பதாலேயே அது **साध्यं** எனத்தெளிகிறதே ! |
| *सर्वधर्मान् परित्यज्य என்பது தான் विधि (शरणं व्रज என்பதல்ல); அப்போது, **स्वरक्षणार्थ स्वव्यापार निवृत्ति**யை (விலகுவதை)ச் சொல்கிறது.* | -व्रज என்பதில்தான் लोट् உள்ளது; परित्यज्यவில் இல்லாததால், அது विधि என்பது शब्दस्वारस्यமற்றது.<br>-'*விலகுவதும்*' धर्मत्यागं என்ற ஒரு व्यापारंதானே !<br>-'கிடையாது; व्यापारं இல்லை' என்றால், विधि தேவையில்லையே !<br>ஆக, இந்த வாதம் பொருத்தமற்றது. |
| *प्रपत्ति, साध्योपायं / उपकारकं என்றால், ईश्वरனின் एकत्व/ सिद्धत्व/ परमचेतनत्व/ परम-कारुणिकत्व/ सर्वशक्तित्व/ निरपेक्षत्वங்களுக்குக் கொத்தை வருமே !* | -இந்த तर्कं, व्याप्ति-शून्यदोषமுடைய कुतर्कமாகும்–அதாவது, सहकारिயை अपेक्षिப்பவரெல்லாம் गुणविशेषங்கள் இல்லாதவரென நிரூபிக்கவேண்டிவரும் ! அது முடியாதே. குயவன், சக்கரம்-கோல் இவற்றை எதிர்பார்ப்பதையும்; उदारர், கருணாவானாகயிருப்பதையும் பார்க்கிறோமே !<br>-மேலும் उपासनத்தில் साधन-भावादिகளை இசைந்தபோது, ईश्वरனின் स्वभावங்களுக்கு கொத்தை வருவதாகச் சொல்வதில்லையே ! |

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| *பக்தி ஸ்தாநத்தில் शास्त्रं, ப்ரப த்தியை **விதிக்க**வேணுமோ? शास्त्रத்தால் பகவானைப் பற்றி அறிந்த अकिञ्चनன், ईश्वरனைத் **தானாகவே** பற்றமாட்டானோ ?* | प्रपत्तिயை शास्त्रं विधिக்காமல் போனால் :-<br>-मुमुक्षु, उपासन-योग्यतै இல்லாதபோது भक्ति செய்யமுடியாமலும், அதன் स्थानத்தில் प्रपत्ति நிற்பதை அறியாமலும், फलத்தை இழந்துவிடுவான்.<br>-பகவானைத் துதித்தல்/ வணங்குதல் போன்ற கைங்கர்யங்களை, வரையறையை மீறிச் செய்ய நேர்ந்து अपचार-हेतुவாகும்.<br>-प्रपत्ति अनुष्ठानத்தை बोधिக்கும் सदाचार्य-मन्त्रोपदेशங்களும் வீணாம் !<br>-उपासन-योग्यतैஇல்லாதவர்க்கு, பகவானிடமிருந்து பலன்பெற எளிய உபயமான प्रपत्तिயை அறிவதற்கு வழியில்லாமல் போய்விடும். |
| ***प्रपत्ति,** धर्मமென்றாலும் सर्वधर्मங்களையும் விடச் சொன்ன போது, இதையும் தானே **விடவேண்டும்** ?* | அப்படியானால் *ईश्वरனை, कृष्णं धर्मं सनातनं என்று धर्मமாகச் சொல்லி யிருப்பதால் அவனையும், விட*வேண்டிவருமே ! இங்கு 'அவனைத்தவிர' என்று எப்படி त्यागத்தை அளவுபடுத்துகிறோமோ, அப்படியே 'प्रपत्ति யைத் தவிர' என்று பொருள் கொள்வதும்தானே உசிதம் ? |
| *பக்தி-ப்ரபத்திகள் எந்த ஆகாரத்தால் सिद्धोपायத்-துக்கு உபகரிக்கின்றன ?* | बद्धजीवனின் अनादिயான अपचार परंपरैயாலே निग्रहத்திலே நிற்கும் सिद्धोपायத்தை साध्योपायங்கள் शमिப்பிக்கின்றன; कोपं தணிந்த பகவான், परिपूर्ण कैङ्कर्य फलத்தைக் கொடுக்க உபகரிக்கின்றன. |

<u>सिद्धान्तம்</u> : अनिष्टनिवृत्तिயும் इष्टप्राप्तिயும் **साक्षात्தாக** सिद्धोपायத்தின்/ **परंपरया** साध्योपायத்தின் கார்யம் . -आत्मयागமான शरणागतिயில் "आत्म-हविस् श्रीमन्नारायणனுக்கே" என்ற बुद्धिविशेषத்துடன் செய்யும் आत्म- न्यासம்தான் अङ्गि; அதைக்காட்டிலும் प्रधानம், '**ரக்ஷிக்கும் பொறுப்பை வைத்தலே**'.

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| भक्ति / प्रपत्तिகளின் अङ्गங்களைப் பற்றியது | |
| *-ब्रह्मास्त्र न्यायத்தால், प्रपत्ति க்கு आनुकूल्य-सङ्कल्प/ प्राति कूल्य-वर्जनादि अङ्गங்களாக தேவையில்லை (प्रपन्नனுக் கு இயற்கையாகவே இருக்கும் என்பதால்);<br>-महाविश्वासமே அங்கம்.* | -எங்காவது '*வேண்டாம்*' எனச்சொல்லியிருந்தால், "**प्रपत्ति செய்தபிறகு, இவைகள் இல்லாதுபோனாலும் प्रायश्चित/ लघुदण्डனைகளால் கழிந்து, मोक्षத்துக்கு குறைவில்லாமல் இருக்கும்**" என்றே பொருள்.<br>-ब्रह्मास्त्रமும் அதற்குரிய அங்கங்களை अपेक्षिத்து நிற்பதுதான்.<br>-இப்படி ஒப்பாவிட்டால், पूर्वपक्षिகள் அங்கமாக இசைந்த महाविश्वासத் துக்கும், இந்த தோஷங்கள் சொல்லலாமே ! |
| *शास्त्र विश्वासமே போதாதா; महाविश्वासம் எதற்கு ?* | अतिशयित विश्वासமே முக்கிய அங்கமென்பது शास्त्र-विहितम्. |

<u>सिद्धान्तம்</u> : - शास्त्रங்கள் प्रपत्तिக்கு அங்கங்களை விதித்திருக்கின்றன.

- मन्दविश्वासர்க்கும் கோலின காலத்துக்குள் उपायपूर्ति ஏற்படுத்தி, பகவான் ரக்ஷிப்பான்.

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| *-ஒரு உபாயம் ஒரே பலனை தானே கொடுக்கும். வேண்டி யதெல்லாம் தருவதெப்படி?* | 'உபாயங்கள், मोक्षार्थिக்கு निवृत्ति धर्मமாகவும், மற்றவர்க்கு प्रवृत्ति धर्म மாகவும் நிற்கின்றன' என शास्त्रंசொல்வதை, **யுக்தியினால் பாதிக்க முடியாது.** |
| *பல காலம் செய்யவேண்டிய பக்தி தரும் பலத்தை, ஒரே தடவை செய்யப்படும் ப்ர-பத்தி எப்படிக் கொடுக்கும்?* | சாஸ்த்ரங்களிலும்/ உலக வழக்கிலும், ஒரே பலனை அடைய கஷ்டமான வழியும் உண்டு; ஸுலபமானதும் உண்டு. இது **'अधिकारि भेदத்துக்கு தகுந்தபடி'** என்று கொள்வதுபோல், பக்தி/ ப்ரபத்தி விஷயத்திலும் ஒப்புக் கொள்ளவேண்டும். |
| *मोक्षोपायமும்/ பலனும் பகவான்தான். அப்படி-யிருக்க, பலனில் சிலர்க்கு காலதாமதம் ஏன் ?* | இதற்குக் காரணம் – संसारச் சூட்டிலிருந்து மீள்வதில் ஒருவர்க்குள்ள அவஸரத்துக்கு ஈடாக, मोक्षத்தைப்பெற தாங்களே வெவ்வேறு காலத் தைக் குறிப்பதுதான்; அவரவர் कर्मங்களுக்குத் தக்க ईश्वरன்தான் बुद्धि-प्रदानं பண்ணுகிறான். |
| *ऐहिक फलனுக்காகச் செய்த प्रपत्ति சிலபோது फलिக்கா மல் போவதால் प्रपत्तिயே सन्देहத்துக்கு உள்ளாகிறதே?* | இதற்குக் காரணம் – கார்யத்தின் அங்கங்களிலோ (कर्म वैगुण्यं), செய்பவ னிடத்திலோ (कर्तृ वैगुण्यं), செய்யும் வழியிலோ (साधन वैगुण्यं) உண்டாகும் குறைதான். இக்குறைகள் இல்லாதபோது இங்கேயும் प्रपत्ति फलिப்பதை பார்க்கிறோமே. |
| *-मोक्षसाधनமாக 'निरन्तर भगवद् ध्यानं'தான் சொல்லப் பட்டிருக்கிறது.*<br>*-கீதையில் अङ्गप्रपत्तिயாகத் தான், भाष्यकारர் योजனை.* | -निरन्तर भगवद्ध्यानं, शक्तனுக்கு उपायமாகவும், अशक्तனுக்கு फलமாக வும் சொல்லப்பட்டது. प्रपन्नனுக்கு मोक्षरुचि இங்கு குறையாமல் வளர்ந்து வர இது उपकारकम्.<br>-प्रपत्तिயின் अङ्गமான वेषத்தை भाष्यादिகளில் उदाहरिத்து, स्वतन्त्र மான वेषத்தை गद्यத்திலே श्रीभाष्यकारர் அருளிச்செய்தார். |

<u>सिद्धान्तம்</u> : - भगवद्ध्यान परीवाहமான पूजाविशेषத்தை, नित्य ग्रन्थத்தை ஒட்டி स्वयं प्रयोजनமாகச் செய்து வந்தால், अन्याभिगमनं/ अन्यार्थप्रवृत्ति/ अन्य भजनं/ अन्यकीर्तनं/ अन्यचिन्तनं என்ற 5 दोषங்கள் புகாமல் இருக்கும்.

-இப்படிப்பட்ட आराधनத்துக்குத் தகுதியில்லாதவரும், தங்களுக்கு योग्यமான नित्य-नैमित्तिकங்களாலும், सङ्कीर्तनादिகளாலும் भागवतர்களுக்கு परतन्त्रராய் இருந்து कैङ्कर्यத்தினை இங்கு அநுபவிக்கலாம்

## 25. प्रभावव्यवस्थाधिकार:

### அடியார் ஆதரத்தில் "ஆரணநீதி நெறி குலையாமை"

" **उपाय**ங்களின் **प्रभाव**த்தால் **जाति-नियम**ங்கள் ஒழியாது; **शास्त्रं विधि**த்த **कर्मा**க்கள் கழியாது – ஆக அதன் **प्रभाव**ம் **व्यवस्थै**க்குட்பட்டதுதான்**"** என்பது "**परित्यज्य, मामेकं**" இவை மூலம் விளக்கப்படுகிறது,

| கலக்கத்தால் **மிகைப்படுத்தியமை** | प्रभावத்தை **அளவு**படுத்தித் தெளிவித்தமை |
|---|---|
| *உபாயம் செய்த भगवद् भक्तர்கள் எல்லோரும் **ஒரே ஜாதி**யினர்தாம். இதை விதுரர்/ விச்வாமித்ரர்/ ஆழ்வார்கள் वृत्तान्तங்களில் காண்க.* | உபாயம், **जाति-निबन्धन**த்தை **மாற்றவல்லதல்ல**. 'ஒரேஜாதி' எனச் சொன்னது, भगवद्भक्तियாகிற**गुणविशेष**த்தையிட்டு **उपचार**மாகவே. -**विदुरादि**களும் ஜாதி நியமங்களை மீறவில்லை என்பது **इतिहासங்களை முழுவதும் கற்றோர்** கணிப்பு. |

<u>**सिद्धान्तம்**</u> :- शारीरकமாக ஏற்படுவது '**जाति**'; இது சரீரம் இருக்குமளவும் **மாறாதது**. **मानस**மாக **गुण विशेष**த்தையிட்டு ஏற்படுவது '**குலம்**'; இது எல்லா ஜாதியினர்க்கும் **உண்டாகக் கூடியது**. "भगवद्भक्तர்கள் **सम**ரென்றது **परमपुरुषार्थ-साम्यादि**களாலே"– கிடாம்பி அப்புள்ளார். இப் भक्तர்களில் : देवतान्तर स्पर्शं இல்லாதவர் – **एकान्ति**கள்; प्रयोजनान्तर स्पर्शं இல்லாதவர் – **परमैकान्ति**கள்; தாமதம் பொறுக்காது, भरन्यासं செய்து कैङ्कर्यैक प्रयोजकராயிருப்பவர் - **षोडशवर्ण स्वर्ण परमैकान्ति**.

-ஆக शारीरकமான **जातिनियम**ங்களை எவரும் परित्यजिக்கவொண்ணாது.

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| *उपाय-निष्ठர், எல்லா प्रवृत्ति-निवृति धर्मங்களையும் விடவேண்டுமென்பது 'सर्व धर्मान् **परित्यज्य**' வுக்குப் பொருள்.* | -**शास्त्र-नियम**த்தை भ्रान्तिயால் **बाह्य-कुदृष्टि**கள்விடுவது **तामसत्याग:**; प्रवृत्ति-निवृत्तिகளுக்கு **சோம்பி** விடுவது **राजसत्याग:**; अधिकारத்துக்கு தக்க **कर्मங்களை** भगवत्प्रीतिக்காகவே कर्म-कर्तृत्व-फल त्यागத்துடன்**செய்வது सात्विकत्याग:**(இது गीताभाष्यத்தில் முதல்योजனை) -'त्यागपक्ष'த்தின்படி, उपायविरोधि पापங்களைக் கழிக்க விதிக்கப்பட்ட प्रायश्चित्तादिகளுக்கு अनर्हன், **அவைகளை விட்டுவிட்டு**, भगवाனிடம் प्रपत्ति செய்யச் சொல்வது – (**मामेकं** - 2-ம் योजனை). |

<u>**सिद्धान्तம்**</u> :- आज्ञा-कैङ्कर्यங்களை சரீரம் உள்ளளவும் தன் **वर्णाश्रमादि**களுக்கு ஏற்ப செய்யவேண்டும். இவை भक्ति-योगத்தில் अङ्गமாகவும் प्रपत्तिயில் फलமாகவுமாகும். मुक्तदशैயில் वर्णाश्रमादिகள் இல்லை. - जाति-आश्रय-निमित्तदुष्ट आहारம், ज्ञानग्रहणं, स्व-सूत्र मन्त्रग्रहणं, धनग्रहणं, जाति, மற்றும் देश-कालத்திலும் - **நியமங்களுடன்**, வேறு फलத்தில் ஆசையற்றவனாய், தன் சக்திக்கு ஏற்ப श्रीमन्नारायणனுடைய **कैङ्कर्यங்களை प्रपन्नன் செய்யவேண்டும்**. இப்படி आचार नियमங்களென்ன; அதற்கு மேலே தயை-சாந்தி முதலான आत्मगुणங்களென்ன; அதற்கு மேலே भगवत् भजनங்களென்ன; அதற்கு மேலே मोक्षफलனில் ஆசையென்ன, இவற்றின் பெருமைகளால் **प्रपन्नன்** மேன்மேலும் உயர்வாகக் கருதப்படுவான்.

## 26. प्रभावरक्षाधिकार:

"தண்மை கிடக்கதாம்" உள்ளமை

" उपायங்களின் प्रभावங்கள் (கீழதிகாரத்தில் சொன்னதுபோல) அளவுபடுத்தப்பட்டாலும், **அதற்கே உண்டான सञ्चित/ प्रारब्ध पाप நாசकत्वங்கள்/ நல்வழியிலிருந்து சிறிது தவறிய भागवतர்களுக்கும் फलन் குன்றாமை, போன்ற தன்னேற்றமான பெருமைகளைக் குறைக்கலாகாது"** என **'माशुच:' पदं** விளக்கப்பட்டு, प्रभावம் ரக்ஷிக்கப்படுகிறது.


| கலக்கத்தால் **குறைவு**படுத்தியமை | प्रभावத்தை ரக்ஷித்துத் தெளிவித்தமை |
|---|---|
| *'प्रपत्तिயினால் எல்லாशोकங்களும் கழியும்' என்றது स्तोत्रம்தான்; உண்மையில் கழிவதில்லை.* | अनुग्रहशीलனான எம்பெருமான் 'விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்'. **शोकங்களை அநுபவிக்க இசைந்த** जीवனின் நசைக்கு ஈடாகத்தான் இங்கு விட்டுவைக்கிறான். |
| *பகவான்தான் हितैषिயாயிற்றே. मोक्षத்துக்கு आनुषङ्गिकமாக கேட்காதபோதும் அவனே शोकங் களைக் கழிக்கக்கூடாதோ ?* | இங்கு துக்கமில்லாது சிற்றின்பங்களை அநுபவிக்க விட்டுவைத்தால், ஒருபோதும் ஜீவனின் நசை மாளாது; भगवदनुभवத்தில் ஆசையும் வளராது. ஆக, हितैषिயான பகவானின் **शिक्षैயும், अनुग्रह विशेषம்**தான். இதை ஆழ்வான்/ பட்டர் ऐतीह्यங்களிலே காணலாம். |
| **सिद्धान्तம்** :- இங்கு शिक्षणं, नियतायुस्ஸுகளுக்கு இந்த ஜன்மத்திலேயே भीति உண்டாக்கியும்; अनियतायुस्ஸுகளுக்கு आयुस्ஸை வளர்க்க நினைக்காமைக்கும், **निर्वेदं பிறப்பிக்கைக்காகவே.** -दु:खानुभवத்துக்குள்ள दु:खानुभवं-निर्वेदं-भीतादिजननं என்ற 3 आकारங்களில்:- दु:खानुभवं, भगवन्निग्रह रूप दुष्कर्मத்தின் फलமாகும்; निर्वेदத்தின் மூலம் வரும் शिक्षैயும்; भीतिजननं மூலம் வரும் 'प्रायश्चित्तம் செய்ய வேணும்' என்ற प्रवृत्तिயும், अनुग्रहकार्यமான **उपायத்தின் फलं.** | |
| *अर्थसङ्गादिகளை ஒழித்து वैराग्यத் துடன் இல்லாத **भागवतர்கள், प्रपत्ति செய்தவராயினும்** விலக்கத் தக்கவரே.* | வழி தப்பினார் பக்கல் சொல்லும் வார்த்தையை, நல்வழியில் அடி தடுமாறினார் பக்கல் சொல்லலாகாது. भागवतர்- ऊन (सुदर्शन-पाञ्चजन्य तापसंस्कारமில்லாதவர்)/ हीन (पुण्ड्र संस्कारமில்லாதவர்)/ परिस्रस्त (नाम संस्कारமில்லாதவர்) / नष्ट (मन्त्र संस्कारமில்லாதவர்) ராயினும், भगवाனிடம் ऐकान्त्यं இருப்பதால், (ஒரு விரகாலே ஈடேறி விடுவதால்) இவர் திறத்திலும் **अवज्ञादि अपचारம் ஆகாது.** -भागवदपचारம் எவ்வளவு கொடியது என்பது, अकृत्यकरण-कृत्याकरणங்களோடு இதையும் श्रीभाष्यकारர் சேர எடுத்ததிலிருந்து விளங்கும். -भागवतभावனைபண்ணித்திரிவாரையும், அவர் உள்ளத்தை அறியும் வரை ஆதரிக்கவேண்டுமென்பது ஸீதாப்பிராட்டி காட்டிய நெறி. |
| **सिद्धान्तம்** :- भागवतர்களை அவமதிக்காமல், அவரிடமுள்ள குணங்களைமட்டும் கண்டு மகிழவேண்டும். करणत्रयத்தாலும் நல்வழியைக் கைவிடாமல், இங்கிருந்த நாள் स्वयंप्रयोजनமாக भगवत्कैङ्कर्यं செய்யும் पुण्य-पुरुषர்களுடன் சேர்ந்துவாழும் சிறந்தபாக்யத்தை எம்பெருமானின் அருளால்பெற்றதை நினைத்திருக்கவேண்டும். परमपदத்தில் பெறப்போகிற कैङ्कर्य-सांराज्यத்துக்கு, இவ்வுலகிலேயே முடிசூடி நிற்பதாய் அநுஸந்தித்திருக்கவேண்டும். | |

## 27. मूलमन्त्राधिकार:

*“நன் மனு ஓதினம்”*

मन्त्र पद-वाक्यங்களின் பல்வேறு योजனைகள் தரும் अर्थविशेषங்கள் சொல்லப்படுகின்றன.

- மூன்று மந்த்ரங்களுக்கிடையே உள்ள தொடர்பு :-




- மற்றும் ஓர் தொடர்பு :-

| | | | |
|---|---|---|---|
| மூலமந்த்ரம் | ओं ( अ+उ+म्) | नमो | नारायणाय |
| த்வயம் | श्रीमन्नारायण | चरणौ शरणं प्रपद्ये | श्रीमते नारायणाय नम: |
| -விளக்குவது | (लक्ष्मी-सहितன்) | (शरणागति) | (उपेयம்) |
| சரமச்லோக பகுதி | सर्व धर्मान् परित्यज्य (स्थित:) | मामेकं शरणं व्रज | सर्व पापेभ्यो मोक्षयिष्यामि |
| -விளக்குவது | (अकिञ्चनன் - अनन्यशरणன்) | (उपायान्तर निरपेक्षன்) | (फलத்தில் स्वाधीन- स्वार्थ कर्तृत्व / भोक्तृत्वமாகிற विरोधि निवृत्ति) |

<u>திருமந்த்ரத்தின் பெருமை</u> :

மந்த்ரங்களில் भगवन्नारायणमन्त्रங்கள்; அவற்றுள் व्यापकमन्त्रங்கள்;அதிலும்**अष्टाक्षरம், विशेषம்.** காரணம்:

- இது, வேதங்கள் முழுவதின் **ஸாரமாகும்;**
- ஸகல துக்கங்களையும் **விலக்கவல்லது;**
- அனைத்து பலன்களையும் **அளிப்பது;**
- எல்லா உபாயங்களுக்கும் **உபகாரகமாக** அமைவது;
- ஸகல வர்ணத்தார்க்கும், अधिकारத்துகேற்ப (वैदिक-तान्त्रिकरूपத்தால்) **उपजीव्यं:**
- (नार शब्दத்தாலே) व्याप्य तत्वமான चेतनाचेतनங்களையும் (अयन शब्दத்தாலே) व्यापक तत्वமான परमात्माவையும் நேராகவே **சொல்கிறது;**
- எந்த பலனையும் பெறுவதற்கு, வேறு எந்த மந்த்ரத்தையும் நாடவேண்டிய **தேவையில்லாதது;**
- भगवाனின் (राम-कृष्णादि) எந்த मूर्तिக்கும் **பொது**வான மந்த்ரமாகும்;
- வேத-சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டது; எல்லா கல்பங்களிலும் **ப்ரஸித்தமானது;**
- ரிஷிகளாலும்-ஆழ்வார்களாலும்-ஆசார்யர்களாலும் விரும்பி **अनुसन्धिக்கப்படுவது.**
- இம்मन्त्रதான் श्री परकालனுக்கு सर्वेश्वरனால் **உபதேசிக்கப்பட்டது.**

➢ **அஷ்டாக்ஷரத்தை உச்சரிக்க अधिकारिகளும், விதமும் :**

- முதல் மூன்று வர்ணத்து புருஷர்கள் மட்டுமே समस्तமான (अकार-उकार-मकारात्मक) प्रणवத்தோடு (ओं नमो नारायणाय என) உச்சரிக்கலாம்.
- மற்றவர்களும் प्रणवத்தை व्यस्तமாக, उकारத்துக்கு பதிலாக 'अं' என்ற बीजाक्षरத்தைச் சேர்த்து (अं नमो नारायणाय என) சொல்லலாம். இப்போதும், எட்டெழுத்து என்ற **எண்ணிக்கையும்**; उकारத்தின் "अवधारणं / लक्ष्मी" என்ற இரண்டு अर्थங்களும் **अकारத்திலே**, முறையே 'सर्वं वाक्यं सावधारणं' என்ற न्यायத்தாலும் / नित्ययोगं சொல்லும் सन्नियोगशिष्ट न्यायத்தாலும்; **கிடைக்கும்.**

| पद/ अक्षरங்கள் | விளக்கம் |
|---|---|
| ओं(प्रणवம்)<br><br>(மூன்றெழுத்து வேதம்) | **-தனி மந்த்ரமாக** '1-2-3-1/2 மாத்ரைகளில்' சொன்னால், முறையே कार्यरूप भगवान் i) உலகையும்/ ii) अन्तरिक्षத்தையும்/ iii)स्वर्गத்தையும் சரீரமாக உடையவர்/ iv) कारणा-वस्थैயிலுள்ளவர் எனப் பொருள்படும். न्यासविद्यैயில் समर्पणத்தைச் சொல்லும்.<br>**-மற்ற மந்த்ரங்களோடு** சேர்ந்த நிலையில், **ஒரே எழுத்தானபோது**, परमात्माவைக் குறிக்கும். மூலமந்த்ரத்தில் சேர்ந்திருக்கும்போது आत्मसमर्पणपरமாயும் स्वरूपज्ञानं உண்டாக்குவதால் शेषत्वानुसन्धानपरமாயும் / अधिकारपरமாயும் இருக்கும். |
| (अ, उ, म என பிரித்து) **सखण्ड**மாகச் சொன்னால், கிடைக்கும் अर्थविशेषங்கள் இவ்வாறு: | |
| अकारம் | சொற்களுக்கு மூலமான अकारம், सकल வஸ்துக்களுக்கும் மூலமான எம்பெருமானைக் குறிக்கும்; 'अव-रक्षणे' என்ற धात्वर्थத்தினாலும், सर्वरक्षकனான பகவானைக் குறிக்கும். |
| 'अ'வின்மேல் **चतुर्थी** | आत्मसमर्पणं, परमत्मा<u>க்கு</u> उद्देश्यமென प्रमाणங்கள் சொல்வதால், அப்பொருளைக் காட்ட **अ**வின்மேல் 4–ம் வேற்றுமை உருபு சேர்க்கவேணும். மந்த்ரத்தில் அது, **அழிந்து நிற்கிறது.** இவ்வளவால், *"प्रणवத்தில் ஒரே विभक्तिயில் 'अ, म' இருப்பதால், जीव-परमात्म ऐक्यंதான் சொல்கிறது"* என்பது ஒட்டாது என்றாகிறது. |
| उकारம் | -अवधारणं பொருளாகி, अयोग/ अन्ययोग व्यवच्छेदங்கள் கிடைக்கின்றன. |
| मकारம் | -<u>अक्षरनिरुक्तப்படி</u> 'क' முதல் तत्व-वाचकமாய், 'म' **25-வது तत्व**மான जीवனைக் குறிக்கும்.<br>-'**मन-ज्ञाने/ अवबोधने**, मस-परिमाणे' என்ற व्याकरण व्युत्पत्तिயால், जीवस्वरूपங்களான ज्ञान स्वरूपत्व/ ज्ञान गुणकत्व/ अणुत्वங்களால் ஜீவன் பொருளாகிறான்.<br>- <u>வேத இலக்கணப்படி</u> ஜீவனைக்காட்டும் **अस्मत्** என்ற பதத்தின் முன்-பின் பகுதிகளான अस्-अत् என்பவை மறைந்து, 'म' என நிற்கிறது.<br>-प्रधानं नीयमानं हि तत्र अङ्गानि अपकर्षति என்ற <u>न्यायத்தாலே</u> प्रधानமான ஜீவனோடு शेषமான गुणादिகளும்; शेषत्वाश्रयமான चेतना-चेतनங்கள் எல்லாமும் குறிக்கும். |
| **नमः**<br>(प्रणव-सारமான उकारத்தின் विवरणं) | स्थूलार्थ: - உயர்ந்தவனை**வணங்கும்** சரீரத்தின்**செயல்; பகவானை வணக்கும் செயல்.**<br>- பகவான் எனக்கு **शेषी**; நான் அவனுக்கு **शेषன் என்ற எண்ணம்**;<br>- 'நம:' என வாக்கால்சொல்லி, மனதால் நினைத்து, உடம்பால் வணங்கும் போது, பூர்ணமான **சரணாகதி.**<br>सूक्ष्मार्थ: (न + म: எனப் பிரித்துச் சொல்லும்போது) - நான் எனக்கு **शेषமல்லன்**;<br>-ஒன்றும் எனக்கு **शेषமில்லை**; எதற்கும் நான் **शेषी**யல்ல; எனக்கு **स्वातन्त्र्यமில்லை.** |

| | |
|---|---|
| **नम:**<br>(தொடர்ச்சி) | परयोजனை(न +म +: எனப்பிரித்துச்சொல்லும்) -பகவானையடைய प्रधान உபாயம்.<br>- 'न' என்றால் **उपाय:**<br>-'म' என்றால் **प्रधानं**<br>-विसर्गம் **எம்பெருமானைக்** குறிப்பது. |
| **नारायण** | **-रूढ्यर्थ:** - सर्वान्तर्यामिயான எம்பெருமான்<br>**-योगार्थ:** - नार (न, र) + अयनं = नारायण:<br>▪ नर:= र (रीङ् –क्षये) என்பதால், स्वरूपविकारத்தாலே அழியும் தன்மையுள்ள अचित् என்றாகி, 'न' என்று 'அதைவிட வேறான ஜீவன்' என்று अर्थ; அப்போது, नर समूह: = **नारा:** (நரர்கள் கூட்டம்) என்றாகிறது.<br>▪ नर: = அழிவற்ற தன்மையினாலும், 'नृ – नये' (நல்வழியில் நடத்திச் செல்பவன்) என்பதாலும், **परमत्मा**வைச் சொல்லும்; அப்போது, 'नर संबन्धि नारं'/'नरात् जायते' என்பதால், **नारा:**என்று सकलचेतनाचेतनங்களைக் குறிக்கும்.<br>**नारं** = जलं; இதனால், "ஜலத்தை உண்டாக்கிய" பகவானைக் குறிக்கும்.<br>**अयनं** = ப்ரவேசிக்கப்படும் வஸ்து;<br>**अयनं** = 'अय पय -गतौ' / इण् -गतौ என்ற धातुவிலிருந்து :-<br>➢ 'ईयते अनेन' = (இவனைக்கொண்டு அடையப்படுகிறது) என்பதால் **उपाय: ;**<br>➢ 'इयते अस्मिन्' = (இவனிடத்தில் லயம் அடைகிறது) என்பதால் **आधार: ;**<br>➢ 'ईयते असौ' = (இவன் அடையப்படுகிறான்) என்பதால் **उपेय:** என்றாகிறது.<br>**ஆக, नारायण:** = (बहुव्रीहि) नारा: अयनं यस्य = 'नारங்கள் எவனுக்கு இருப்பிடமோ', என்பதால், उभयविभूतियोगं/ हेयप्रत्यनीकत्व-कल्याणैकतानत्वं மற்றும்; शारीरकशास्त्रத்தின் நான்கு अध्यायங்களால் நிரூபிக்கப்பட்ட जगत्कारणत्वं (नराज्जातानि तत्वानि என்பதால்); अबाध्यत्वं (क्षयनिषेध वाचक नर शब्दத்தால்); उपायत्व-उपेयत्वं (अयन शब्दத்தால்) உடைய எம்பெருமான், எனப் பொருள்படுகிறது.<br>- नरனான भगवानிடமிருந்து नारं (जलं) உண்டானதாலும்; भगवान् जलத்துக்குள் இருந்ததாலும், **नारायण**ன் ஆகிறான். (जलं மற்ற तत्वங்களுக்கும் उपलक्षणं)<br>**नारायण:** =(तत्पुरुष:) नाराणां अयनं = 'नारங்களுக்கு இருப்பிடம்' என்னும்போது, अयन शब्दத்தில் उपयुक्तமான सौलभ्य-परत्वங்கள் சொல்லப்படுகின்றன. अयन शब्दம் नित्य नपुंसकமானாலும் ऋषिகள் சொன்ன निरुक्तबलத்தாலே पुल्लिङ्गமாகும்.<br>**-योगरूढ्यर्थ:** - 'नम"ஸ்ஸில் शाब्द/आर्थமாகத் தோற்றின शरणागतिயாலே प्रीतனும்; 'नारायणाय'வில் चतुर्थीயில் தோற்றின कैङ्कर्यத்தை ஏற்பவனும்; अकारத்தால் சுருங்க சொன்ன निरपेक्ष शरण्यனுமான**வனின்** **सर्वरक्षकत्व-सर्वशेषित्वं** சொல்கிறது. |
| **आय**<br>(मन्त्रத்தின்शक्ति) | चतुर्थीக்கு பொதுவாக तादर्थ्यं (அவனுக்காக என்பது) பொருள்; மந்த்ரத்துக்கு சக்தியாக இருப்பதால், இங்கு பலன் கிடைப்பதற்குக் காரணம் (**फलसिद्धि हेतु**) என்னவேணும். மேலும், இதை **संप्रदानार्थे**யாக (दीयमानार्थ शेषित्वं संप्रदानत्वं इष्यते – ஸமர்ப்பிக்கப் படும் வஸ்துவுக்கு சேஷியாயிருக்கை என்று) अहिर्बुध्न्यன் व्याख्यानं செய்கிறார். |

## திருமந்த்ர வாக்யங்களுக்கு 10 வித யோஜனைகள்

| யோஜனை | स्वरूप- उपाय- पुरुषार्थ परமாக வாக்கிய விளக்கம் |
|---|---|
| ஒரே வாக்யம் : 1.उपायपरं – प्रणव (प्रतिपाद्य विशिष्टाय) नारायणाय नम: | नम:शब्दं, समर्पणपरं; 'प्रणवप्रतिपाद्य नारायणனின்பொருட்டு समर्पयामि' என்று செய்கையாக स्थूलार्थத்தில் தோன்றுவதால் उपायपरं । மற்றவையான शेषत्व स्वरूपज्ञान / पुरुषार्थமின்றி उपायं सिद्धिக்காதாகையால் அவை **आर्थिक**ங்கள். |
| 2.उपेयपरं - प्रणव (प्रतिपाद्य विशिष्टाय) नारायणाय नम: | नम: शब्दं, प्रह्वीभाव अञ्जलिबद्ध नमश्शब्दोच्चारणादिरूप शेषवृत्तिपरं । "शेषवृत्ति செய்துகொண்டு हृष्टा भवन्ति" என்று பொருள். மற்றவையான शेषत्व स्वरूप ज्ञान / उपायம் இன்றி शेषवृत्ति सिद्धिக்காதாகையால் அவை **आर्थिक**ங்கள். |
| இரண்டு வாக்யங்கள் :<br>3. स्वरूपपरं –<br>3.1. आय नारायणाय उम्<br>3.2. नम: | "अकार-नारायण शब्दार्थ सर्वरक्षकत्व-सर्वाधारत्व-सर्वशेषित्वமுடையவனுக்கே நான் निरुपाधिक अनन्यार्ह शेषன்" என்று स्वरूपपरं \| पुरुषार्थं **आर्थिकं** ।<br>-"நான் எனக்குரியனல்லேன்; மற்றொன்றுக்கும் निरुपाधिक स्वामिயும் स्वतन्त्रனும் அல்லேன்" என்று स्वरूपपरं \| उपायं **आर्थिकं** । |
| 4. समर्पणपरं -<br>4.1. आय नारायणाय उम्<br>4.2. नम: | "आत्मसमर्पण यागத்தில் हविस्ஸாகிற நான் अकारवाच्यனான नारायणனுக்கே भरமாக समर्पिக்கப்படுகிறேன்"<br>-"என்னைக் காக்கும் பொருப்பு எம்பெருமானுடையதே; எனதில்லை." |
| 5. पुरुषार्थप्रार्थनापरं -<br>5.1.आयनारायणाय उम्(स्यां)<br>5.2. नम: | "अकारवाच्यனான नारायणனுக்கே, कैङ्कर्यं செய்பவனாக நான் ஆவேன்" – इष्टप्राप्ति प्रार्थनापरं ।<br>-"எனக்காக அல்லேன்"-स्वार्थ-स्वाधीन कर्तृत्वादि अनिष्टनिवृत्ति प्रार्थनापरं । |
| மூன்று வாக்யங்கள் :<br>6. स्वरूप- पुरुषार्थपरं<br>6.1.प्रणवं<br>6.2. नम:<br>6.3. नारायणाय (भवेयं) | -"अकारवाच्यனான नारायणனுக்கே, நான் உரியேன் ஆவேன்;"<br>-"நான் எனக்கு உரியேன் அல்லேன்." उपायं **आर्थिकं** । } स्वरूपपरं ।<br>-"भगवाனுக்கு सर्वदेश/काल/उचित/विध कैङ्कर्यं எழவேணும். पुरुषार्थप्रार्थनापरं |
| 7. स्वरूप- पुरुषार्थपरं<br>7.1. प्रणवं<br>7.2. नम: (स्यां / स्यात्)<br>7.3. नारायणाय (स्यां) | -"अकारवाच्यனான नारायणனுக்கே, நான் உரியேன் ஆவேன்;" स्वरूपपरं ।<br>-"நானும் எனதும் எனக்கு உரியனல்லன்" இது अनिष्टनिवृत्ति प्रार्थनापरं ।<br>-"नारायणன் பொருட்டு ஆவேன்" இது इष्टप्राप्ति प्रार्थनापरं । |
| 8. स्वरूप- उपायपरं<br>8.1. प्रणवं<br>8.2. नम:<br>8.3. नारायणाय | -"अकारवाच्यனான नारायणனுக்கே, நான் शेषன்". இது स्वरूपपरं ।<br>-"रक्षणத்தில் எனக்கு स्वातन्त्र्यமில்லை; நீயே रक्षकன்"<br>-"நாரங்களின் रक्षणத்தில் उपायமானவன்". } (गोप्तृत्ववरणத்தை கூறுவதால் उपायपरं |
| 9. समर्पण- पुरुषार्थपरं<br>9.1. प्रणवं<br>9.2. नम: (स्यां)<br>9.3. नारायणाय (स्यां) | -ரக்ஷகனானவனுக்கே ஜீவன் (ஸமர்ப்பணம்) இது समर्पणपरं \|<br>-"எனக்காக நான் அல்லன்." இது अनिष्ठनिवृत्ति प्रार्थनापरं ।<br>-"நாராயணனின் चरण कैङ्कर्यத்துக்கே ஆவேன்." இது इष्टप्राप्ति प्रार्थनापरं । |

| | |
|---|---|
| 10. स्वरूप- उपाय-पुरुषार्थपरं | |
| 10.1. प्रणवं | -“अकारवाच्यனான नारायणனுக்கே, நான் शेषன்”. இது स्वरूपपरं। |
| 10.2. नमः (स्यां / स्यात्) | -“அவனை முக்கரணங்களாலும் शरणமடைகிறேன்.” இது उपायपरं । |
| 10.3. नारायणाय (स्यां) | -“स्वामित्व-परत्व आकारமுடைய नारायणனுக்கு ஆவேன்.” पुरुषार्थप्रार्थनापरं । |

-திருமந்த்ரத்தை ஒரே வாக்யமாகக்கொண்டு 2 அர்த்தங்களும்; இரண்டு வாக்யங்களாக 3 அர்த்தங்களும்; மூன்று வாக்யங்களாக 5 அர்த்தங்களும்; இவ்வாறு 10 அர்த்தங்கள் அநுஸந்திக்கப்பட்டன.

<u>விசேஷ விஷயங்கள்</u>

- अयन शब्दம்= वासस्थानं. - बहुव्रीहिயால் भगवाனின் अन्तर्व्याप्ति (இவையுள்ள இடத்தில், தன்னை இல்லை எனவொண்ணாதபடி கலந்து நிற்கை) தோற்றுகிறது. இங்கு, अन्तर्व्याप्तिக்கு अनुगुणமான प्रतिघातअनर्हत्वं(தடைக்குத் தகுதியற்றதன்மை)தான் சொல்லப்படுகிறது: अणु-परिमाणत्वं இல்லை. - तत्पुरुषத்தால், भगवाனின் बहिर्व्याप्ति (இவையில்லாதயிடத்திலும், தான் உளனாகை) தோற்றும்.
- मन्त्रத்தில் नारायणனைக் குறிக்கும் 'अकार- नर- अयनं' என்ற மூன்று शब्दங்களும் முறையே “रक्षकत्वं-कारणत्वं, नियन्तृत्वं-नेतृत्वं, उपायत्वं-उपेयत्वं” என்ற आकार-भेदத்தாலே प्रयोजकम्।
- मन्त्रத்தில் जीवனைக்குறிக்கும் 'मकार – नार' என்ற இரு शब्दங்களும் முறையே “ज्ञानस्वरूप- ज्ञान गुणकன்- अणु, क्षयமில்லாத नित्यன்- परस्पर भेदமுள்ளவன்” ஆகியவற்றைக் காட்டுகின்றன.
- प्रणवம் शब्दத்தால் शेषप्राधान्यம்; अर्थத்தால் शेषिप्राधान्यம். नारायण शब्दமோ शेषिप्राधान्यம்.
- नारशब्दம், व्यापन- भरण- नियमन- स्वाम्यादिகளால் नर-नारங்களுக்கிடையே உள்ள भेदத்தைக் காட்டுவதால், “*அவைகளுக்கு स्वरूप ऐक्यं*” சொல்லும் कुदृष्टि मतங்கள் निरसिக்கப்படுகின்றன.
- ब्रह्मத்தைக் குறிக்கும் वेदवाक्यங்கள் – (स्वरूपத்தைக் காட்டும்) **शोधक**; (அதனிடமிருந்து உண்டானவை என்னும்) **कारण**; (उपासनத்தை विधिக்கும்) **उपासन वाक्य**ங்கள் என மூவகையாம். அதுபோல் नारायण शब्दமும் – (क्षयरूप दोष अभावத்தைக் காட்டும் नर शब्दம்) **शोधक;** (नराज्जातानि तत्वानि नाराणि என்று) **कारण;** (ईयते अनेन என்பதால் अयन शब्दத்தால் उपायம் சொல்லி गति/ बुद्धि कर्मत्वங்களைக் குறிப்பதால்) **उपासन वाक्यार्थ**ங்களைச் சொல்கிறது.
- नारायणशब्दத்தை स्वर-व्यञ्जनங்களாக (न्+अ+र्+आ+य्+अ+ण्+अ) பிரித்தாலும் अष्टाक्षरமாகும்.
- மந்த்ரத்தில், 'न' முதலான ஏழு அக்ஷரங்களுக்கு பூர்வர்கள் இப்படிப் பொருள் சொல்வர் :
  -न என்பதால், க்ஷேமங்களைக் கொடுத்தல், பரமபதத்தில் பற்று உண்டாக்குதல், அதற்கு விரோதியான குணங்களை நாசம் செய்தலும்; -म என்பதால், அடியவர்க்கு மங்களத்தைச் செய்தல், ஞானவிகாஸம் செய்தல், பிறர் வணங்கும் படி செய்தலும்; -ना என்பதால், நாஸ்திகத் தன்மையை விடுதல், எப்போதும் பகவானுக்கு கைங்கர்யம் செய்தல், பரமபதம் சேர்க்கும் ஆசார்யத்வமும்; -रा என்பதால், பகவானிடம் உடனே ப்ரீதியுண்டாக்குதல், மற்றவையில் ஆசை விடுதல், உலகைக் காத்தலும்; -य என்பதால், பகவானை அடைவதில் ஊற்றமும், அதால் பயனும்; -णा என்பதால், பகவனைத் துதிப்பதும், அதற்குத் தேவையான வாக்-சித்தியும்; -य என்பதால், யக்ஷ-ராக்ஷஸ-வேதாள-பூதங்கள் பயந்து ஓடுதலும், சொல்லப்பட்டன.
  <u>फलं</u> : திருமந்த்ரத்தில் यथार्थज्ञानமும் நிஷ்டையுமுடையவரை ஆதரிக்கும் தேசத்தில், “प्रधान व्याधिகளாக எடுத்த रागादिகளும், ஸத்துக்களுக்கு श्री என்று ஓதப்பட்ட ஜ்ஞான ஸம்பத்தில் குறைவும், आत्मापहारादिகளைப் பண்ணும் महातस्करரான अहङ्कारादिகளும்” நடையாடாது.

## 28. द्वयाधिकार:

*“திருமால் பாதமிரண்டும் சரணெனப்பற்றி, அடிமை” கொள்ளுதல்*

**<u>த்வயம் எனப் பெயர் வந்தமை</u> :**

- மந்த்ரத்தின் முதல் பகுதி பகவானை சரணமடைவதையும், இரண்டாவது அவனிடம் கைங்கர்யத்தையும் வேண்டி, இப்படி பகவானையே இரண்டு (उपाय-उपेय)மாகப் प्रतिपादिப்பதால்;
- शरणवरणादि अङ्गம் स्वरूप-भर-फलसमर्पणமான अङ्गि இரண்டையும் சொல்வதால்;

**<u>த்வயத்தின் பெருமை</u> :**

- ✓ இது श्रुतिमूलமான, 25 அக்ஷரங்கள் கொண்ட तान्त्रिकमन्त्रम् । श्रीप्रश्नத்தில் प्रथमाचार्यனான भगवान् प्रियतमैயான लक्ष्मीக்கு उपदेशिத்ததால், இதை पूर्वाचार्य वाक्यं என்றும் சிலர் சொல்வர்.
- ✓ இம் मन्त्रத்தின் सकृदुच्चारणமே उत्तारकं என்பது शास्त्रसिद्धम् ।
- ✓ இம் मन्त्रத்தால் भरसमर्पणத்தோடு கூடிய आत्मसमर्पणं, विवक्षितम् ।
- ✓ मूलमन्त्रं சுருக்கிய अर्थங்களை இது पूर्णமாக प्रकाशिப்பதால், மற்ற मन्त्रங்களுக்குள் प्रधानम् ।
- ✓ श्री भाष्यकारரின் शरणागति गद्यं, இந்த द्वयத்தின் विवरणமே .

| पद/ अक्षरங்கள் | விளக்கம் | | |
|---|---|---|---|
| (पूर्वखण्डத்தில்) श्रीमन्नारायण = श्री +मतुप् प्रत्यय: + नारायण | - वेदங்கள் सर्वशरण्यமான परतत्वத்தை, श्रिय:पतित्व लिङ्गத்தாலும் नारायण शब्दத்தாலும் निर्णयिத்தன. இந்த இரண்டையும் கொண்ட இப்பதத்தில் சொல்லும் लक्ष्मी विशिष्टत्वं, மந்த்ரத்தின் இரு स्थलங்களிலும் विशेषणंதான்.<br>- த்வயத்தில் 'ஸ்ரீ' शब्दத்துக்கு - उत्तरखण्डத்தில் प्राप्यतैக்குத் தகுந்த उभयविभूति शेषित्व-अतिशयकरत्वादिகளையும், पूर्वखण्डத்தில் भगवाனின் उपायभावத்துக்கு தகுந்த पुरुषकारत्व-उपायविरोधि अनिष्ट निवर्तकादिகளையும் (இப்போது स्वामित्वनिबन्धनங்களான आनुकूल्य सङ्कल्प- प्रातिकूल्यवर्जनங்களையும்) अर्थமாக- अनुसन्धिக்கவேணும். | | |
| श्री | श्रुट् = श्रवणे | श्रृणोति | -आश्रितரின் आर्तध्वनिயைக் கேட்கிறாள்.<br>-எம்பெருமானிடம் उपदेशம் பெறுகிறாள்.<br>-भगवाனிடம் लोकहितங்களைக் கேட்கிறாள். |
| | | श्रावयति | -நமக்காக भगवाனிடம் प्रार्थिக்கிறாள்.<br>-பெற்ற उपदेशத்தைத் தக்க தருணத்தில் भगवा-னிடம் விண்ணப்பிக்கிறாள்.<br>-विपरीतரான जीवனுக்கும் उपदेशिக்கிறாள். |
| | श्रिण् = सेवायां | श्रीयते | -நம்மால் அடையப்படுகிறாள் (मातृत्वप्रयुक्त वात्सल्यातिशयத்தாலே पुरुषकारभूतैயாகிறாள். |
| | | श्रयते | -भगवद्वाल्लभ्यம் தோற்ற अतिशयकारिणिயாய் நமக்காக सर्वेश्वरனை आश्रयிக்கிறாள். |
| | शृ = हिंसायां | श्रृणाति | -उपाय / कैङ्कर्य विरोधिகளான நம் पापங்களைக் கழிக்கிறாள். |
| | श्रीङ्ग् = पाके | श्रीणाति | आश्रितர்க்கு कैङ्कर्य पर्यन्तமான गुणपरिपाकத்தை உண்டாக்குகிறாள். |

| पद/ अक्षरங்கள் | விளக்கம் (தொடர்ச்சி) |
|---|---|
| मतुप् (प्रत्यय:) | பிராட்டியை விட்டுப்பிரியாத नित्ययोगத்தைச் சொல்லும். இதனால் सापराधர் सन्देहமின்றி நினைத்தபொழுது எம்பெருமானை आश्रयिக்க முடிகிறது. |
| नारायण | -இச் शब्दத்திற்கு मूलमन्त्रத்தில் சொன்ன अर्थங்களெல்லாம் கொள்ளவேணும்.<br>प्रधानமாக, पूर्वखण्डத்தில் वात्सल्य-स्वामित्व-सौशील्य-सौलभ्य-सर्वज्ञत्व-सर्वशक्तित्व-सत्यसङ्कल्पत्व-परमकारुणिकत्व-कृतज्ञत्व-स्थिरत्व-परिपूर्णत्व-परमोदारत्वादिகளையும் ;<br>उत्तरखण्डத்தில், समस्तगुणविभूतिविशिष्टனாக, அதிலும் प्रधानமாக, शेषित्व-निरतिशय भोग्यत्वादिகளை अनुसन्धिக்கவேணும். |
| चरणौ | -उपायமான भगवत्कृपैயைத் தூண்டிவிடுவதாலும், மிகவும் भोग्यமாக இருப்பதாலும், अकिञ्चनன் பகவானின் திருவடிகளையே பற்றுகிறான்.<br>-'चरणौ' என்றது भगवाனின் दिव्यमङ्गळविग्रहத்துக்கு उपलक्षणं ।<br>-मुमुक्षुவுக்கு प्रधानं, श्रिय:पतिயின் सर्वस्मात्परत्वமும் नित्यविग्रहयोगமும். 'श्रीमन्नारायण'வில் सौलभ्यंகூடிய परत्वத்தையும், 'चरणौ'வில் नित्यविग्रहयोगத்தையும் अनुसन्धिக்கவேணும்.<br>▪ 'नारायण'வில் गुणविभूत्यादिகள் தெளியாதார்க்கு दिव्यमङ्गळ विग्रहமே இலக்காகும்.<br>▪ தன் दिव्यमङ्गळविग्रहं, भगवाனுக்கேகூட भोग्यமாக இருக்கும்.<br>▪ विग्रहத்துக்கு மட்டும்தான் शुभत्वं (பாபங்களைப் போக்கும் தன்மை), आश्रयत्वं (தன் ரூபத்தை सकल मनुज नयनविषयமாகப் பண்ணுகை) இரண்டும் உண்டு. |
| शरणं | अहिर्बुध्न्य वचनப்படி, இதற்கு उपायं என்று பொருள். न्यासविद्यैயில் विशेषिத்து, उपयान्तर स्थानத்தில் பகவானை நிறுத்துகை என்பர். |
| प्रपद्ये | पद्ल् = गति ➡ बुद्धि = रक्षिष्यतीति विश्वास: । प्रकर्षமான विश्वासம் என்றாகி, இம் महाविश्वासத்தை முன்னிட்ட उपाय प्रार्थनैயும் गोमृत्ववरणமும் कार्पण्यமும் பொருளாம். |
| पूर्वखण्डம் सर्व शरण्यत्वं, शरणागति स्वरूपं, அதன் परिकरங்கள், अधिकारि विशेषं, अनन्योपायत्वं சொல்கிறது. | |
| उत्तरखण्डத்தில் श्री | पूर्वखण्डத்தில்கொண்ட பல अर्थங்களுக்குள், श्रिण्= सेवायां என்றபடி सेव्यादिகளைச் சொல்லி कैङ्कर्यத்தைப் பெறுகிறாள் என்பதை अनुसन्धिக்கவேணும். |
| मतुप् | उभयविभूतिविशिष्टமாய் आत्म-हविरुद्देश्यமாய் शेषत्व प्रतिसंबन्धिகளாய் कैङ्कर्यத்துக்கு प्रधान प्राप्यராய் இருப்பவர் இவ்விशिष्ट दंपतिகள்தான்" என்கிறது. |
| नारायणाय | -प्राप्यतैக்குத் தகுந்த स्वामित्वादिகளும் सर्वप्रकार निरतिशय भोग्यतैயையும் காட்டுகிறது.<br>-'आय', परिपूर्णानुभवपूर्वक कैङ्कर्यத்தை (इष्टप्राप्ति) प्रार्थिப்பதால் 'भवेयं' என சேர்க்கவும். |
| नम: | कैङ्कर्यத்தில் स्वाधीन-स्वार्थ कर्तृत्व/भोक्तृत्वங்களைகழித்து, "न मम किञ्चित्स्यां" என்கிறது. |
| पूर्वखण्डத்தில் தோற்றின शरणागतिயால் கிடைக்கும், भगत्स्वरूपத்துக்குத் தகுந்த फलविशेषத்தை, "தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே" என प्रार्थिப்பதே उत्तरखण्डத்திதின் கருத்து. | |
| द्वयத்தின் திரண்ட பொருள்: "सर्वस्वामिயான श्रीमन्नारायणன் திருவடிகளில் सर्वदेश-काल-अवस्थोचित सर्वविध कैङ्कर्यத்துக்கும் विरोधिயான सर्वமும்கழிந்து परिपूर्ण कैङ्कर्यंபெறுகைக்கு, अकिञ्चनனான அடியேன் स्वरक्षा- भरणादिகளில் எனக்கு अन्वयं அறும்படி, श्रीमन्नारायणன் திருவடிகளில் अङ्गपञ्चकமான अत्मरक्षाभर-फल समर्पणं பண்ணுகிறேன்." | |

फलं : ஆக, द्वयத்தை अनुसन्धिப்பதைக் காட்டிலும் क्षेमத்தையளிப்பது ஒன்றுமில்லை.

## 29. चरमश्लोकाधिकार:

*“மன்னருள் வாசகத்தால் மருளற்றமை”*

शरणागतिயை स्पष्टமாக विधिக்கும் चरमश्लोकம் இங்கு விளப்படுகிறது.

**चरमश्लोकத்தின் अवतारமும், பெயர் வரக் कारणமும் :**

श्रिय:पतिயான सर्वेश्वरன் साधु-संरक्षण/ दुष्ट-निग्रहத்துக்காகவும், धर्म-संस्थापनத்துக்காகவும் विभव अवतारமாக துவராபதி மன்னனாகி, पाण्डवர்க்குத் தூது போய், अर्जुनனை रथिயாக்கி தான் सारथिயாய் எளியனாம்படிநின்று, शरणागतர் எல்லோரும் பரமபதத்தை அடைய ஒரு व्याजத்தை எதிர்பார்த் திருந்தான். அத் தருணத்தில், போரில் நிச்சயமாக மடியப்போகும் தன் आचार्य-बन्धुக்களைக் கொல்வதால் “*पापंநேரும்*” என (தகாத தருணத்தில்/ தவறான பயத்தினால்) கலங்கின अर्जुनன், “தனக்கு हितமானதைத் தெளிவிக்கவேணுமென” प्रार्थिக்க, भगवाனும் आत्मस्वरूपத்தின் नित्यत्वத்தையும், परमपुरुषार्थंபெற परंपरया कारणமான कर्म-ज्ञानयोगங்களையும், நேர் उपायமான भक्तियोगத்தையும் सपरिकरமாகச் சொன்னான். இந்த उपायங்களுக்கு योग्यतैயில்லாதவர்களுக்காக, கடைசியில் “தன் திருவடிகளைப் பெறுகைக்கும் மற்றும் விரும்பியவை எல்லாவற்றுக்கும் பொதுவான साधनமாய், அதற்குண்டான ஐந்து அங்கங்களைத்தவிர வேறு எந்த परिकरமும் வேண்டாததாய், செய்வதற்கு எளியதாய், ஒரு நொடியில் பண்ணக்கூடியதான” रहस्यतम उपायத்தை உலகத்தோர் உய்யும் வகையாய் उपदेशिத்தான். **இவ்விஷயத்தில் இதற்கு மேல் அறிந்துகொள்ளவேண்டியது ஒன்றுமின்றி** முடிவாய் **विधिத்ததனால்**, இதற்கு चरमश्लोकமெனப் பெயர் வழங்கப்படுகிறது.

| पद/ अक्षरங்கள் | **விளக்கம்** |
|---|---|
| सर्व धर्मान् | धर्मமாவது- शास्त्रத்தினால்மட்டுமே அறியவேண்டிய पुरुषार्थसाधनम् ।<br>’सर्व’ शब्दத்தாலே अङ्गिகளான பல்வேறு धर्मங்களைக் குறித்தபோதிலும், இந்த संदर्भத்தில் सद्विद्या-दहरविद्यादि भक्तियोगமோ, அல்லது परिकर-बहुत्वமோதான் विवक्षितं ।<br>-’सर्व’ शब्दத்தை, ’एक’ शब्द प्रतिसंबन्धिயாய் धर्म कात्स्र्यமாகவும் योजिக்கலாம். |
| परित्यज्य<br>(परि + त्यज्य) | -त्यागமென்றால், अकिञ्चन நிலைமையைக்கண்டு, வேறு எந்த உபாயத்திலும் உண்டாகும் **ஆசையின்மை** (नैराश्यं) – ஒரு கார்யத்தில் ஆசையாலே प्रवृत्तिத் தால், அதில் ஆசையை <u>விடுகை</u> ’त्यागம்’தானே !<br>-परि என்பதால் अत्यन्त अकिञ्चनனுக்கு सर्वकाल/ सर्वप्रकारத்தாலும் இருக்கும், **ஆசையில்லாமையின்** अतिशयம் சொல்லப்படுகிறது. |

सर्व धर्मान् परित्यज्य–अधिकार पक्षं – मुमुक्षुவின் आकिञ्चन्याधिकारத்தைக் குறித்து, மேலே ’माशुच:’ என்கிறது.
अनुवाद पक्षं - ஏற்கனவே உள்ள मुमुक्षुவின் நிலையைக் குறித்து, மேலே ’मां एकं’ என்கிறது.
विधि पक्षं – ’कार्पण्यமாகிற प्रपत्यङ्गத்தை विधिப்பது’ [அதாவது ’सर्वधर्मங்களும் தன்னை योग्यता पर्यन्त மாகக் கழித்தபடியை நீ முன்னிட்டுக்கொண்டு’] என்பதிலோ; அல்லது “(आचमनं/ शौचं போன்ற) வேறொரு धर्मानुष्ठानத்தையும் எதிர்பார்க்காத प्रपत्तिயின் नैरपेक्षத்திலே”யோ நோக்கு.

இவ்வளவால், *“कर्म- ज्ञान- भक्तियोगங்களாகிற धर्मங்களின் स्वरूपत्यागம், प्रपत्तिக்கு अङ्गமாக विधिக் கப்படுகிறது”* என்று சொல்லும் *विधि पक्षं (!)*, शास्त्र/ संप्रदाय विरुद्धं என்பதால் निराकरिக்கப்பட்டது.

| | |
|---|---|
| மாਂ | -'மாਂ / ஏகਂ' பதங்களில் பகவானின் ஸௌலப்ய/ ஸ்வாதந்த்ர்யங்கள் அடைவே ப்ரதாநமாகவும், ந்யாஸவித்யையாம் ப்ரபத்திக்கு விஶேஷ ஆகாரமான நிரபேக்ஷ உபாயத்வத்துக்குத் தேவையான "ஸர்வரக்ஷகத்வ- ஸர்வ ஶேஷித்வ- ஶ்ரிய:பதித்வ- நாராயணத்வ- ஸர்வஜ்ஞத்வ- ஸர்வஶக்தித்வ- பரமகாருணிகத்வ- ஸௌஶீல்ய/ வாத்ஸல்ய/ திவ்யமங்கள விக்ரஹ விஶேஷத்வங்களும், விவக்ஷிதங்கள்.<br>-மேலும், 'மாਂ' என்பதில்,'என்றோ நம்மை இவர்கள் அபேக்ஷிப்பது' என ஆஶ்ரிதரக்ஷணத்துக்கு ஸமயத்தை எதிர்ப்பார்த்து எம்பெருமான் அபிமுகனாய் நிற்கும் நிலை ஸூசிதம் । |
| (-சாதனமும் நற்பயனும் நானேயாவன்;<br>-சாதகனும் என் வயமாய் என்னைப் பற்றும்; | ✓ ப்ராப்யனான பகவானே ப்ராபகனானபடிக்கு, உபாய-பல ஐக்யம் சொல்கிறது.<br>✓ 'கேவலம்' என்ற பொருளில் அவதாரணார்த்தம் சொல்கிறது. இதனால் ஜீவன், ஶாஸ்த்ரப்படி வஶீகரணார்த்தம் உபாயம் அனுஷ்டிக்கையாலே ரக்ஷணத்தில் (ஜ்ஞான-சிகீர்ஷா-ப்ரயத்நங்கள் மூன்றும் சேர்ந்ததான) கர்த்ருத்வம் தோற்றி, ஸ்வாதீன கர்த்ருத்வமுடைய ஶரண்யனோடொக்க தன்னையும் உபாயமாக எண்ணும் உபாய-த்வித்வம் கழிக்கிறது.<br>[எம்பெருமானாலே ப்ரேரிதனாய், அவன் ஸஹகரியாத போது நீட்ட-முடக்க மாட்டாதே, அவன் கொடுத்த கரணங்களைக்கொண்டு அவன் காட்டின உபாயத்தை அவன் துணைசெய்ய அனுஷ்டித்து, அவன் கொடுக்கப்போகும் பலத்துக்கு அண்ணாந்திருக்கும் ஜீவன், அவனுக்கு துல்யமென எண்ணுவது விவேகம் அல்லவே! ஆக, பகவானுக்குள்ள - ஒரு கார்யத்தில் ஜீவனை ப்ரவர்திப்பிக்கும் காரயிதா/ பலப்ரதானாதிகளில் ப்ரவர்திக்கும் கர்தா/ ஒரு கார்யத்தில் ப்ரவ்ருத்தனான ஜீவனை விலக்காத உபேக்ஷகன்/ அப்போது இசைந்திருக்கும் அனுமந்தா/ இளந்தலை சுமப்பவனுக்கு, தான் பெருந் தலை சுமப்பவனாய் ப்ரவர்திக்கும் ஸஹகாரி என்ற- 5 நிலைகள் குறிக்கப்பட்டன.] |
| -சாதனமும் சரணநெறி அன்று ;<br>-சாதநங்கள் இந்நிலைக்கோர் இடையினில்லா;<br><br>-வேறங்கம் இதனில் வேண்டா;<br>-வேறெல்லாம் நிற்கும் நிலை நானே நிற்பன்) | ✓ ஸாத்யோபாயமானதும்/ பகவதனுக்ரஹத்துக்குக் காரணமானதுமான ப்ரபத்தியை ஸித்தோபாயனான பகவானுக்கு ஸமமாக எண்ணுவதைத் தடுக்கிறது.<br>✓ அகிஞ்சனன்மேல் உபாஸனத்தைச் செய்யும் சுமையைச் சுமத்தாமல், தன் காருண்ய-வாத்ஸல்யங்களடியாக பலத்தைக் கொடுக்க ஸங்கல்பிக்கும் ஶரண்யன் தனித்து நிற்கும் நிலை சொல்கிறது.<br>✓ பரிபூர்ணனை ஶரணமாகப் பற்றும்போது (ஆனுகூல்ய ஸங்கல்பாதிகளைத்தவிர) வேறு எந்த அங்கமும் ப்ரதான உபாயகோடியில் சேராமையைக் குறிக்கிறது.<br>✓ சரமஶ்லோகத்தில் இருமுறை வரும் ஸர்வஶப்தம், ஏக ஶப்தம் ப்ரதிஸம்பந்தியாய் நின்று, "உபாயாந்தரங்கள்தரும் பலனையெல்லாம் பகவான்ஒருவனே கொடுப்பன்" என்றும்; "உபாய/ ப்ராப்தி விரோதிகளைக் கழிப்பன்" என்று பொருள்படுகிறது. |
| ஏகம் | "பகவான் ஒருவனே உபாயம் என்றிருந்தபோதிலும், அவனுக்கு விஶேஷணமாய் நின்று, பிராட்டியும் உபாயமாகிறாள்" என்பது ஸித்தோபாயஶோதனத்தில் நன்கு விளக்கப்பட்டது. |

<table>
<tr><td>शरणं</td><td>द्वयाधिकारத்தில்சொன்ன अर्थமெல்லாம் இங்கேயும் अनुसन्धिக்கவேணும்.</td></tr>
<tr><td colspan="2">मामेकं शरणं என்பதால் मुमुक्षुவின் अनन्यशरणत्वं सिद्धिக்கிறது.</td></tr>
<tr><td>व्रज</td><td>-द्वयத்தின் 'प्रपद्ये' என்பதைப்போல், सपरिकर आत्मनिवेदनமே பொருள்.<br>-இது, अर्जुनனைக்குறித்து विधिக்கப்பட்டிருந்தாலும், प्रमाणங்களை ஒட்டி, "எல்லோர்க்கும்" பொருந்தும் எனக் கொள்ளவேணும்.<br>-"இது शास्त्रजन्य-संबन्धज्ञानं " என எங்காவது சொல்லியிருந்தால், 'संबन्ध अनुसन्धानगर्भமாக இருக்கவேணுமென்கைக்காகச்சொன்னது' என்பதே பொருள்.</td></tr>
<tr><td colspan="2">ஆக, पूर्वार्धத்தால் अकिञ्चन-अधिकारि कृत्यமான उपायத்தை ईश्वरன் विधिத்தார், எனத் தேரும்.</td></tr>
<tr><td>अहं</td><td>'मां'என்பதால் கீழே अनुसन्धिத்த अर्थங்களுடன், "अपराधம் பண்ணினவனை விலங்கிட்டுவைத்த समाधिकदरिद्रனான நான், ஒரு व्याजத்தாலே उल्लसित कारुण्यனாய் अपराधத்தைப் பொறுத்துவிடும்போது விலக்கவல்லாரில்லை; வேறொருவனாலே இவனை முக்தனாக்கவும் ஒண்ணாது" என்பதையும் கொள்ளவேண்டும். ஆக, सहजकारुण्यादिகளை பேரணியாக்கி प्रपत्तिயடியாக வந்த प्रसाद विशेषத்தை 'अहं' शब्दம், अघटितघटनासामर्थ्यादिகளை विवक्षिத்துக்கொண்டு भगवाனின் स्वातन्त्र्यமானது, सर्वविरोधि निराकरणार्थமாக முன்னே நிற்பதைக் காட்டுகிறது.</td></tr>
<tr><td>त्वा</td><td>"उपदेश परंपरैயாலே चिदचिदीश्वर तत्वत्रय विवेकं பிறந்து ऐश्वर्यादि पुरुषार्थங்களின் अल्प-अस्थिरत्वादि दोषங்களைத் தெளிந்து, भगवत्प्राप्तिरूपமான परमपुरुषार्थத்தைப் பெறவேணுமென்ற ஆவலுடன் இதற்கான कठिन उपायान्तरத்தில் துவக்கற்று, பகவான் பக்கலிலே भरन्यासं பண்ணி कृतकृत्यனாய், கோரின फललाभத்தைப்பற்ற இனி ஒரு कर्तव्यान्तरத்தில் प्राप्तिயில்லாத உன்னை" என்று तात्पर्यம்.</td></tr>
<tr><td>सर्व पापेभ्य:</td><td>-'अहं' என मोक्षप्रदனையும், 'त्वा' என मुमुक्षुவையும்சொல்லி, அடுத்து 'सर्व पापेभ्य:' என बन्धकங்களைச் சொல்கிறது. मुमुक्षु विषयத்தில் पापமாவது, शास्त्रத்தால் அறியும் प्रतिकूलप्राप्तिயும், अनुकूलनिवृत्तिயும், अनिष्टफलமான सांसारिक पुण्यமுமாம்.<br>- सर्व शब्दத்தால், विरोधिवर्गமாக மூன்று चूर्णिकैயாலே शरणागति गद्यத்தில் விளக்கப்பட்டதும் प्राप्तिविरोधिயான कर्मத்துக்கு कारण-कार्यமாக வருவதுமான स्थूल/ सूक्ष्मरूप प्रकृति संबन्धத்தையும் पापराशिயில் சேர்க்கிறது.<br>- पापेभ्य: என்ற பன்மையினால், पापங்களின் आनन्त्यं சொல்கிறது;<br>-सर्वपाप शब्दத்தில், उपासनपूर्तिக்காக प्रपत्तिசெய்தவனின் उपायविरोधिகள்; मोक्षार्थ प्रपत्ति செய்தவனின் प्राप्तिविरोधिகள்; प्रतिकूल अनुभवहेतुக்கள் ஆகியவை சேரும்.<br>• उपायविरोधिயாவது – ' இவன் நம்மைத் தெளிந்து வசீகரிக்கக் கடவனல்லன்' என்ற ईश्वर सङ्कल्पம்;<br>• प्राप्तिविरोधिயாவது – 'தவறுசெய்த இவன் நம்மை அடையக் கடவனல்லன்' என்ற ईश्वर सङ्कल्पம்;<br>• प्रतिकूल अनुभवहेतुக்களாவன – அந்தந்த प्रतिकूल अनुष्ठानங்களினால் भगवाனுக்கு உண்டாகும் फलप्रदान सङ्कल्पம்.</td></tr>
</table>

| | |
|---|---|
| मोक्षयिष्यामि | பாபங்களினின்று விடுவிப்பது என்பது - भगवानைப் பொறுத்தவரையில் ஜீவனின் अनादि विपरीत अनुष्ठानத்தாலே பிறந்த निग्रहத்தை விடுதல் என்ற अभिप्राय विशेषं. இதனால் निग्रहकार्यமான अविद्यादिகள் निवृत्तங்கள். ஜீவனைப்பொறுத்த வரையில், ज्ञानविकासादिகள் ஏற்படுவதும், விரும்பியபோது मुक्तனாக்கப்படுவது மாகும். मुमुक्षु विषयத்தில், निग्रहங்கள் निवृत्तமானால் निग्रहकार्यமான अचित् संसर्गம் கழிந்து, स्वत:प्राप्तமான परिपूर्ण भगवदनुभवம் आविर्भविக்கிறது. |
| मा शुच: | "उपायानुष्ठानத்துக்கு முன் अधिकारத்தைப் பற்றியதும், मध्यத்தில் प्रपत्ति उपायத்தைப் பற்றியதும், उत्तरकृत्यத்தில் फलसिद्धिயைப்பற்றியதும் – இவ்விதமான எல்லா வருத்தங்களும் கழிந்து, भगवदनुग्रहपात्रமான ஜீவன், प्रपत्तिக்குப் பிறகு शोकिத்தால் प्रपत्तिக்கு முன்பு வருந்தாதிருத்தல் போன்று अनिपुणकृत्यமாய், उपायवैलक्षण्यத்துக்கும்/ भरस्वीकृत सिद्धोपायனின் प्रभावத்துக்கும்/ न्यस्तभरனான இவன் स्वभावத்துக்கும் பொருத்தமில்லாததாகும்" என்று तात्पर्यம். இப்படிப்பட்ட :- |

| शोकங்களும் | அவை கழியும் படிகளும் |
|---|---|
| 1.शरणागति धर्मத்துக்கு जाति-वर्ण-आश्रमादि नियमங்கள் இருக்குமோ ! | मोक्षं பெற ஆசையும் सर्वेश्वरனிடம் पूर्णविश्वासமும், தன் आकिञ्चन्यज्ञानமுமுள்ள எல்லோரும் अधिकारि என்பதால். |
| 2.प्रपत्ति उपायं செய்ய कष्टமாயிருக்குமோ! | प्रपत्ति, நொடியில், ஒரேமுறை, வேறு अङ्ग உதவியின்றி செய்வதாய், விரும்பிய फलனளிக்குமென தெளிவதால். |
| 3.लघूपायமான प्रपत्तिக்கு भगवान् फलன் கொடுப்பானா ! | प्रपत्तिயால் वशीकरिக்கப்பட்ட भगवान्, सर्वसुलभனும், மிக்க विश्वसनीयனும், परमकारुणिकனும், அளவுபடுத்தப் படாத स्वतन्त्रனும், सिद्धोपायனும் எனத் தெளிவதால். |
| 4.उत्तरकृत्य आज्ञानुज्ञाकैङ्कर्यங்களில் தவறு நேர்ந்தால் प्रपत्तिफलன் குறைவுபடுமோ ! | இந்த कर्मங்களெல்லாம் प्रपत्तिக்கு अङ्गமல்ல எனத் தெளிவதால். |
| 5.बुद्धिपूर्व उत्तराघं நேர்ந்தால் என்ன செய்வது? | प्रपत्ति अनुष्ठिக்கும்போதோ, பிறகு தனியாகவோ प्रपत्ति செய்வதால் கழியும் எனத் தெளிவதால். |
| 6. बुद्धिपूर्व उत्तराघத்துக்கு नरकादि क्लेशங்கள் உண்டோ ? | கிடையாது; प्रपन्नனுக்கு भगवान् अनुतापம் உண்டாக்கி पुन:प्रपत्तिயில் மூட்டியோ, लघुशिक्षैயாலோ, மேலே अपराधं பண்ணவிடாமல் விலக்கியோ செய்வதால். |
| 7.नरकसमानமான இச்शरीरம் தொடருமோ? | आर्तप्रपन्नனுக்கு அப்போதே शरीरம் கழியும் என்பதால். |
| 8.சில दुष्कृतங்கள் सुकृतनाशங்களாவதுபோல், प्रपत्तिக்குப் பின் நேரும் दुष्कृतங்களால் प्रपत्ति फलன் அழிந்துவிடுமோ? | निवृत्ति धर्मங்கள் 'இட்டபடை கற்படை' என்னும் கணக்கிலே, செய்த அளவு அழியாதவை; மேலும் भगवान् शरणागतனை ஒருபோதும் கைவிடான் என்பதால். |
| 9.प्रारब्धकर्मத்தால்,மேலே பிறப்புகள்நேருமோ | இந்த जन्म முடிவிலேயே मोक्षवேண்டி कालம் குறித்தால். |
| 10.சில வித்யைகளில், மோக்ஷத்துக்கு முன் சிலகாலம் कैवल्यानुभवம் உண்டாவதுபோலே, प्रपन्नனுக்கும் फलன் தாமதமாகுமோ ! | अनन्यप्रयोजनனான இவனுக்கு सर्वपापங்களும் निश्शेष-மாகக் கழிவதால், தாமதமாகாது. |

ஆக उत्तरार्धத்தால், द्वयத்தில் उत्तरखण्डத்தில் சொன்ன फलமானது, 'नम:' शब्द संक्षिप्त अनिष्टनिवृत्ति विवरण मुखத்தாலே சொல்லப்படுகிறது.

चरमश्लोकத்தின் திரண்ட பொருள் :

"चेतनனே! अल्पமான ज्ञान-शक्ति-आयुस् உடைய, ஆனால் மோக்ஷம்பெற विळंबத்தைப் பொறுக்காத நீ, செய்ய அரிதாயிருக்கும் उपायங்களில் அலையாதே, மிக எளியனாய், எல்லாவற்றிற்கும் அடைக்கலமாய் அதற்கு ஏற்ற எல்லா குணங்களையும் கொண்ட என்னை ஒருவனையே उपायமாக वरिத்து, ஐந்து अङ्गங்களுடன் भरसमर्पणத்தைப் பண்ணு.

परमकारुणिकனாய் सुप्रसन्नனாய் निरङ्कुश स्वातन्त्र्यனாய் स्वार्थप्रवृत्तனான நானே; कृतकृत्यனாய், எனக்கு அடைக்கலமாய், अत्यर्थ प्रियतमனான உன்னுடைய, பலவகைப்பட்டதும், அளவற்றதும், உன்னால் ஒழிக்க முடியாததுமான विरोधिवर्गத்தை மேலும் தொடராதபடி, என் सङ्कल्पमात्रத்தாலே வேரறுப்பேன். என்னையும் என்னுடையவற்றையும் நீ अनुभविக்கத்தந்து, உன்னை எனக்கு ஸமமான भोगமுடையவனாக்கி, அந்த अनुभवத்தின் போக்குவீடாக, எங்கும் எப்போதும் எந்நிலையிலும் செய்யத்தக்க எல்லாவகை कैङ्कर्यத்தையும் உனக்குக் கொடுத்து மகிழ்வேன். நீ ஒன்றுக்கும் சோகிக்க வேண்டாம்" என்று पार्थसारथिயான भगवाன் அருளிச் செய்கிறார்.



ஸ்ரீ ரங்கநாயகி தாயார் - நம்பெருமாள் சேர்த்தி பங்குனி உத்திரம் ஸேவை
ஸ்ரீரங்கம்

## 30. आचार्यकृत्याधिकार:

*"அருளுற்ற சிந்தையினால் அழியாவிளக்கேற்றினர்"*

**सदाचार्यர்களின் செயல் :**

- वेद/ शास्त्रங்களில் ஆங்காங்கே சொல்லப்பட்ட रहस्यங்களையெல்லாம் ஒன்று திரட்டுதல்;
- அவைகளின் अर्थங்களைத் தாங்களும் अनुसन्धित्து, आस्तिक्यं முதலிய सत्वगुणமுடைய शिष्यர்களுக்கு, நன்கு परीक्षै செய்தபின், अषट् कर्णமாக (மூன்றாம் நபர் கேளாவண்ணம்) उपदेशिப்பது;
- गुणநலம் இல்லாத असुरप्रकृतिகளுக்கு, தெளிவிக்காமல் மறைப்பது;
- இப்படி, சீரிய धनத்தை சேமித்து வாழுமாப்போலே, फलன் பெற்றவர்களாக वर्तिப்பது:

ஆக, संप्रदाय प्रवर्तनமே आचार्यனுடைய मुख्य செயல் என்று சொல்லப்பட்டது.

**सदाचार्यர்கள் செய்யும் उपदेशம் :**

विशेष ज्ञानமில்லாது, रहस्यार्थங்களைத் தெளிவாய் உணரமுடியாதவர்களாய் தாம் உய்வதற்கு अवश्यமான विषयங்களை மட்டும் சுருக்கமாகத் தெரிந்துகொள்ள விரும்பும் साधारण अधिकारिகளுக்கு :

"तत्वமாவது - आत्मा என்பவன் देह-इन्द्रियादिகளைவிட வேறுபட்டவன்; नित्यனானவன்; இவை இரண்டையும்விட வேறான – शेषिயான परमात्मा ஒருவன் உண்டு. இப்परमात्माவை ஒழிய இவ் आत्माவுக்குத் தானோ/ பிறரோ रक्षकராகமாட்டார்;

हितமாவது - अनादिकालம் संसरित्துப்போந்த आत्माவுக்கு, இனி ஒரு பிறப்பின்றி रक्षिக்க வேண்டுமென, आचार्यர் उपदेशित्த द्वयத்தாலே, श्रीमन्नारायणனுடைய पादங்களை शरणமாகப் பற்றி, आत्मात्मीय भरसमर्पणं செய்தல்;

उत्तरकृत्यமாவது – आचार्यன் காட்டிக்கொடுக்க நம்மை ஏற்ற ईश्वरன், இனி ஒருபோதும் கைவிடான் என்ற தேற்றத்தோடே, இங்கிருந்த காலம் अपवर्ग पूर्वरङ्गமான निरपराध अनुकूल वृत्तिயோடு நடப்பது,"

என்பவைகளை उपदेशिப்பது.

இப்படிப்பட்ட सदाचार्यர்களைப் பெற்றதுதான் நம் மடப்பள்ளியாச்சான் संप्रदायम् । இதன் வரிசை, கீழே गुरुपरंपरासाराधिकारத்தில் அநுஸந்திக்கப்பட்டது.

## 31. शिष्यकृत्याधिकार:

*"இருளனைத்தும் மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு"*

**शिष्यன் இருக்கவேண்டிய நிலை :**

| நிலை | பயன் |
|---|---|
| தன் அறியாமை இருளைப் போக்கின आचार्यனின் செய்நன்றியை மறவாமலும் आचार्यனுக்கு द्रोहं நினைக்காமலும் இருக்கவேணும். | இதனால், பகவானின்/ லோகத்தாரின் நிந்தனைக்கும்/ தண்டனைக்கும் ஆளாகாமல் தப்பிக்கலாம். |
| சக்திக்கேற்ற குருதக்ஷிணை ஸமர்ப்பிக்கவேணும். | कर्तव्यத்திலிருந்து பிறழாமல் தப்பிக்கலாம். |
| பகவானிடத்திற்போல் ஆசார்யனிடத்திலும் भक्ति-श्रद्धादिகளுடன் वर्तिக்கவேணும். | शास्त्रं என்ற கண்களைப் பெற்றும் குருடனாகாமலும், भगवदनुभवத்துக்கு ஈடான आचार्य अनुभवத்தை, பிறவி ஏழையான இவன், இழக்காமலும் இருக்கலாம். |

**शिष्यன் தவிர்க்கவேண்டியவை** : आचार्यன் अनुग्रहित्त धनமாகிற रहस्यार्थங்களை :

- தன் विपरीत अनुष्टानங்களினால், பிறர்க்கு பயன்படாதபடி செய்வது;
- கற்றதே प्रयोजनं என்றிருப்பது;
- பணத்திற்காக மற்றவர்க்குச் சொல்வது;
- பொருளாசையினால் அறிவைப் பெருக்குவது/ அதை பிறர்க்குப் பயன்படுத்துவது;
- அசூயை உடையவனுக்கு உபதேசிப்பது;
- अध्यात्म रहस्यங்களை गुरूपदेशமில்லாமல் தானே ஏடு பார்த்தோ, சுவரேறிக் கேட்டோ சொல்வது;
- தான் गुरुவாக நிற்கும்போது தன் शिष्यர்கள் – வணங்குதல், பணிதல், தநியனை ஸேவித்தல், शुश्रूषै செய்தல் ஆகியவை – செய்யாமல் இருக்கையில் उपदेशिப்பது;
- [स्वाचार्य भजनं செய்யாதிருத்தல் என்பது 32 अपचारங்களில் ஒன்றாகச் சொல்லப்பட்ட போதிலும்; அதனால் தெளிந்த भगवदनुभवம் என்ற संपत्தும், आत्माவின் இருப்பு தொடர்வதற்குக் காரணமான शेषत्व अनुसन्धानपूर्वक स्वनिष्ठैயாகிற ஆயுளும் குலையும்ஆபத்து இருந்தும்] தான் उपदेशिக்கும்போது, தன் ஆசார்யனைப் ப்ரகாசிக்காமல் இருப்பது.

## 32. निगमनाधिकार:

*"நிலைகள் தானுளனாய் உகக்கும் தரம்"*

**இதுவரை சொன்னவைகள் . . . . .**

- श्रुति-स्मृति-सूत्र-संप्रदायங்களால் குறிப்பிடப்பட்டதும்;
- அவற்றைத் தழுவிய யுக்திகளின் துணைகொண்டதும்;
- आचार्यரிடம் கேட்டபடி சொல்லப்பட்டவையும்;
- स्वामि देशिकன் உள்ளத்தில் प्रामाणिकமாய்த் தோன்றியபடியும்;
- अज्ञान-संशय-विपर्ययங்கள் தீர விளக்கப்பட்டவையுமாம்.

**இந்த अर्थங்கள் குற்றமற்றவை :**

இவைகள் நம் पूर्वाचार्यர்கள் சென்ற வழியைப் பின்பற்றி சொல்லப்பட்டவையாதலால், தவறு நேர்வதற்கு संभावனையே இல்லை.

**இவ் अर्थங்களைக் கேட்டறியவேண்டிய முறை :**

இவைகளையெல்லாம், सत्संप्रदायமுடைய – सदाचार्यனிடம் – சீரியமுறையில் அணுகி – வணக்கத்துடன் - கவனமாகக் கேட்டு - அவைகளை ஒட்டிய நல்வார்த்தைகளையும் ஆய்ந்தெடுத்து - अभ्यासத்தினால் தெளிந்துகொள்ளல் வேண்டும்.

**सत्संप्रदायத்தைப் பின்பற்றுவோர் பெறும் பேறு :**

- ✓ தனிவழியில் செல்லும் பயம் இல்லாமை;
- ✓ कर्मप्रवाहத்துக்கு அஞ்சவேண்டாமை;
- ✓ எல்லாவற்றினும் உயர்ந்ததும், परमपदத்தை அடைவிப்பதும், परमपुरुषार्थ-सन्तोषத்தைக் கொடுப்பதுமான मार्गं அறிந்தவர் ஆதல்;
- ✓ अर्चिरादिगतिயிலே சென்றக்கால், "இருந்த நாள் இறைகொண்ட தேவதைகளெல்லாம், காணிக்கையிட்டுக் கண்டு अनुवर्तिக்கும்" அனுபவம் பெறுதல்;
- ✓ அவர்களுக்கும் எட்டவொண்ணாத எல்லைகளையெல்லாம் கடத்தல்;
- ✓ नित्यसूरिகள் திரளில் சேர்ந்து, கலங்காப் பெருநகரில் திருவுடன் அமர்ந்த தெய்வநாயகனின் தாளிணைக் கீழ் सर्वदेश- सर्वकाल- सर्वावस्थोचित-सर्वविध कैङ्कर्यங்களைப் பெற்று வாழ்வது.

ஆக, "संप्रदाय कालक्षेपங்களால் காலத்தைக் கழித்துக்கொண்டு, எம்பெருமானின் सङ्कल्पத்தை எதிர்பார்த்து நின்றதாக" ஸாதிக்கும் स्वामि देशिकன், அதன் மூலம் அதைப் பின் பற்றுமாறு நமக்கும் उपदेशिக்கிறார்.

रहस्यत्रयसारोऽयं वेङ्कटेश विपश्चिता । शरण्य दंपति विदां संमत: समगृह्यत ॥

कवितार्किकसिंहाय कल्याण गुणशालिने । श्रीमते वेङ्कटेशाय वेदान्त गुरवे नम: ॥

*சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்*

श्रीरस्तु

श्री:

ஸ்ரீ திருக்குடந்தை தேசிகன் என்று ப்ரஸித்தரான ஸ்ரீகோபாலதேசிகன்



அருளிச்செய்த

श्री वेदान्त देशिक दिव्य सहस्रनामवळियில்

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார விஷய गर्भமான நாமாவளி



| अधिकारம் | எண் | நாமாவளி |
|---|---|---|
| गुरुपरंपरासारம் | 794 | ओं द्रमिडोपनिषद् द्रष्टृ सूरिबृन्द उपकरविदे नम: |
| | 795 | मोक्षैकसाधन अचार्यवत्ता साधन तत्पराय नम: |
| | 796 | स्वाचार्यादि शरण्यान्त भक्तिक्रम विशेषविदे नम: |
| | 797 | श्रीमद् भगवदाचार्यभाव बाधक बाधकाय नम: |
| | 798 | शठारि नाथयोगीन्द्र गुरुशिष्यत्व साधकाय नम: |
| | 799 | अपरीक्ष्य रहस्यादिप्रदान बहुदोषविदे नम: |
| | 800 | भक्तिप्रकाशित गुरुवंश शिष्य निबन्धनाय नम: |
| | 801 | असंभाष्यादि संभाषण निष्कृति गुरुस्मृतये नम: |
| उपोत्घातம் | 802 | ओं मोक्षार्थ शास्त्र अनारंभ हेतु धिक्कृति दक्षिणाय नम: |
| | 803 | आचार्य निकटप्राप्ति हेतुषट्क निरूपकाय नम: |
| सारनिष्कर्षம் | 804 | ओं सारनिष्कर्ष कुशलाय नम: |
| प्रधानप्रतितन्त्रம் | 805 | ओं प्रधान प्रतितन्त्र विदे नम: |
| | 806 | ईश आधारकता शेषित्व नियन्तृत्व बोधकाय नम: |
| | 807 | जीव आधेयत्व शेषत्व नियाम्यत्व निरूपकाय नम: |
| | 808 | सङ्कल्पाधीन नित्याख्य वस्तुस्थिति विशेष विदे नम: |
| | 809 | शेष शेष्यादि सम्बन्ध फलितार्थ विशेष विदे नम: |
| अर्थपञ्चकம் | 810 | ओं अर्थपञ्चक तत्वज्ञाय नम: |
| तत्वत्रय चिन्तनம் | 811 | ओं तत्वत्रय विशेष विदे नम: |
| | 812 | स्वाधीन त्रिविध अचित् चित् स्वरूप स्थिति प्रवृत्ति दृशे नम: |
| | 813 | प्रमाणगम्य धर्मिस्वरूप रूपक धर्म विदे नम: |
| | 814 | जीवलक्षण तत्वज्ञाय नम: |
| | 815 | वद्धलक्षण लक्षित्रे नम: |
| | 816 | बद्ध स्थिति प्रवृतिज्ञाय नम: |
| | 817 | मक्तलक्षण लक्षित्रे नम: |

| | | |
|---|---|---|
| | 818 | मुक्तस्थिति प्रवृत्तिज्ञाय नम: |
| | 819 | नित्यलक्षण लक्षित्रे नम: |
| | 820 | नित्यस्थितिप्रवृत्तिज्ञाय नम: |
| | 821 | नित्यादि अन्योन्य भेददृशे नम: |
| | 822 | नित्य मुक्तात्म कैङ्कर्य सार्वविध्य निरूपकाय नम: |
| | 823 | त्रिगुण स्थिति प्रवृत्तिज्ञाय नम: |
| | 824 | ईश लक्षण लक्षित्रे नम: |
| | 825 | अवतार रहस्यज्ञाय नम: |
| | 826 | परव्यूहादि भेददृशे नम: |
| | 827 | श्री जगत्कारणत्वादि साधक अनेक युक्तिमते नम: |
| | 828 | श्रीमन् नारायण परदेवता निर्णयक्षमाय नम: |
| | 829 | सर्वदेव परब्रह्म अभेद खण्डन दक्षिणाय नम: |
| | 830 | त्रिमूर्ति साम्य दमनाय नम: |
| | 831 | त्रिमूर्ति ऐक्य विनाशकाय नम: |
| | 832 | त्रिमूर्ति उत्तीर्ण परमदेवता खण्डन क्षमाय नम: |
| | 833 | त्रिमूर्ति अन्तर्गत ब्रह्मरुद्र पारम्य खण्डनाय नम: |
| | 834 | ब्रह्मरुद्रादि कार्यत्व कर्मवश्यत्व साधकाय नम: |
| | 835 | ब्रह्मरुद्रादि भगवत् पारतन्त्र्य विचारकाय नम: |
| | 836 | ब्रह्मादि भगवन्मायायत्त धी ह्रासवृत्ति दृशे नम: |
| | 837 | विष्णुदर्शित सर्ग उपसर्गादि विधि शम्भुदृशे नम: |
| | 838 | शुभाश्रयत्व रहित ब्रह्मरुद्रादि साधकाय नम: |
| | 839 | ब्रह्मरुद्रादि त्रिगुण पारवश्य निरूपकाय नम: |
| | 840 | ब्रह्मरुद्रादि भगवदाश्रितत्व विधायकाय नम: |
| பரதேவதா பரமார்த்யம் | 841 | ब्रह्मरुद्रादि भगवद् विभूतित्व निरूपकाय नम: |
| | 842 | ब्रह्मरुद्रादि भगवत्प्रकारत्व अभिधायकाय नम: |
| | 843 | ब्रह्मरुद्रादि भगवत् शरीरत्व प्रकाशकाय नम: |
| | 844 | ब्रह्मरुद्रादि भगवद् दासत्व स्थापन क्षमाय नम: |
| | 845 | सात्विक उपपत्तिहेतु मधुसूदन दृष्टि दृशे नम: |
| | 846 | रजस् तमोगुणासक्ति हेतु ब्रह्मादि दृष्टि दृशे नम: |
| | 847 | ब्रह्मरुद्रादि मोक्षार्थि जनोपास्यत्व बाधकाय नम: |
| | 848 | ब्रह्मरुद्रादि उपास्यत्व वचोनिर्वाहकारकाय नम: |

| | | |
|---|---|---|
| | 849 | ब्रह्मरुद्रादि पारम्य दृक् कर्म अनर्हतादि दृशे नम: |
| | 850 | ब्रह्मादि भगवत् साम्यदृक् पाषण्डित्व साधकाय नम: |
| | 851 | विष्णु निग्राह्य पातृत्वरहित इतर दैवदृशे नम: |
| | 852 | क्षिप्रेतर फलप्राप्ति साधनेतर दैवदृशे नम: |
| | 853 | काम्यद्यर्थ आश्रित अनन्त पुरुषार्थद विष्णुधिये नम: |
| | 854 | अज्ञ अन्यदेव यजनप्रीत विष्णु प्रकाशकाय नम: |
| | 855 | अज्ञ अन्यदेव यजन फलवैकल्य साधकाय नम: |
| | 856 | विष्णवात्मक अन्यदेवज्ञ कर्मपौष्कल्य साधकाय नम: |
| | 857 | निष्काम विष्णुसेवा अनुषङ्ग अन्यफल सिद्धिदृशे नम: |
| | 858 | पराङ्कुशादि श्रीसूक्ति साधित उत्कृष्ट माधवाय नम: |
| मुमुक्षुत्वம் | 859 | ओं मुमुक्षाहेतु सारज्ञाय नम: |
| अधिकारिविभागம் | 860 | ओं अधिकारि विभागविधे नम: |
| | 861 | प्रपत्ति अवान्तरभिदा वेत्रे नम: |
| उपायविभागம் | 862 | ओं उपाय विभागविदे नम: |
| प्रपत्तियोग्या | 863 | ओं प्रपत्ति अधिक्रिया पञ्चदश निर्णय धूर्वहाय नम: |
| परिकरविभागம் | 864 | ओं न्यासविद्या अङ्गपञ्चत्व उपकार व्याकृति क्षमाय नम: |
| | 865 | विश्वास उत्कर्ष विहतिकारण व्याहृति क्षमाय नम: |
| | 866 | विश्वास गोप्तृवरण शब्दार्थत्व प्रकारविदे नम: |
| साङ्गप्रपदनம் | 867 | ओं प्रपत्ति लक्षण अभिज्ञाय नम: |
| | 868 | न्यासविद्याङ्गि वेदित्रे नम: |
| | 869 | त्रिवर्ग मोक्षजनक न्यासविद्या विशेषविदे नम: |
| | 870 | साङ्गप्रपत्ति अनुष्टान प्रयोगविधि साधकाय नम: |
| | 871 | साङ्गप्रपत्ति अनुष्ठान सकृत्व स्थापनक्षमाय नम: |
| कृतकृत्यம் | 872 | ओं सहेतु कृतकृत्यत्व अनुसन्धान विशारदाय नम: |
| स्वनिष्ठाभिज्ञानம் | 873 | ओं स्वस्वरूप उपाय फल निष्ठात्रय विवेकवते नम: |
| उत्तरकृत्यம் | 874 | ओं प्रपत्ति उत्तरकर्तव्य कृत्य निर्णय दक्षिणाय नम: |
| पुरुषार्थकाष्ठै | 875 | ओं भगवद्दास कैङ्कर्य दास्य द्वैविद्य वेदित्रे नम: |
| | 876 | भगवद्दास दास्यप्राप्त अनन्यत्व विरोधघ्ने नम: |
| | 877 | श्रीमद्भागवत अन्योन्यदास्य साधन तत्पराय नम: |
| शास्त्रीय नियमनம் | 878 | ओं प्रपन्नान्वह संभाव्य शास्त्रीय नियमप्रियाय नम: |
| | 879 | भाष्यकारोक्त शास्त्रानुमत कैङ्कर्य सारविदे नम: |
| | 880 | उल्लङ्घित आज्ञाकरण अवैष्णवत्व प्रसाधकाय नम: |

| | | |
|---|---|---|
| अपराधपरिहारம் | 881 | ओं प्रपन्न आज्ञातिक्रमादि प्रायश्चित्त विशेषविदे नम: |
| | 882 | एनोनिष्कृति उदासीन प्रपन्न लघुदण्ड दृशे नम: |
| | 883 | आज्ञातिलङ्घि कठिन प्रपन्न नरकाप्रियाय नम: |
| | 884 | प्रपन्न बुद्धिपूर्वैन: प्रायश्चित्त विशेषविदे नम: |
| | 885 | महापात प्रपन्न प्रसिद्ध निष्कृति वेदित्रे नम: |
| | 886 | कठिन अनियतायु: प्रपन्न आयुर्वृद्धि साधकाय नम: |
| | 887 | मोक्षार्थ न्यास संहार्य धीपूर्वोत्तर पापघ्ने नम: |
| | 888 | कृतपातक नाशार्थ शरणागति वेदित्रे नम: |
| स्थानविशेषம் | 889 | ओं प्रपन्नान्वह वासार्हस्थान व्याख्यान कोविदाय नम: |
| निर्याणம் | 890 | ओं विकलाङ्ग न्यासविद्या पूर्णहेतुत्व साधकाय नम: |
| | 891 | देवान्तर दृढासक्त प्रपन्न नरकोक्तिमते नम: |
| | 892 | विद्वदेकान्त उत्क्रमण क्रमदर्शन तोषितय नम: |
| | 893 | उपायारम्भ नषाश्लिष्ट पूर्वोत्तर पापदृशे नम: |
| | 894 | इष्टावधूत अन्यफल धी वैमुख्य प्रपन्न विदे नम: |
| | 895 | विनष्टाश्लिष्ट पुण्याघ सुहृद्विट् सङ्क्रमोक्ति विदे नम: |
| | 896 | विनष्टाश्लिष्ट पुण्याघ विधूनन पदार्थविदे नम: |
| | 897 | बुधपुण्याघ मित्रारि सङ्क्रान्ति व्याज बोधकाय नम: |
| गतिचिन्तनம் | 898 | ओं अर्चिरादि गतिज्ञात्रे नम: |
| | 899 | सूक्ष्मदेह विसर्गविदे नम: |
| | 900 | दिव्यदेश प्राप्तिपूर्व क्रमदर्शन दक्षिणाय नम: |
| | 901 | मुक्त प्रसन्न सानन्द विभुज्ञान धुरन्धराय नम: |
| | 902 | मधुविद्यादि अधीकारि गत्यन्तर विशेषविदे नम: |
| परिपूर्णब्रह्मानुभवம் | 903 | ओं मुख्यवस्था आनन्द तारतम्यवाद विनाशकाय नम: |
| | 904 | जगद्स्रष्ट्र परब्रह्म तुल्यानन्द विमुक्ति दृशे नम: |
| | 905 | परिपूर्ण परब्रह्मानुभव श्रुतिवेदित्रे नम: |
| | 906 | सुनिश्चितार्थ परब्रह्मानुभव रीतिकाय नम: |
| | 907 | संसार प्रतिकूलार्थ मुख्यवस्था आनुकूल्य दृशे नम: |
| | 908 | श्रीपतित्व परब्रह्मतुल्य आनन्द विमुक्ति दृशे नम: |
| | 909 | ओं सदाचार्योपदेश एकाधिकारि ज्ञापन क्षमाय नम: |
| | 910 | सत्तर्क उपदेशाधिकारि व्याकृति कोविदाय नम: |
| | 911 | व्याज अनपेक्ष भगवद्रक्षकत्व उक्तिवारकाय नम: |

| | | |
|---|---|---|
| सिद्धोपायशोधनம் | 912 | श्रीमत् स्वातन्त्र्य कारुण्योपयोग व्यकृति क्षमाय नमः |
| | 913 | प्रपत्ति अधिक्रियावत् विशेषणत्व निरोधकाय नमः |
| | 914 | मोक्षानुपाय शरणव्रज्यावाद विनाशकाय नमः |
| | 915 | प्रतिबन्ध निरासैक उपयुक्त व्याज वेदित्रे नमः |
| | 916 | देवस्वातन्त्र्य करुणामूल व्याज निरासघ्ने नमः |
| | 917 | श्रीमत् संबन्धमूल व्याजनिरास मतान्तकाय नमः |
| | 918 | अव्याज भगवत् पात्रभाव मानोपपत्तिघ्ने नमः |
| | 919 | द्वयपूर्व श्रीपद उपलक्षकत्व विनाशकाय नमः |
| | 920 | श्रीविशेषण भवोत्थ उपायद्वित्व विभञ्जकाय नमः |
| | 921 | निर्व्यूढ शरणव्रज्या विश्वासाभेद पूर्ववाचे नमः |
| | 922 | प्रपत्ति प्रार्थनाभेद वाङ्निर्वाह विचक्षणाय नमः |
| | 923 | वाक्यजन्यज्ञान मोक्षोपायत्व मतभञ्जकाय नमः |
| | 924 | स्वरक्षणार्थ व्यापार निवृत्ति उद्धृति धूर्वहाय नमः |
| | 925 | प्रपत्ति मोक्षोपायत्व बाधक व्रातनाशकाय नम |
| साध्योपायशोधनம் | 926 | ओं चरमश्लोक निखिल धर्मत्याग परत्वघ्ने नमः |
| | 927 | निषिद्ध वर्जन अधर्मभावत्व उक्ति अपनोदनाय नमः |
| | 928 | उपासन स्वरूप उपाय स्वरूप विरोदघ्ने नमः |
| | 929 | वर्णाश्रमादि धर्मस्वरूप रोध विनाशकाय नमः |
| | 930 | ऐकान्त च्छेद्यन्यदेव परवर्णादि धर्मघ्ने नमः |
| | 931 | भक्ति विद्यासिद्धहेतु प्ररोचनकरत्वघ्ने नमः |
| | 932 | भक्तिविद्या शिष्टलोक अपरिग्रह निवारकाय नमः |
| | 933 | भरन्यासादि सकलकाल धर्मत्व भञ्जनाय नमः |
| | 934 | न्यासप्रशंसकाय नमः |
| | 935 | न्यास भक्त्याधिक्य प्रदर्शकाय नमः |
| | 936 | अनुकूलत्व सङ्कल्पादि अवश्यंभाव वेदित्रे नमः |
| | 937 | विश्वासाङ्ग महत्वान्तराय भङ्ग विचक्षणाय नमः |
| | 938 | प्रपन्न भगवत्प्रेम तारतम्य विधायकाय नमः |
| | 939 | गुरुभक्ति लघुन्यास फलैक्योक्ति विचक्षणाय नमः |
| | 940 | पूर्वपूर्व अकृतांशार्थ पुनःप्रपदनोक्तिमते नमः |
| | 941 | ऐहिकार्थ न्यासकर्तृ हेतुवैकल्य साधकाय नमः |
| | 942 | अभियानादि पञ्चावसर कृत्य फलोक्तिमते नमः |

| | | |
|---|---|---|
| प्रभाव व्यवस्தை | 943 | ओं विष्णुभक्त चतुर्थादि ब्राह्मण्य विनिवारकाय नम: ஓம் |
| | 944 | विदुरादि स्वजात्युक्त धर्मालङ्घन दृष्टिमते नम: |
| | 945 | निर्व्यूढ विदुर ब्रह्ममेध संस्कृति सूक्तिकाय नम: |
| | 946 | यद्वीश विदुरान्न आदनोक्ति निर्वाह दक्षिणाय नम: |
| | 947 | अतिदेश अनर्हकारि सूनुवृत्त प्रकाशकाय नम: |
| | 948 | भगवद् भक्त शूद्रादि धीदानादि कृतिप्रियाय नम: |
| | 949 | चैत्तकायिक शूद्रत्वभेद व्याख्यान दक्षिणाय नम: |
| | 950 | नारायणैक निष्ठेति वचनार्थ प्रदर्शकाय नम: |
| | 951 | निषिद्ध त्याग धर्माख्या मुख्यार्थत्व विभञ्जकाय नम: |
| प्रभाव रக்ஷை | 952 | ओं श्रीमत्प्रभाव सन्त्रात्रे नम: |
| | 953 | उपाय माहात्म्य रक्षकाय नम: |
| | 954 | भगवत् क्षेत्रमाहात्म्य दृशे नम: |
| | 955 | वैष्णव महत्व विदे नम: |
| मूलमन्त्रம் | 956 | ओं सौङ्कार मूलमन्त्र अष्टाक्षरत्व त्राण दीक्षिताय नम: |
| | 957 | द्वय मूलमनु व्याख्या रूपत्व परिशोधकाय नम: |
| | 958 | मूलमन्त्र अष्टाक्षर पद तत्वार्थ विशेषविदे नम: |
| | 959 | मूलमन्त्र महावाक्य योजना दशकादराय नम: |
| द्वयं | 960 | ओं द्वय प्रभाव विज्ञात्रे नम: |
| | 961 | द्वय शब्द निरुक्तिविदे नम: |
| | 962 | द्वय त्रयीमूल तान्त्रमन्त्रत्व स्थापन क्षमाय नम: |
| | 963 | लक्ष्मी पुरुषकारत्व मानज्ञाय नम: |
| | 964 | श्री पदार्थविदे नम: |
| | 965 | द्वयमन्त्र पदव्रात प्रत्येक व्याकृति प्रियाय नम: |
| | 966 | श्रीश उपायान्तर स्थानापत्ति सारार्थ शोधकाय नम: |
| | 967 | कार्पण्य गोप्तृवरण सार्थोपायत्व याचनाय नम: |
| | 968 | उपाय वरणादि आत्मनिक्षेप अङ्गित्व साधकाय नम: |
| | 969 | द्वयोत्तरार्ध गम्यार्थ पुरुषार्थ निरूपकय नम: |
| | 970 | द्वयमन्त्र महावाक्य योजनात्रय साधकाय नम: |
| | 971 | ओं श्री कृष्ण चरमश्लोक अवतार व्याकृति क्षमाय नम: |
| | 972 | चरमश्लोक धर्मोक्ति वेद्य निर्णय कोविदाय नम: |
| | 973 | पुरुषोत्तम धी मोक्षहेतुत्व मत भञ्जनाय नम: |
| | 974 | अवतार रहस्य ज्ञानादि मोक्षकरत्वघ्ने नम: |

| | | |
|---|---|---|
| चरमश्लोकம் | 975 | चरमश्लोक धर्मत्याग अनुवाद मतप्रियाय नमः |
| | 976 | प्रपत्ति धर्मत्याग अङ्गोक्ति विधि भञ्जकाय नमः |
| | 977 | क्षेत्रज्ञ उपासनोपाय नित्य अशक्तत्व भञ्जकाय नमः |
| | 978 | एकवाक्य विधित्व अनुवादत्व अनुपपत्ति विदे नमः |
| | 979 | गुरूपाय लघूपाय गीः प्ररोचकता प्रियाय नमः |
| | 980 | भक्ति विद्या मन्दधीक अधिकारित्व मतान्तकय नमः |
| | 981 | उपासना मन्दविश्वास अधिकारित्व साधकाय नमः |
| | 982 | उपासना लोकसङ्ग्रहार्थ मत मारकाय नमः |
| | 983 | प्रवृत्तिरूप सकल धर्मत्याग मतान्तकाय नमः |
| | 984 | प्रपत्ति अनुष्ठानकाल सर्वधर्म विमुक्तिघ्ने नमः |
| | 985 | प्रदक्षिण प्रणामादि अनुज्ञा कैङ्कर्य हेतुदृशे नमः |
| | 986 | अवज्ञाकृत भक्तादि जन्मचिन्तादि दोषदृशे नमः |
| | 987 | शास्त्र व्यवस्था सिद्ध्यर्थ भक्तजन्मादि चिन्तकाय नमः |
| | 988 | सरकल्क स्वरूप श्रीमत् कैङ्कर्य विभागदृशे नमः |
| | 989 | संबन्ध धी मुखानेक मोक्षहेतु मतान्तकाय नमः |
| | 990 | चरमश्लोक निखिल धर्मत्याग षडर्थविदे नमः |
| | 991 | चरमश्लोक एकशब्द षडर्थोक्ति विचक्षणाय नमः |
| | 992 | परतन्त्र स्वभावात्म विध्यनर्हत्व भञ्जकाय नमः |
| | 993 | परतन्त्र आत्म कर्तृत्व स्वरूप विशदोक्तिमते नमः |
| | 994 | श्रीमत् कर्तृप्रेरक अनुमन्तृ कारयितृत्व विदे नमः |
| | 995 | क्रियमाणाघ विध्वंसि प्रपत्ति प्रतिपादकाय नमः |
| | 996 | ब्रह्मविद्यारम्भ नष्टाश्लिष्ट कर्मस्वरूप विदे नमः |
| | 997 | प्रियाप्रिय उपसङ्क्रान्त विद्वत् पुण्याघ वेदित्रे नमः |
| | 998 | प्राप्ति अन्तराय विदे नमः |
| | 999 | साध्योपाय रोधि विशेष विदे नमः |
| | 1000 | प्रतिकूल अनुभूत्यादि हेतु पाप स्वरूपविदे नमः |
| | 1001 | गुणाष्टक आविर्भावोक्ति वेद्यार्थ परिशोधकाय नमः |
| | 1002 | कैवल्याख्य पुमर्थ स्वरूप नित्यत्व बाधकाय नमः |
| | 1003 | माशुचश्शब्द निर्णुन्न शोक अनेकविधत्व विदे नमः |
| आचार्यकृत्यம் | 1004 | ओं अचार्य कृत्यविदे नमः |
| शिष्यकृत्यம் | 1005 | ओं शिष्य कृत्य वेदनाय नमः |
| निगमनம் | 1006 | ओम् यतीन्द्र माहानसिक सम्प्रदाय सुधाप्रदाय नमः |

श्रीमते श्री निगमान्त महा देशिकाय नमः